கோகுலம்

GOKULAM மே 2000 ரூ. 6/-



ஒரு மான்ஸ்டர் ஃபிங்கர் கிடைத்ததல்லவா







பெறுங்கள்

ஒரு பிராங்கின்ஸ்டைன் மாஸ்க் இலவசமாய்

இந்த கோடையில் பல லட்சக்கணக்கான ரஸ்னா பேக்குகளில் உங்களை குஷிப்படுத்துகிற பிராங்கி ஒண்ணு உள்ளே இருக்கு. அதுல சில ஃபன் கிரீச்சர்கள், சில ஃபன் எரேஸர்கள். ஆயிரக்கணக்கான பேக்குகளில்* மான்ஸ்டர் ஃபிங்கர் ஒண்ணும், லெட்டரும் இருக்கு. லெட்டரை எங்களுக்கு திருப்பி அனுப்பி, ஒரு லைஃப் சைஸ் லேடக்ஸ் ஃபிராங்கின்ஸ்டைன் மாஸ்க் வாங்கிக்குங்க, **இலவசமா !**

* 32 கிளாஸ் ரஸ்னா ஸாஃப்ட் டிரிங்க் கான்சன்ட்ரேட் பேக் மேல மட்டுமே இந்த சலுகை.
இந்த சலுகை இல்லாமலும் பேக்குகள் கிடைக்குது.

For more Pranky Fun visit: www.gogokid.com

Mudra:RASNA:99/479 Tam



கோகுலம்

2000

மே

மலர் : 18

இதழ் : 4

உயிர்களிடத்தில் அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று
தானறிதல் வேணும்.
- பாரதியார்.

அன்புள்ள சிறுவர் சிறுமியரே,

கங்கிராட்ஸ்!

பிரமாதமாகத் தேர்வுகளை எழுதி மேல் வகுப்புக்குச் செல்லத் தகுதி பெற்றிருப்பீர்கள்!

விடுமுறையைப் பலவாறு மகிழ்ச்சியுடன் அனுபவிக்கவும் புதிய புத்தகங்களுக்கு அட்டை போட்டதும் லேபில்கள் ஒட்டவும் இந்தக் கோகுலம் இதழிலும் அடுத்த இதழிலும் பல வசதிகளைச் செய்திருக் கிறோம். சந்தோஷம்தானே!

விடுமுறையில் வெளியூர் செல்கிறீர்களா? பயணத்தின் போது படிக்க கோகுலம் மறக்காமல் எடுத்துச் செல்லுங்கள்! சுற்றுலாவின் போது பெற்றோருக்கு அனுசரணையாக நடந்து கொள்ளுங்கள். அவர்



களுடைய பட்ஜெட்டைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப ஒத்துழைப்பு கொடுங்கள். பிடிவாதத்துக்குக் கடிவாளம் போட்டு ஒப்புரவுக்குப் பச் சைக் கொடி காட்டினால் அதிலிருந்து கிடைக்கும் இன்பமே அலாதி யானது; அது சுற்றுலாவைப் பல மடங்கு மகிழ்ச்சி நிரம்பியதாக உரு வாக்கி விடும்!

நீங்கள் செல்லும் புதிய இடங்களில் வேடிக்கை பார்ப்பதோடு நிற்காமல், அவை குறித்து பல்வேறு விஷயங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். கையில் ஒரு பாக்கெட் டயரி அல்லது சிறிய நோட்டுப் புத்தகம் இருந்தால் குறிப்புகள் கூட எடுத்துக் கொள்ளலாம். வீடு திரும்பிய பிறகு குறிப்புகளைப் புரட்டிப் பார்த்தால் - நினைவுகளை அசை போட்டால் - பல புதிய விஷயங்களைத் தெரிந்து கொண்ட திருப்தி உண்டாகும். சுவாரஸ்யமான அனுபவங்களை ஒரு பக்கக் கட்டுரை வடிவில் கோகுலம் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் செய்யலாம். பிரசுரமானால் கட்டுரையின் சுவைக்கு ஏற்ப சன்மானமும் உண்டு!

அன்புடன்,

கி. ராஜேந்திரன்
ஆசிரியர்.

கோகுலம்

மே 2000

இந்த இதழில்...

கோகுலம் க்விஸ் முடிவு


மார்ச் க்விஸ் போட்டியில் சரியான விடைகளை எழுதிய பதின்மூன்று பேர் பரிசு பெறுகிறார்கள்.

ரூபாய் பதினைந்து பரிசு பெறுவோர் :

1. க. தயாபரன், சைதாப்பேட்டை, சென்னை.
2. மு. நாராயணசாமி, ஆறாம் வகுப்பு, ஊ.ஒ.ந.நி. பள்ளி, நொச்சலூர், செஞ்சி தாலுகா.
3. க. இளவரசி, திருமலைராயன் பட்டினம்.
4. சி. சுப்புலட்சுமி, எட்டாம் வகுப்பு, காந்திஜி அரசினர் மேல்நிலைப் பள்ளி,சொக்காம்பாளையம் தாலுகா.
5. டி. ஜஸ்டின் தினகரன், விருதுநகர்.
6. வி. எழில்மதி, தெற்கு உடையார் பாளையம், சேலம் மாவட்டம்.
7. டி.எஸ். விஜய், நங்கநல்லூர். சென்னை.
8. எஸ். கவிதா, ஏழாம் வகுப்பு, திருநெல்வேலி.
9. வை. அர்விந்த், நெய்வேலி.
10. வீ. மணிமாறன், வரிச்சிக்குடி அஞ்சல், காரைக்கால்.
11. செ. அர்ஜுனன், ஒன்பதாம் வகுப்பு, ஜவஹர் நவோதயா வித்யாலயா, ராயன் பாளையம், காரைக் கால்.
12. எம். தெய்வ மணி, எட்டாம் வகுப்பு, காந்திஜி அரசு மேல் நிலைப் பள்ளி, சொக் காம்பாளையம், கோவை மாவட்டம்.







13. ம. செல்வி, ஆறாம் வகுப்பு, ஊ.ஒ.ந. பள்ளி, நொச்சலூர், செஞ்சி தாலுகா.

சரியான விடை :

1. சமீபத்தில் அடைக்கலம் தேடி இந்தியாவிற்கு வந்த சீன பௌத்தத் துறவி கர்மபா.

2. நம் இதயத்தில் 4 அறைகள் உள்ளன.

3. இடிதாங்கியைக் கண்டுபிடித்தவர் பெஞ்சமின் ஃபிராங்ளின்.

4. நமது உடலின் சராசரி வெப்ப நிலை 98.4 டிகிரி பாரன்ஹீட் அல்லது 36.9 டிகிரி செல்ஷியஸ்.

5. நம்மைக் கடிப்பது பெண் கொசுக்கள்.

6. உயிர்ச்சத்து அல்லது உயிர்ப் பொருள் என்றழைக்கப்படுவது புரோட்டோபிளாசம்.

7. பிராணி இனங்களில் ஆறில் ஐந்து பாகம் பூச்சி இனங்கள்.

8. வைட்டமின் பி குறைவால் ஏற்படும் நோய் பெரிபெரி.

9. ஒருதினப் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை எடுத்தவர் வாசிம் அக்ரம்.

10. அஸ்ஸாம் தலைநகரம் கௌஹாத்தி.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

கோகுலம் சுழல் கோப்பை

கோகுலம் இதழ்களில் ஒரு வருடத்தில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம்பெறுகின்றனவோ அப்பள்ளிக்கு சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு சுழல்கோப்பையை நீங்கள் பெற வேண்டுமா? உடனே படைப்புகளை அனுப்பி வையுங்கள். நீங்கள் மட்டுமின்றி உங்கள் நண்பர்களையும் எழுதச் சொல்லுங்கள். இன்னும் ஏழு மாதங்களே உள்ளன. விரைந்து செயல்படுங்கள். கோப்பையை வெல்லுங்கள்!





கடனாக வாங்கிய ஐஸ்!

மைலாப்பூர் பி.எஸ். உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போது நடந்த ஒரு சம்பவம் பசுமையாக ஞாபகத்தில் இருக்கிறது. பள்ளி வாசலில் ஐஸ் விற்றுக் கொண்டிருப்பார்கள். ஒரு நாள் ஐஸ் விற்பவரிடம் 'நாளை காசு கொடுக்கிறேன்' என்று சொல்லி ஐஸ் வாங்கி சாப்பிட்டு விட்டேன். அன்று இரவே எனக்கு நல்ல காய்ச்சல். அதன்பின் ஒரு மாதம் டைபாய்ட் காய்ச்சல் வந்து பள்ளிக்குப் போகவில்லை. அப்புறம் போனால் ஐஸ்காரன் பிடித்துக் கொண்டான். நாலணா (25 பைசா) ஐஸ் விலை வட்டி போட்டு ஒரு ரூபாய் ஆகிவிட்டது. 'ஒரு ரூபாய் கொடுக்கலேன்னா வீட்டுக்கு வந்து விடுவேன்' என்று பயமுறுத்தல் வேறு. என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஒரு ரூபாய் அந்தக் கால கட்டத்தில் எனக்குப் பெரிய விஷயம்.

அப்போது தான் அந்த யோசனை மின்னலடித்தது. என் பாட்டியின் ஆஸ்த்துமாவுக்கு மந்தைவெளியில் நாட்டு மருந்துக் கடையில் இரண்டு ரூபாய்க்கு ஒரு குறிப்பிட்ட மருந்து வாரா வாரம் வாங்குவேன். அதே மருந்து மயிலாப்பூரில் விலை சற்று குறைவுதான். எனவே இரண்டு, மூன்று முறை மயிலாப்பூருக்கு நடந்து சென்று மருந்தை வாங்கி, காசை மிச்சம் பிடித்து ஒரு ரூபாய் சேர்த்து ஐஸ்காரனிடம் தந்து விடுதலைப் பத்திரம் வாங்கினேன். இந்த சம்பவம்தான் வாழ்க்கையில் கடனே வாங்கக் கூடாது என்ற வைராக்கியத்துடன் என்னைச் செயல்பட வைத்தது.

என் அப்பா எஸ்.வி. வெங்கட்ராமன் சினிமா தொழில் நுட்பக் கலைஞர். சிறிது காலம் ஸ்ரீலங்காவின் தலைநகர் கொழும்பு விலும் பணியாற்றியிருக்கிறார். இலங்கைத் தமிழர்களிடையே உள்ள பழக்க வழக்கங்கள் மற்றவர்களை மிகவும் ஆச்சர்யப்படுத்தும். உதாரணமாக வயதில் சிறியவர்களைக் கூட 'வாங்க... போங்க' என்று மரியாதை போட்டுத் தான் பெரியவர்கள் பேசுவார்கள். அப்பா அங்கிருந்து வந்ததும் மிகவும் கண்டிப்பாக ஒரு ஆர்டர் போட்டார். சிறியவர், பெரியவர் என்ற பாகுபாடு இல்லாமல் அனைவரையும் வாங்க... போங்க... என்று மரியாதையோடு தான் பேச வேண்டும் என்பதுதான் அது. என் தங்கைக்கும் தம்பிகளுக்கும் ஏக சந்தோஷம். இன்றைக்கும் எந்த வித கெட்ட பழக்கத்துக்கும் நான் ஆட்படாமல் இருக்கிறேன் என்றால்







அதற்கான அடிப்படை என் தந்தைதான். நல்ல பண்புகளை மனத்தில் பதியும் வண்ணம் ஊட்டிவிட்டவர் அவர்தான். அனைவரும் சாப்பிடும்போது மற்றவர் தட்டைக் காட்டி 'அது வேணும்' என்று சொன்னால் அப்பாவுக்குக் கோபம் வந்து விடும். 'எனக்கு வேணும்' என்றுதான் கேட்க வேண்டும். பொய்களுக்கு- அது சிறிய விஷயமென்றாலும் பெரிய விஷயமென்றாலும் - எங்கள் வீட்டில் தடா. ஏதாவது வம்பு, தும்பில் மாட்டிக் கொண்டால் மூத்த பையனான நான் அடி வாங்கும் போதே, கடைசி தம்பி அழத் துவங்குவான் என்றால் அடியின் வேகத்தை யூகித்துக் கொள்ளலாம்.

வெல்வெட் டிராயர் அப்போது ஃபேஷன். எனக்கு அதைப் போட்டுக் கொள்ள வேண்டும் என்று ஆசை. அப்பாவும் வாங்கிக் கொடுத்தார். தெருவில் தார் போட்டுக் கொண்டிருந்தார்கள். சிறு, சிறு உருண்டையாக தாரை உருட்டி வெல்வெட் டிராயர் பைக்குள் போட்டுக் கொண்டு விட்டேன். அப்புறம் அதை எடுக்க முடியாமல் அவஸ்தைப் பட்டு அப்பாவிடம் அடிவாங்கியது பளிச் சென்று நினைவில் இருக்கிறது.

தஞ்சையில்தான் தாத்தா-பாட்டி இருந்தார்கள். அங்கு சில வருடம் இருந்தேன். முதல் வகுப்பில் சேர்த்தார்கள். ஆனால் வகுப்பில் உட்கார அடம் பிடித்தேன். 'இருட்டாய் இருக்குது வகுப்பறை' என்பதுதான் நான் சொன்ன காரணம். உடனே என்னை நேரடியாக இரண்டாம் வகுப்பில் உட்கார வைத்து விட்டார்கள். வாழ்க்கையில் தெரிந்த முதல் வெளிச்சமாக அந்த இரண்டாம் வகுப்பறையைக் கருதுகிறேன். நான்காம் வகுப்பு வரை தஞ்சை வாசம்தான். ஐந்தாவது படிப்பதற்குச் சென்னை

எஸ்.வி. சேகர்



வந்து விட்டேன். ஆறாவதிலிருந்து எஸ்.எஸ்.எல்.சி. வரை பி.எஸ். உயர்நிலைப்பள்ளிதான்.

பள்ளியில் நான் ரொம்ப ஒழுக்கமான பையன். வகுப்பில் முதல் ஐந்து ரேங்குக்குள் இல்லாவிட்டாலும் படிப்பில் நார்மலாகத்தான் இருந்தேன். பள்ளியில் படிக்கும்போதுதான் இந்தி எதிர்ப்பு போராட்டம் வந்தது. ஒரு நாள் பள்ளிக்குப் போகிறேன். கேட் மூடியிருக்கிறது. எல்லோரும் வெளியில் நிக்கறாங்க. ஆசிரியர்களான மீனாட்சி சுந்தரம், கோகுல பால சர்மா, (இவர் உடலுக்குள் பிரம்பு எங்கு வைத்திருப்பார் என்று கண்டே பிடிக்க முடியாது) ரங்கனாதன் ஆகியோர் பையன்களை எப்படி கண்ட்ரோல் செய்வது என்று யோசித்துக் கொண்டிருக்கையில் ஊர்வலம் புறப்பட்டது. மைலாப்பூர் குளத்தைத் தாண்டி, பின்னர் லஸ் முனையைத் தொட்டது ஊர்வலம். அதற்குள் மாணவர் தலைவன் 'போதும் நம் எதிர்ப்பை காட்டியாகிவிட்டது' என்று சொன்னதுமே எல்லோரும் ஜூட் விட்டு விட்டோம். நான் நண்பர்களுடன் வெலிங்டன் தியேட்டருக்குப் போய் விட்டேன்.

பின்னாட்களில் நான் 'வால் பையன்' என்ற நாடகம் போட்டாலும் பள்ளியில் எந்த நாடகங்களிலும் நடித்தது கிடையாது. ஆறாவது படிக்கும் போது சில காலம் 'ஷூ' பையனாக இருந்தேன். புரியவில்லையா? காலில் ஒரு எலும்பு கொஞ்சம் அதிகப்பிரசங்கியாக வளரத் துவங்கி விட்டது. அதை அடக்கி வைக்க ஒரே வழி எப்போதும் ஷூ போட்டுக் கொண்டிருப்பதுதான் என்று டாக்டர் சொல்லி விட்டார். பத்து லட்சத்தில் ஒருவருக்குத்தான் அதுபோன்று எலும்பு வளர்ச்சி இருக்குமாம்! காலை எழுந்தவுடன் ஷூ போட்டுக் கொள்வேன். இரவு படுக்கப் போகும் முன்தான் கழட்டுவேன். இது போல இரண்டு வருடம் ஷூ போட்டுக் கொண்டிருந்தேன். இந்த வைத்தியத்தைக் கண்டு மிரண்ட கால் எலும்பு, வளர்ச்சியை நிறுத்திக் கொண்டது. அந்தக் கால கட்டத்தில் என்னை அடையாளம் சொல்ல ஷூ தான் உதவியது. கொஞ்ச காலம் 'ஷூ சேகராக' இருந்தேன்.

அப்பா, சித்தப்பா என்று குடும்பத்தில் பலர் மேடை நாடகங்களோடு தொடர்பு கொண்டவர்கள். 'சோ'வின் விவேகா பைன் ஆர்ட்ஸ் குழுவில் இருந்தவர் சித்தப்பா. அதனால்தான் என்னையும் சேர்த்துக் கொள்ளவில்லை என்று சொன்னார்கள். (குடும்பத்தில் ஒருவருக்குத் தான் வாய்ப்பு என்று கோட்டா போலிருக்கிறது) ஆனால் நான் 'சோ' நாடகங்களைப் பள்ளியில் படிக்கும்போதே நூறு முறைகளுக்கு மேல் பார்த்திருக்கிறேன். கிரிக்கெட் விளையாட்டில் எனக்கு ஆர்வம் கிடையாது. போட்டோகிராபி எனக்கு பிடித்துப் போயிற்று. பதினோரு வயதிலேயே காமிராவைக் கையில் பிடிக்கத் துவங்கி விட்டேன். சித்தப்பா கல்யாணத்தை அந்தச் சிறிய வயதிலேயே முழுக்க படம் எடுத்திருக்கிறேன். அப்பா அடிக்கடி சொல்லும் ஒரு விஷயம் என்னவென்றால் 'நீ எதிர்காலத்தில் நியாயமான எந்தத் தொழிலில் வேண்டுமானாலும் ஈடுபடு. ஆனால் எதற்கும் அடிப்படையாகக் குறைந்த பட்சப் படிப்பு வேண்டும்' என்பதுதான்.

காலையில் எழுந்தவுடன் முகத்தை அலம்பிக் கொண்டு சாமியை வணங்கி விட்டு நெற்றிக்கு விபூதி இட்டுக் கொண்டுதான் காப்பி குடிக்க வேண்டும் என்பது அப்பாவின் அன்பான கட்டளைகளில் ஒன்று. எந்தக் காரணம் கொண்டும் மதிய வேளையில் தூங்கக் கூடாது.



திருவல்லிக்கேணி வெங்கடரங்கம் பிள்ளை தெருவில் இருந்தபோது பார்த்தசாரதி ஸ்வாமி சபாவில் நடக்கும் நாடகங்களின் வசனங்களை கொட்டகைக்கு வெளியில் இருந்தவாறு நண்பர்களுடன் கேட்டுக் கொண்டிருப்பேன். சமயத்தில் வாட்ச்மேன் 'யார்டா அது' என்று விரட்டி விடுவார். தாத்தா-பாட்டி கொடுக்கும் காசை சேர்த்து வைத்து எனக்கு வேண்டியதை வாங்கிக் கொள்வேன்.

அப்படி சேமித்துதான் முதன் முதலாக ஹெர்குலஸ் சைக்கிள் வாங்கினேன். அப்போது கலைவாணர் அரங்கத்தில் (பாலர் அரங்கம் என்று பெயர்) நல்ல கார்ட்டூன் படங்கள் போடுவார்கள். 'திருவல்லிக்கேணியில் இருந்த அத்தை வீட்டுக்குப் போகிறேன்' என்று சொல்லிவிட்டு மந்தைவெளியில் இருந்து சைக்கிளில் கலைவாணர் அரங்கம் வந்து படங்கள் பார்ப்பேன். அப்பா அடிக்கடி பாண்டிச்சேரி அரவிந்த ஆஸ்ரமத்துக்குக் கூட்டிச் செல்வார். ஒருமுறை 'மதர்' காலைத் தொட்டு வணங்கும் அரிய வாய்ப்பு கிடைத்தது. பள்ளியில் படிக்கும்போது என் கதாநாயகனாக இருந்தவர் ஜான் கென்னடி.

பத்தாவது படித்து விட்டு, விடுமுறையில் இருந்த நேரம். நண்பர் பாலகுமாரனுடன் (எழுத்தாளர்) முருடீஸ் லாட்ஜில் தங்கியிருந்த ராமமூர்த்தி என்ற ஜோசியரைப் பார்க்கப் போயிருந்தேன். ''உன்னோட எதிர்காலம் டிராமா, சினிமா''தான் என்று அடித்துச் சொன்னார் அவர். மெகானிகல் இன்ஜினியரிங் மற்றும் ரெப்ரிஜிரேஷன் ஆகியவற்றைப் படித்த பிறகும் டிராமா, சினிமாத் துறையில் இருப்பதை எண்ணிப் பார்க்கிறேன். அப்பா சொன்ன குறைந்தபட்ச படிப்பு இன்றும் கை கொடுக்கிறது.



தொகுப்பு: ப்ரியன்



யானை, குதிரை, மான், அன்னம், அலங்கார விளக்குகள், கலைநயம்மிக்க ஜாடிகள் என பொம்மைகளின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. இதில் யானை, குதிரைகளை விட மான் பொம்மை மிகவும் அசத்தலாக இருக்கிறது.

இந்தப் பொம்மைகளிலே பிரம்மாண்டமான அளவுகளுடையது கிராமங்களில் இருக்கும் அய்யனார் கோயில் மண் குதிரைகள்தான்! காவல் தெய்வங்களுக்கு வாகனங்களாக விளங்கும் யானை, குதிரைகளைப் பொம்மையாகச் செய்து நேர்த்திக் கடனாக வைப்பது இன்றும் வழக்கம்.

இன்று மண் பொம்மைகள் பெரிய பூங்காக்கள், பங்களாக்கள், கண்காட்சிக் கூடங்கள் என பல இடங்களில் அழகிற்காக வைக்கப்பட்டு வருகின்றன.

எளிதில் உடையக்கூடிய தன்மையுடையதானாலும் மண் பொம்மைகள் சுற்றுச் சூழலை மாசுபடுத்துவதில்லை.

கறுப்பிலும் சிவப்பிலும் பொம்மைகள் செய்யப்படுகின்றன. ஐம்பது ரூபாயிலிருந்து ஆயிரத்திற்கும் அதிகமான விலை வரை விற்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் சிவகங்கை, ராமநாதபுரம், வேலூர் மாவட்டங்களில் மண்பாண்டங்கள் அதிகமாக செய்யப்படுகின்றன. மண் பொம்மைகள் பாண்டிச்சேரியில் செய்யப்படுகின்றன. ராஜஸ்தான், உத்திரப்பிரதேசம் போன்ற இடங்களில் இருந்தும் மண் பொம்மைகள் தமிழ்நாட்டிற்கு வருகின்றன.

மண் பொம்மைகளைக் கைகளால் செய்வதும் உண்டு. அச்சுகளைப் பயன்படுத்தியும் செய்து வருகின்றனர்.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இருந்து வரும் மண்பாண்டக் கலை இன்னும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு மனிதப் பண்பாட்டைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும்!

மண் பொம்மைகள்!

மண்பாண்டங்களின் தோற்றம் ஆதி மனிதன் உணவு பொருட்களைச் சேகரிக்க ஆரம்பித்தபோதே தொடங்கி விட்டது எனலாம். நம் நாட்டிலும் மிகப் பழங்காலந்தொட்டே மண்பாண்டங்களின் பயன்பாடு இருந்து வந்திருக்கிறது.

ஆரம்ப காலத்தில் மண் பாத்திரங்களைச் செய்து வந்தவர்கள் காலப்போக்கில் தங்கள் கற்பனைத் திறத்தாலும் ஈடுபாட்டாலும் மண் பொம்மைகள் செய்ய ஆரம்பித்தனர். மண் பாண்டங்களும் பொம்மைகளும் நம் பண்பாட்டின் வளர்ச்சியைக் காட்டும். மொகஞ்சதாரோ காலத்து மண் பொருட்களைக் கொண்டுதான் அக்கால மக்களின் வாழ்க்கை முறையை ஆராய்ந்து அறிய முடிகிறது.

ஆரம்ப கால மண் பொம்மைகள் பலவித உருவங்களை வெளிப்படுத்தின. ஆனால் மிக அழகானவை என்று சொல்ல இயலாது. இன்று விதவிதமான வடிவங்களில் ஏராளமான மண் பொம்மைகள் அழகாகச் செய்யப்படுகின்றன.


அட்டையில் : ஹரீஷ்
வண்ணப்படம் : ஸ்ரீஹரி



மந்திரவாதி தங்கப்பன்!
கதை : ப. கார்த்திக், அனந்தபுரம்.
படம் : மகேஸ்
தங்கப்பனுக்குச் சரியான வேலை கிடைக்கவில்லை. அவன் மனைவி கண்ணம்மா. ஒருநாள் –
இங்கே பாருங்க. இன்னிக்கு ஏதாவது வேலை தேடிட்டுத்தான் வீட்டுக்கு வரணும். இந்தாங்க சாப்பாடு.
சரி வரேன்.
இரண்டு இடங்களில் வேலை கேட்டான். கிடைக்கவில்லை.
சே! வேலை யாரும் தர மாட்டேங்கிறாங்க. சரி வீட்டுக்குப் போகலாம்.
வீட்டிற்குள் நுழைந்தான் –
கண்ணம்மா பின்புறம் இருக்கா போலிருக்கு. சாப்பாட்டுடன் பரண்ல ஏறி படுத்துட வேண்டியதுதான்!
மாலை நேரம். கண்ணம்மா தோசை சுட்டாள்.
ம்... தோசை வாசம் மூக்கைத் துளைக்குதே! கண்ணம்மா இல்லாத நேரம் பார்த்துக் கீழே இறங்கணும்.
அப்போது –
கண்ணம்மா இங்கே வா.
இதோ வரேன் பொன்னம்மா.



தங்கப்பன் கீழே இறங்கி சாதுவாக உட்கார்ந்தான். திரும்பி வந்தாள் கண்ணம்மா.
என்னங்க, எப்ப வந்தீங்க? வேலை கிடைச்சிடுச்சா?
ம்... இப்பத்தான் வந்தேன். ஒரு மந்திரவாதியிடம் மந்திரம் கற்றுக் கொண்டேன்.
மந்திரமா? என்னால நம்ப முடியலையே!
நீ இன்னிக்கு என்னென்ன செஞ்சேன்னு சொல்லட்டுமா?
ம்... சொல்லுங்க பார்க்கலாம்.
மதியம் ஒரு மணி நேரம் தூங்கினே. அப்புறம் தோசை சுட்டு, சட்னி அரைச்சே!
ஆமாங்க! நீங்க சொல்றது நிஜம் தான். இந்த விஷயத்தை எல்லார்கிட்டேயும் சொல்லிட்டு வரேன்.
வேண்டாம் கண்ணம்மா!
சே! என்னை வம்பிலே மாட்டி விடுவாள் போலிருக்கே!
மறுநாள் –
தங்கப்பா! என் கழுதையைக் காணோம். நீதான் கண்டு பிடிச்சுக் கொடுக்கணும்.
ம்... என்ன பண்றது?




என்ன தங்கப்பா பேச மாட்டேங்கிறே?
ஒண்ணும் இல்லை. கழுதை கெட்டால் குட்டிச்சுவர்தான்!
நன்றி தங்கப்பா, நான் வரேன்.
என்ன சொல்லிட்டேன்னு இப்படிப் போறான்?
சிறிது நேரத்தில் —
தங்கப்பா நீ சொன்ன மாதிரியே முனுசாமி தெரு குட்டிச் சுவரில் என் கழுதை நின்னுது. நீ நல்ல திறமைசாலி. இந்தப் பணத்தை வச்சுக்க.
ஐயோ இது எதுல போய் முடியுமோ?
மறுநாள் —
பண்ணையார் வீட்டில் திருடு போயிடுச்சாம். உங்களை வரச் சொன்னார்.
நான் ஒண்ணும் திருடலையே!
பண்ணையார் வீட்டில் —
டேய் தங்கப்பா! மந்திரமெல்லாம் உனக்குத் தெரியுமாமே! என் வீட்டில் திருடியது யாருன்னு கண்டுபிடிச்சு சொல்லு.
ஐயா எனக்குக் கொஞ்சம் அவகாசம் வேணும்.
கண்டுபிடிச்சா ஐயாயிரம் ரூபாய் பணம். இல்லைன்னா கரும்புள்ளி, செம்புள்ளி குத்திக் கழுதை மேல ஏத்திடுவேன் ஜாக்கிரதை.
சரிங்க ஐயா வரேன்.


புலம்பிக் கொண்டே பண்ணையார் தோட்டத்திற்கு வந்தான் தங்கப்பன்.
கரும்புள்ளி, செம்புள்ளி என்ன பண்ணப் போறேன்?
டேய்! தங்கப்பன் சொல்வதைக் கேட்டியா?
என்னடா சொன்னான்?
நாமதான் திருடினோம்னு கண்டுபிடிச்சுட்டான். கரும்புலி, செம்புலின்னு நம்ம பேரைச் சொல்றானே!
பேசாமல் இவனிடம் உண்மையைச் சொல்லிடலாம்!
தங்கப்பா நாங்கதான் திருடினோம். நகைகளைக் கொடுத்துடறோம். எங்களைக் காட்டிக் கொடுக்காதே!
சரி! நகைகளை ஐயனார் கோயில் வாசலில் புதைத்து விடுங்கள். உங்களைக் காப்பாத்தறேன்.
அப்படியே செய்யறோம் தங்கப்பா.


அடுத்த நாள் –
ஐயா! நம்ம ஐயனார் கோயில் வாசலில் திருடு போன உங்க நகைகள் இருக்கு. வாங்க எடுக்கலாம்.
அப்படியா! இதோ வரேன்.
கோயில் வாசலில் –
ஆமாம்! நகைகள் கிடைச்சிடுச்சே. தங்கப்பா நீ உண்மையிலேயே பெரிய ஆள்தான். இந்தா ஐயாயிரம் ரூபாய்.
நன்றிங்க ஐயா!
விளையாட்டு வினையாயிடுச்சு. இப்படியே போனால் தினமும் எதையாவது கண்டுபிடிக்கச் சொல்வாங்க. பேசாமல் வேற ஊருக்குப் போக வேண்டியதுதான்.

புதிர் உலகம்



I. உங்கள் நண்பனை அசத்துவதற்கு ஒரு வாய்ப்பு. நண்பன் வீட்டு கார் நம்பர் அல்லது போன் நம்பர் அல்லது ஸ்கூட்டர் நம்பர் மற்றும் நண்பனின் வயதை அவர் சொல்லாமலேயே நீங்கள் சொல்ல முடியும். எப்படியென்று பார்க்கலாமா?

கார் நம்பரை ஒரு காகிதத்தில் குறிக்கச் சொல்லுங்கள். பின்னர் அதை 2–ஆல் பெருக்கச் சொல்லுங்கள்.

அத்துடன் 5–ஐ கூட்டச் சொல்லுங்கள்.

வரும் எண்ணை 50ஆல் பெருக்கச் சொல்லுங்கள்.

அத்துடன் வருடத்தின் நாட்களாகிய 365–ஐ கூட்டச் சொல்லுங்கள்.

அத்துடன் அவர் வயதையும் கூட்டச் சொல்லுங்கள். அதைக் கேட்ட உடன் உங்கள் நண்பனை பிரமிக்க வைக்கலாம்.

II. உங்கள் நண்பரிடம் ஒரு எண்ணைக் காகிதத்தில் எழுதச் சொல்லுங்கள். அந்த எண்ணை 2–ஆல் பெருக்கச் சொல்லுங்கள். அத்துடன் 2 ஐ கூட்டச் சொல்லுங்கள். வரும் விடையை 5–ஆல் பெருக்கச் சொல்லுங்கள்.

அவர் சொல்லும் விடையை வைத்து அவர் காகிதத்தில் எழுதிய எண்ணைச் சொல்லி விடலாம். எப்படி?

தகவல்: 'மின்னல் வேகக் கணிதம்' நூலிலிருந்து

— என். கார்த்திகேயன், தேனி.

எந்த வருஷம்?

III ஒரு கட்டடத்தை மராமத்துச் செய்ய வேண்டி இருந்தது. அந்தக் கட்டடம் கட்டப்பட்ட ஆண்டு எது என்பதைக் குறிக்கும் கல்லைப் பெயர்த்து எடுத்து தேவையான மராமத்தைச் செய்துவிட்டு, மீண்டும் கல்லைப் புதைத்தார்கள். கொத்தனாருக்கு எழுதப் படிக்கத் தெரியாதாகையால் கல்லைத் தலைகீழாகப் புதைத்து விட்டார். மேஸ்திரி வந்து

பார்த்துவிட்டு, ''பரவாயில்லை. இப்போதும் முன்பு காண்பித்த ஆண்டுதான் காண்பிக்கிறது. இப்படியே இருக்கட்டும்'' என்று சொல்லி விட்டார். அந்தக் கட்டடம் எந்த வருஷம் கட்டப்பட்டிருக்கும்? கண்டுபிடியுங்கள், பார்க்கலாம்!

– ஔவை ஏ.எஸ். யோகானந்தம், கலங்கியம்.

IV. பெருக்கல் அதிசயங்கள்:

33 x 3367 = 1,11,111
66 x 3367 = 2,22, 222
99 x 3367 = 3,33,333
132 x 3367 = 4,44,444
165 x 3367 = 5,55,555
198 x 3367 = 6,66,666
231 x 3367 = 7,77, 777
264 x 3367 = 8,88,888
297 x 3367 = 9,99,999

– ஏ. கோவிந்தன், சேலம்.

வயது என்ன?

V. கண்ணனின் வயது 4 ஆண்டுகள் கழித்து என்ன ஆகுமோ, அதை 3–ஆல் பெருக்கி 4 ஆண்டுகளுக்கு முன்னால் கண்ணனின் வயது என்னவோ, அதையும் 3–ஆல் பெருக்கி இரண்டு தொகையின் வித்தியாசத்தைக் கண்டுபிடித்தால் அதுதான் கண்ணனுடைய இப்போதைய வயது. அப்படியென்றால் கண்ணனின் வயது என்ன?

– சீ.கி. இராஜ ராஜேஸ்வரி, ஏழாம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப் பள்ளி, ஆண்டிப்பட்டி.

100 பொருள் 100 ரூபாய்

VI. ஒரு பொம்மைக் கடையில் யானை பொம்மையின்
விலை ரூ = 5.00
கழுதை பொம்மையின்
விலை = 0.25 பைசா
குதிரை பொம்மையின்
விலை = 0.75 பைசா

உங்கள் கையில் 100 ரூபாய் உள்ளது. அதற்கு இந்த மூன்று பொம்மைகளையும் 100 வாங்க வேண்டும். எப்படி?

ப.காளிதாசன், வேட்டனூர்.

விடைகள்:

I. நண்பரிடம் நீங்கள் கேட்ட கடைசி எண்ணில் இருந்து ரகசிய எண்ணாகிய 615–ஐ கழியுங்கள். கழித்த பின்வரும் எண்ணில் கடைசி இரு இலக்கங்கள் அவரது வயது. மீதமுள்ளது அவரது கார் அல்லது போன் நம்பர்.

II. அவர் சொல்லும் விடையில் கடைசி இலக்கத்தில் 0தான் வரும். விட்டு விடுங்கள். மீதமுள்ள இலக்கங்களில் இருந்து 1ஐக் கழியுங்கள். அவர் காகிதத்தில் எழுதிய விடை கிடைக்கும்.

சரிதானே!

III. 1881

V. 24

கண்ணனின் வயது 24 என்றால் 4 வருடம் கழித்து கண்ணனின் வயது 28 ஆக இருக்கும். அதை மூன்றால் பெருக்கினால் 84. நான்கு வருடத்திற்கு முன் கண்ணனின் வயது 24-4=20. அதை 3ஆல் பெருக்கினால் 60. இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் 84-60= 24.

VI.

		ரூ
யானை பொம்மை	14x 5	= 70.00
கழுதை பொம்மை	69x25	= 17.25
குதிரை பொம்மை	17x75	= 12. 75
பொருள்	100	100



சம்பளம் கிடைக்காது

கந்தன் கூரிய அறிவாளி. ஆனால் ஏழை. ஒரு துண்டு நிலமே அவனுக்குச் சொந்தமாக இருந்தது. இதனால் குடும்பம் நடத்தவே மிகவும் சிரமப்பட்டான். ஒரு நாள் மனைவி சலித்துக் கொள்ளவே, "என்ன செய்வது? ஏமாற்றுக்காரனுக்கும் காக்கா பிடிப்பவனுக்கும் அரசாங்கத்தில் வேலை கிடைக்கிறது! புத்திசாலித்தனத்தை யார் மதிக்கிறார்கள்? மட்டமான வேலை கிடைத்தால்கூட, சம்பளமே தராவிட்டால்கூட, கிம்பளத்தில் மாடி வீடு கட்டி விடுவேன்! ஹூம்" என்று பெருமூச்சு விட்டான் கந்தன்.

நகர சோதனைக்கு மாறு வேடத்தில் வந்திருந்த மன்னர் காதில் இச் சொற்கள் விழுந்தன. கதவு இலக்கத்தையும் வீதியின் பெயரையும் நினைவில் பதித்துக்கொண்டு அரண்மனைக்குத் திரும்பினார் அரசர்.

மறுநாள் கந்தன் அரசர் முன் நிறுத்தப் பட்டான். "காக்கா பிடிக்காமலே உனக்கு நான் வேலை தருகிறேன். சம்பளம் கிடையாது. மட்டமான வேலைதான். அதாவது படையில் உள்ள யானைகள், குதிரைகள், அரசாங்கத்துக்குச் சொந்தமான கால்நடைகள் எவ்வளவு சாணமும் புழுக்கைகளும் போடுகின்றன என்று கணக்கெழுதி வைக்க வேண்டும்" என்று கூறி அரசாங்க முத்திரையிட்ட நியமனப் பத்திரத்தைக் கொடுத்தார் மன்னர்.

கந்தன் மன்னரை வணங்கி பத்திரத்தை வாங்கி ஒரு வட்டிக் கடைக்காரரிடம் காண்பித்து பணம் கடனாகப் பெற்றுக் கொண்டான். முதல் மாதச் சம்பளம் வாங்கியதும் கொடுத்து விடுவதாக வாக்களித்தான். ஒரு வசதியான வாடகை வீட்டிற்குக் குடும்பத்தை மாற்றினான். கௌரவமான துணிமணிகள் வாங்கினான். மூன்று மாதத்துக்கான மளிகை சாமான்கள் வாங்கிப் போட்டான். நிறைய பணியாளர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டான்.

'மூன்று மாதங்கள் ஒழுங்காக வேலை பார்த்தால்தான் சம்பளம். பத்து நாள் விடுப்பு என்றால் சம்பளம் கிடையாது. பாதியில் போனவர்களுக்கும் சம்பளம் இல்லை' என்ற நிபந்தனைக்கு சம்மதித்தவர்களையே பணிக்கு நியமித்தான்.


ஆட்களோடு மந்தைகளுக்கும் யானை, குதிரை கொட்டடிகளுக்கும் திடீர் திடீரென விஜயம் செய்வான். அரசாங்க நியமனப் பத்திரத்தைக் காட்டுவான். தராசு, படிக்கல் இவற்றோடு ஒருநாள் முழுவதும் ஒவ்வொரு பிராணியும் போடும் கழிவுகளின் அளவை நிறுத்திக் கொண்டான்.

"இதெல்லாம் எதற்காக?" என்று பயத்தோடு கேட்டான் ஒருவன்.

"தீனிக் கணக்கு எழுதுவது ஒன்று; கொடுப்பது குறைவு. இவ்வளவு தீனிக்கு இவ்வளவு கழிவு என்ற கணக்கு இருக்கிறதே! அதைக் கணக்கிட்டு யார் யார் எவ்வளவு சுருட்டுகிறார்கள் என்று கண்டுபிடிக்கப் போகிறார்கள்! ஊழலுக்குத் தகுந்தபடி தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும். உத்யோகமும் போய் விடும்" என்றான் கந்தன்.

விஷயம் காட்டுத் தீயெனப் பரவியது.

ஒவ்வொரு துறை அதிகாரியும் ஒருவருக்குத் தெரியாமல் மற்றவர் கந்தனைக் காண வந்தார்கள். ஒரு பெருந்



வேலை!

தொகையை லஞ்சமாகக் கொடுத்து, ''கந்தா! நீங்கள் மனது வைத்தால் இந்தச் சிக்கலிலிருந்து என்னை விடுவிக்கலாம்!'' என்று கெஞ்சினர்.

உடன்படிக்கை எழுதிக் கொடுத்தால் காப்பாற்ற முயற்சிப்பதாக வாக்களித்தான் கந்தன்.

அத்தனை பேரும் எழுதிக் கொடுத்த உடன்படிக்கை ரசீதுகளைக் கொண்டு போய் கொற்றவனிடம் காட்டினான். அதோடு அவர்கள் லஞ்சமாகக் கொடுத்த பணத்தின் அளவையும் குறித்துக் கொண்டு போயிருந்தான்.

''மன்னவா! இத்தனை பணம் நஷ்டப்பட்ட அரசாங்கம் என் ஒருவனுக்குச் சம்பளம் கொடுப்பதால் வறண்டு விடுமா? என் சாமர்த்தியத்துக்குச் சம்பளம் உண்டா? அல்லது இதையே எடுத்துக் கொள்ளவா?'' என்று கேட்டான்.

அரசர் கந்தனின் புத்திசாலித்தனத்தை மனமாரப் பாராட்டினார். சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கூப்பிட்டுக் கண்டித்தார். கந்தனுக்கும் அவனது உதவியாளர்களுக்கும் நல்ல சம்பளம் போட்டுக் கொடுத்தார். லஞ்சப் பணம் பொக்கிஷ சாலையில் சேர்க்கப்பட்டது.

''கந்தா! எல்லாத் துறையிலும் ஊழல் உண்டு என்பதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். உனக்கு நாளை முதல் மணி அடிக்கும் உத்யோகம். அதில் நீ எப்படி சம்பாதிக்கிறாயென்று பார்க்கலாம். இதற்கும் சம்பளம் இடையாது'' என்

மாலதி

றார் வேந்தர்.

கந்தன் ஒப்புக் கொண்டு விடை பெற்றான். அந்த நாளில் கடிகாரம் கிடையாது. அரண்மனையில் மணி அடித்தே நேரம் தெரிவிக்கப்படும்.

ஒரு வாரம் ஒழுங்காக வேலை நடந்தது. ஒரு நாள் ஒரு வைர வியாபாரி வந்தான். "கந்தா! மன்னர் ஒரு மணி அடித்தால் சாப்பிட எழுந்து விடுவார். வியாபாரம் பாதியில் பங்கப்பட்டால் லாபமில்லை. நான் வெளியே வரும் வரை சாப்பாட்டு மணியை அடிக்காதே! இதை வைத்துக் கொள்" என்று இரண்டு வைரக் கற்களைக் கொடுத்துச் சென்றான்.

அடுத்து பட்டு வியாபாரி வந்தார். அவரைத் தடுத்து நிறுத்தினான் கந்தன்.

"உள்ளே வைர வியாபாரி இருக்கிறார். அவர் வெளி வந்த பின்தான் நீங்கள் போக முடியும்" என்றான்.

"சாப்பாட்டிற்குப் பின் மன்னர் ஓய்வெடுப்பார். பணம் கொடுப்பது மாலையில் கிடையாது. நாளைக்கு வா என அலைய வைப்பாரே" என்று புலம்பினான் ஜவுளி வியாபாரி.

"அப்படியானால் வேறொரு நல்ல நாள் குறித்துக் கொண்டு வாருங்கள். அன்று வேறொருவரையும் உள்ளே அனுப்பாதிருக்கிறேன்" என்றான் கந்தன்.

அதற்கு ஒப்புக்கொண்டு ஒரு உயர்ந்த பட்டுப் புடவையும் கொடுத்துச் சென்றார் புடவை வியாபாரி.

இப்படியே புடவையும் நகையுமாக குவிந்தது கந்தனுக்கு! அரசரை முக்கிய காரியமாகப் பார்க்கப் போகிறவர்களெல்லாம் கந்தனைக் 'கண்டு'விட்டே போனார்கள்.

ஒருவர் வியாபாரம் செய்யும்போது இன்னொரு வியாபாரி தன் பொருட்களைப் பரப்பினால் எது தன் மனதைக் கவர்கிறதோ அதை மட்டுமே வாங்குவார் அரசர். இப்போதோ! பாவம், மெனக்கெட்டு வந்திருக்கிறான் என்ற இரக்கத்தில் ஏதாவதொரு வியாபாரம் செய்வார். இதனால் வியாபாரிகள் கந்தனோடு சுமுகமான உறவே கொண்டிருந்தனர்.

திவான் வீட்டுத் திருமணத்திற்குச் சென்றிருந்தார் அரசர். அங்கே பட்டும் வைரமுமாய் மின்னிக் கொண்டிருந்த பெண்ணைக் காட்டி "இது யார்" என்று கேட்டார்.

"மணி அடிக்கும் கந்தனின் மனைவி" என்றதும் அரசருக்கு மயக்கமே வந்து விட்டது. மறுநாள் கந்தனைக் கூப்பிட்டு விசாரித்தார். கந்தன் பணம் வந்த வழியைச் சொன்னான்.

அரசர் "சரி! எதையும் மூன்று முறை பரீட்சிப்பதே சிறந்தது. இந்த முறையும் ஏமாற்றுக்காரர்கள் எதிலும் உண்டு என்று நிரூபித்து விட்டால் உன்னை மெய்க்காப்பாளனாகவே ஆக்கிக் கொள்கிறேன்" என்றார்.

"சரி. வேலையைச் சொல்லுங்கள்" என்றான் கந்தன்.

"என் ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசங்களின் ஜனத் தொகை கணக்



"இந்தத் தெருவுல கடைசி வீட்டுல வசிக்கிறவர்கிட்ட போய் கேட்டா 'மான்' கண்டிப்பா கிடைக்கும்னு எதை வச்சு சொல்றீங்க?"

"அவர் பெயர்தான் 'அதிகமான்' ஆச்சே!"

— காழி ஆர். சீதாராமன்



கெடுக்க வேண்டும். அதோடு வீடுகளில் வளர்க்கும் ஆடு, மாடு, கோழி, கிளி, புறா, பன்றி, மான் எல்லாக் கணக்கு களும் சரியாகப் பதிந்து வர வேண்டும்'' என்று வேலையை மாற்றினார்.

கந்தன் கணக்கெடுப்பதைப் பார்த்து ''எதற்காக?'' என்று பலர் கேட் டனர்.


பயத்தோடு அக்கம் பக்கம் பார்த்த படி, "செய்தி காற்று வாக்கிலே பர விடும்பாங்க! யுத்தம் வரப் போகிறதே! தெரியாதா? குமைந்து கொண்டிருக் கிறது. நமக்கோ படை பலம் குறைவு. யுத்த சமயத்தில் சரியாக் கணக்குக் கொடுப்பாங்களா? 'என் பிள்ளை நோஞ்சான், எனக்கு ஒரே பிள்ளை! இப்பத்தான் கல்யாணம் ஆச்சு'ன்னெல் லாம் சாக்குச் சொல்லக் கூடாதே! அத்தனை ஆண் பிள்ளைகளுக்கும் போர் உடை அணிவித்து எதிரிப் படை யைத் திணறடிக்க வேணும் என்பது அரசரின் திட்டம்'' என்றான் கந்தன்.

''ஆடு, மாடு, கோழிக் கணக்கு எதற்காகவாம்?'' என்றான் ஒருவன்.


''பட்டாளத்தில் சேரும் அத்தனை பேருக்கும் சாப்பாடு போட வேண் டாமா? அரசாங்கத்துக்குக் கொடுத்து உதவத்தான்!'' என்ற கந்தனின் பதில் பலரையும் அச்சுறுத்தியது.

கள்ளக்கணக்கு எழுத அன்பளிப் பைத் தாராளமாய் கொடுத்தனர் மக்கள்.

மாறுவேடத்தில் ஒளிந்து நின்ற மன்னர் "ஐயோ!" என்று தலையில் கை வைத்து உட்கார்ந்து விட்டார்! ●




பிருந்தாவனம்









500 ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்தில் கம்பர்லாண்ட் என்ற இடத்திலுள்ள ஒரு சுரங்கத்தில் கிராபைட் கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பிறகு அதிலிருந்து பென்சில்கள் தயாரிக்கப்பட்டன. 1795ல் என்.ஜே. கோன்டே என்பவர் களிமண் தண்டு களிடையே கிராபைட்டு கம்பிகளை வைத்து பென்சில்களைத் தயாரித்தார். இதுதான் நவீன பென்சில்கள் தயாரிப்பதற்கு முன்னோடியாக அமைந்தது.

பென்சில் என்பதற்கு சிறிய மெல்லிய நுனியையுடைய தூரிகை என்று பொருள். லத்தீன் மொழிச் சொல்லான 'பென் சில்லஸ்' என்ற சொல்லிலிருந்தே 'பென்சில்' என்ற வார்த்தை வந்தது.

– க. பூங்கொடி, சித்தோடு.

ஒவ்வொரு ஆண்டும் பூமியில் உள்ள தாவரங்கள் சுமார் 650 ஆயிரம் மில்லியன் டன் கார்பன்–டை–ஆக்ஸைடை கிரகித்து, சுமார் 350 ஆயிரம் மில்லியன் டன் ஆக்ஸிஜனை உற்பத்தி செய்கின்றன.

– எஸ். லாவண்யா, சீர்காழி.

கம்பளங்களுக்கான மியூசியமொன்று துர்க்மெனிஸ்தான் தலைநகரான ஆஸ்க்ஷாபாத்தில் அமைந்துள்ளது. இங்கு உலகிலேயே மிக அரிய மற்றும் தொன்மையான கம்பளங்கள் உள்ளன. 15ம் நூற்றாண்டு கம்பளங்களும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. உலகிலேயே மிகப் பெரிய கம்பளமாக 11X20 ச.மீ. பரப்பு கொண்ட கம்பளமும் இங்கு உள்ளது.

ஆதாரம் : விஸ்டம்

தகவல் : **தெ. இராமன், சென்னை 74.**

ஆப்ரிக்காவைச் சேர்ந்த மொராக்கோ நாட்டு முஸ்லிம் மன்னர் ஒருவர் 775 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பள்ளிவாசலை 960 மூட்டை கஸ்தூரியை சுண்ணாம்பில் கலந்து 70 லட்சம் ரூபாய் செலவில் கட்டினார். இந்தப் பள்ளிவாசல் இன்றும் புத்தம் புது மணத்தைப் பரப்பிக் கொண்டு காட்சியளிக்கிறது.

– டி. அஹமது இபுராஹிம் ஜின்னா, அபிவிர்த்தீஸ்வரம்.

கொலைகாரர்களையும் கொள்ளைக்காரர்களையும் பிடிக்க தற்போது கைரேகைகள் பெரிதும் உதவுகின்றன. கைரேகையை வைத்து கண்டுபிடிக்கப்பட்ட முதல் திருடனின் பெயர் ஹாரிஜாக்சன். அவன் திருடியது இரண்டு பில்லியர்ட்ஸ் பந்துகளாகும்.

ஆதாரம் :

அறிவியல் குறிப்புகள் 1000

– ஆறுபாதி புகழேந்தி, மயிலாடுதுறை.

கண் பார்வையற்றவர் கல்வி கற்கப் பயன்படுத்தும் 'பிரெய்லி' முறையைக்

கண்டு பிடித்தவர் கண் பார்வையற்ற ஒருவர்.

குதிரைக்குச் சேணம் தயாரிக்கும் கடைக்காரனின் மகனாகப் பிறந்தவர் பிரெய்லி. இவர் சிறுவனாக இருந்தபோது ஒரு விபத்தில் கண் பார்வை இழந்து விட்டார்.

பார்வையற்றவராக இருந்த போதிலும் படிக்க வேண்டும் என்ற ஆவலில் அதிகம் படித்தார். ஆராய்ச்சி செய்தார். அதன் விளைவாகப் பார்வையற்றவர்களுக்காக கையினால் தடவிப் படிக்கும் முறையைப் பிரெய்லி கண்டுபிடித்தார்.


பார்வையற்றவர்களுக்காக – பார்வையற்றவர் கண்டுபிடித்த எழுத்து முறைகளைக் குறிக்கும் விதத்தில் அவருடைய பெயரையே சூட்டினார்கள்.

– ஆர்.ஆர். பூபதி, திண்டுக்கல்.

இன்று அனேகமாக எல்லாப் பத்திரிகைகளுமே, 'ஆசிரியருக்கு எழுதப்படும் கடிதங்கள்' வெளியிடுகின்றன. இத்தகைய கடிதங்களை வெளியிட்ட பெருமை 1871-ஆம் ஆண்டில் வெளிவந்த 'கல்கத்தா ஜர்னல்' என்ற வாரம் இருமுறை இதழின் ஆசிரியரையே சாரும். அவர் அந்த இதழில், 'ஆசிரியருக்குக் கடிதம்' என்ற பகுதியைத் தொடங்கினார். அதன் பிறகே, இதழ்களில், 'ஆசிரியருக்கு எழுதப்படும் கடிதங்கள்' வெளிவரத் தொடங்கின.

ஆதாரம் : பொது அறிவுத் தேன்கூடு

– ஏ.எல். பாத்திமா, காரைக்கால்.



எல்லா சிலந்திகளும் வலை பின்னுவதில்லை. சில சிலந்திகளே வலைபின்னுகின்றன. சிலந்தி, அந்த நூலைத் தன் அடிவயிற்றுப் பகுதியில் இருக்கும் சுரப்பிகளிலிருந்து மிக நுட்பமான துவாரங்கள் மூலம் வெளியே அனுப்புகிறது. வெளியே வரும் போது திரவ வடிவத்தில் இருக்கும் நூல் காற்று பட்டதும் இறுகி விடுகிறது. இரைகளைப் பிடிக்க, முட்டையிட்டுப் பாதுகாக்க என சிலந்தி நூலில் பல வகை உண்டு. நீரில் வாழும் சிலந்திகளும் உண்டு.

நன்றி : தெரிஞ்சிக்கலாமே

– தேனி முருகேசன், தேனி.




மணம் பரப்பும் பள்ளிவாசல்!






- நாலுகால் பிராணிகளில் ஒட்டகத்துக்கு மட்டும் நீந்தத் தெரியாது.
- முதலை கண்களைத் திறந்து வைத்துக் கொண்டே தூங்கும்.
- நண்டுக்குப் பற்கள் அதனுடைய வயிற்றில் உள்ளன.

– பாளை பகம்பொன், மகராஜநகர்.





ஆஸ்திரேலியாவில் காணப்படும் 'டிங்கோ' எனப்படும் நாய் மற்ற நாய்களைப் போல் குரைக்காமல் ஓநாயைப் போல் ஊளையிடு






கிறது.

யுகான், அலாஸ்கா ஆகிய இடங்களில் காணப்படும் டால்ஸ் ஆடுகள் பெரிய மலைகள், பாறை ஓரங்களில் குட்டிகளைப் போடுகின்றன. இந்தக் குட்டிகள் பிறந்த இரண்டு மணி நேரத்திற்குள்ளாகவே மலை ஏறத் தொடங்கி விடுகின்றனவாம்.

ஐரிஷ் கடலிலுள்ள Isles of Man என்னும் தீவில் காணப்படும் 'மான்க்ஸ்' எனப்படும் பூனைகளுக்கு வால் இல்லை. இதைப் போன்ற வாலில்லாப் பூனைகள் ஜப்பானிலும் காணப்படுகின்றன.

ஆதாரம் : வியப்பூட்டும் விந்தைகள்.

– ஏ. எல். சாதிக், காரைக்கால்.



பறவைகளும் வெப்ப ரத்த பிராணிகளே. அதாவது உடல் வெப்ப நிலையை சீராக வைத்துக் கொள்ளும் உயிரினம். பொதுவாக பறவைகளின் உடல் வெப்பநிலை 104 முதல் 112 டிகிரி பாரன்ஹீட் வரை இருக்கும். பனிப்பிரதேசங்களில் வாழும் பெங்குவின் உடல்வெப்ப நிலையும் இதற்கு இடையில்தான் நிலைநிறுத்தப்படுகிறது. பறவைகளுக்கு வியர்வை சுரப்பிகள் இல்லை. ஆனால் உடலை மூடி பாது காக்கும் இறகுகள் உடல்வெப்ப நிலையை நிலைநிறுத்த பெரிதும் உதவுகின்றன.

ஆதாரம் : எதனாலே... எதனாலே... எதனாலே...?

– சு. செனம்பா, வேலூர் – 7.

எலிகளின் அட்டகாசம் நம் நாட்டில் மட்டு மல்ல. உலகமெங்கும் பரவியிருக்கின்றது. எலிக்கு மோப்ப சக்தி உண்டு. இதனை ஒழிக்க பல மருந்துகள், வழிகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும் இவைகளை ஒழிக்க முடியவில்லை. காரணம் ஒரு எலி ஆண்டிற்கு 80 குட்டிகள் போடுகிறது. பலவிதங்களில் நமக்குத் தொந்திரவு தரும் இந்த எலிகளுக்கு ராஜஸ்தானி லுள்ள 'பிக்கானிர்' என்ற ஊருக்கு அருகே ஒரு கோயில் கட்டி வைத்திருக்கிறார்கள். அந்த ஊர்வாசி கள் எலிகளைக் கொல்வது பாவம் என்று சொல் வார்கள்!

– டி. ஆர். பரிமளம், திருச்சி – 21.

'ஹேக்' என்பது ஒரு வகை விலாங்கு மீன். இதன் உடலில் இருந்து எப்போதுமே ஒருவித கொழ கொழப்பான திரவம் சுரந்து கொண்டேயிருக்கும். ஒரு பெரிய வாளியில் கடல் நீரை நிரப்பி, அதனுள் இந்த மீனைப் போட்டால் சில நொடிகளில் இது கடல் நீரை கொழ கொழப்பான திரவமாக மாற்றி விடும். எதிரிகளிடம் இருந்து மறைந்து இருப்பதற்காக இந்தத் திரவம் சுரக்கிறது. ஆனால், இந்தத் திரவம் இதனுடைய செவுள்களை அடைக்கும். அப்போது, இந்த மீன் தன்னை ஒரு முடிச்சுப் போல ஆக்கிக் கொள்ளும். பிறகு முடிச்சை அவிழ்க்கும். அச்சமயம், இதன் உடலில் ஒட்டிக் கொண்டுள்ள திரவம் வழித்து எடுக்கப்படும். இப்படி இது தன் உடலை அடிக்கடி சுத்தப்படுத்திக் கொள்ளும்.


– சு. இலக்குமணசுவாமி, மதுரை – 6.

- உலகிலேயே மழையே பெய்யாமல் கடந்த 400 ஆண்டுகளாகப் பஞ்சத்தில் உள்ள பகுதி, சிலி நாட்டிலுள்ள அட்டகாமாதான்!
- உலகில் அதிக எடையுள்ள ஆண் ஜான் புரோவர் மோனச் (1741 – 1783) என்னும் அமெரிக்கர். இவரது எடை : 635 கி. கிராம்.
- உலகின் முதல் செயற்கைக் கோளின் பெயர் ஸ்புட்னிக். அதை ரஷ்யா 4.10.1957 அன்று பூமியைச் சுற்றி வர அனுப்பியது.

ஆதாரம் : பள்ளிப் பிள்ளைகளுக்கான பொது அறிவு விஷயங்கள்

– பெ. விவேகானந்தன், காரைக்குடி – 5.

குறுக்கெழுத்துப் புதிர்



வலமிருந்து இடம்

3. தேசிய விநாயகம் பிள்ளையின் பெயருக்கு முன்னால் இந்தப் பட்டப் பெயர் இருக்கும் (4)
5. தானியங்களில் ஒன்று. தேனும் இந்த மாவும் சேர்த்து உண்பர் (2)
6. மனித உடலை இயங்க வைப்பது (2)
11. குச்சி என்பதை இப்படியும் கூறலாம் (2)
16. வீடு கட்ட உதவும் முக்கிய பொருள் (4)

மேலிருந்து கீழ்

1. உலோகங்களில் ஒன்று. பாத்திரம் செய்யப் பயன்படுகிறது (4)
2. நினைவில் வைத்துக் கொள்ளாதவர்களுக்கு ________ அதிகம் (3)
3. தாமரைக்கு இன்னொரு பெயர் (4)
6. உணவுப் பொருட்களைப் பாதுகாப்பாக ________ வைக்க வேண்டும் (2)
9. சாக்லேட் செய்யப் பயன்படுவது ________ விதை (2)

கீழிருந்து மேல்

4. இதை உணரத்தான் முடியும். பார்க்க முடியாது (3)
7. வெயில், மழையிலிருந்து இதன் மூலம் நம்மைக் காத்துக் கொள்ளலாம் (2)
8. எச்சங்களில் ஒன்று (2)
10. நடந்து செல்கின்ற வழி (2)
12. நன்மை செய்யாவிட்டாலும் யாருக்கும் இது செய்யக் கூடாது (2)
13. பழங்களில் ஒன்று. சமைக்கப் பயன்படும் (4)
14. மீனை இப்படியும் அழைப்பார்கள் (3)
15. வீட்டிற்குப் பாதுகாப்பு (3)
16. இந்தக் கிரகத்தில் உயிரினங்கள் வாழ சாத்தியமா என விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர் (4)


– ப. ரவிச்சந்திரன், பத்தாம் வகுப்பு,
அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,
பெண்ணாகரம்.



இடமிருந்து வலம்

1. காகம் கரையும்; யானை ________ (4)
4. பறவைகளில் ஒன்று (2)
7. மண்கூடு கட்டும், இரைச்சல் உண்டாக்கும் பூச்சி (3)
9. பஞ்சாப் ________ களஞ்சியம் (3)
10. தாவரத்திலிருந்து தயாரிக்கப்படும் இது படிக்க உதவும் (2)
12. அந்தமான் ஒரு ________ (2)
13. ஒரு நாட்டின் இதன் இருப்பை வைத்து பணம் அச்சடிக்கப்படுகிறது (4)

விடை 75 பக்கம்



பாலைவனமாக்க முயலும் கயவர்களின் முயற்சியை நல்லவர்கள் முறியடிக்கிறார்கள். இறுதியில் ஊர்ப் பெரியவர்களையே கொலை செய்யும் திட்டம் தீட்டப்படுகிறது. தந்தை என்றும் பாராமல் அவர்களைக் கைது செய்து தங்கள் தியாக உணர்வைக் காட்டி, ஊரின் மத நல்லிணக்கத்தைக் காக்கிறார்கள். பெரிய குழந்தைகள் மட்டுமல்ல, பெரியவர்களும் படிக்கலாம். ஓர் இயக்கம் நடத்த வேண்டிய தொண்டை இந்த நாவல் செய்யும் என்பது உறுதி.

கரடியாக மாறிய இளவரசன்!

***ஊரைக் காத்த உத்தமன்*, சரசுவதி அமுதன், பக்.112. ரூ. 25/- கலையமுதன் பதிப்பகம், மனை எண்: 142, இரண்டாம் தெரு, விருகம்பாக்கம், சென்னை – 92.**

பண்பு நலம் மிக்க சிறுவன் உத்தமன். சித்தியின் கொடுமை தாங்காமல், வீட்டை விட்டுக் கிளம்பி, முனிவரின் அருளைப் பெற்று, தனது பேராசை இல்லாத குணத்தால் தேவதையின் அருளைப் பெறுகிறான். அதன் உதவியால் கரடியாக மாறிவிட்ட ஓர் இளவரசனுக்குச் சுய உருவம் கிடைக்க வைத்து, ஆபத்தில் சிக்கிய தனது கிராமத்தையும் சித்தி, அப்பாவையும் காப்பாற்றி, தாயோடு சேருகிறான். சிறுவர் இலக்கிய மாமணி விருது பெற்ற ஆசிரியர் படைத்துள்ள இது, தேவதைக் கதைப் பிரியர்களுக்கு நல்ல விருந்து.

— ரே

***மின்கல மாதவன்*, ரேவதி, பக்.62, ரூ. 15/- பழனியப்பா பிரதர்ஸ், கோனார் மாளிகை, 14. பீட்டர்ஸ் சாலை, சென்னை – 14.**

சில மனிதர்களின் உடலில் இயற்கையாகவே மின்சாரம் உற்பத்தியாகும் அதிசயம் அபூர்வமாக சில நாடுகளில் நடைபெற்று வருகிறது. அவர்களில் ஒருவன்தான் கதாநாயகன் மாது என்ற மாதவன். இந்த அதிசய சக்தியால் அவனுக்கு ஏற்படும் ஆபத்துகளும் அவற்றை அவன் கையாளும் விதமும் அருமையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த நாவலைப் பற்றியும் ஆசிரியர் ரேவதி பற்றியும் அதிகம் சொல்லத் தேவையில்லை. சமீபத்தில் கோகுலம் இதழில் தொடர் கதையாக வந்து வாசகர்களின் மனதில் இன்றும் என்றும் நிலைத்து நிற்கும் விறுவிறுப்பான கதை. கலாவின் படங்கள் கூடுதல் அழகு.

— விஜி

***குருதிக் கொடை*, ஆ. கோவிந்த ராசலு, பக் 56, ரூ. 18/- அம்சா பதிப்பகம், 34, கோட்டைமேடு வீதி, கரிக்கலாம் பாக்கம் – 605 007.**

சிறுவர்களுக்காக எழுதப்பட்ட நான்கு நாடகங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகை. சாதிச் சாடல், மூட நம்பிக்கை ஒழிப்பு, கல்வியறிவு இப்படி அரிய கருத்துகளை வலியுறுத்துகின்றன. இதிலுள்ள நயத்தை மேல் வகுப்புச் சிறுவர்கள் நன்கு ரசிக்கலாம். பள்ளி விழாக்களுக்குப் பயன்படும் படைப்பு.

***மாவீரன் தீசியகம் எருமை அரக்கனும்*, பேராசிரியர் எ. சோதி, பக். 88. ரூ. 20/- நன்மொழிப் பதிப்பகம், 41, கங்கை வீதி, வசந்த் நகர், புதுச்சேரி – 605 003.**

மாய மந்திரங்கள் நிறைந்த கிரேக்க புராணத்தின் கிளைக் கதைகளில் ஒன்றான தீசியசின் வீரவரலாற்றை படிக்கப் படிக்கச் சுவை குன்றாமல் தந்துள்ளார் ஆசிரியர். 22 முழுப்பக்கப் படங்கள் நூலுக்கு மெருகூட்டுகின்றன. தரமான பதிப்பு. படிப்போர் விரும்ப மாட்டார்கள் என்பதற்காக புராண முடிவை மாற்றியமைப்பது சரிதானா?

***சாதிகள் இல்லையடி பாப்பா!* அரிமதி தென்னகன், பக். 112, ரூ. 25/- முத்துப் பதிப்பகம், 7 வில்லியம் லே அவுட், 2வது தெரு. கே.கே.ரோடு, விழுப்புரம் – 605 602.**

கள்ளச் சாராயம் காய்ச்சியும் மத, இன வெறி உணர்வுகளைத் தூண்டியும் ஊரைப்



அடுத்த இதழில்...
செந்தில் மிகவும் அழகற்றவன் என்பதால் ஒதுக்கப்படுகிறான். அவனுக்கு ஒரே ஆறுதல் செல்ல நாய் குமரன்தான்! ஒரு நாள் செந்தில் பெயருக்கேற்றாற் போல் அழகான அழகனைச் சந்திக்க நேரிடுகிறது... அவ்வூரில் உள்ள மலையில் குமரனுடன் சுற்றித் திரியும் செந்திலுக்கு ஒரு மர்மம் புரிபடுகிறது!
பத்மா ரவிசங்கர்
எழுதும்
அழகன், செந்தில், குமரன்!
– திகில் திருப்பங்கள் நிறைந்த புதிய தொடர்கதை ஆரம்பம்.
ஏமாற்றத்தைத் தவிர்க்க இப்பொழுதே உங்கள் ஏஜெண்டிடம் சொல்லி வையுங்கள்.

குழந்தைகளைக் கண்டுபிடிக்கும் தாய்கள்!

சேயை நேசிக்காத தாயை யாருமே பார்க்க முடியாது. தாய் – சேய் அன்பு என்பது உலகப் பிரசித்தம். ஆறறிவுள்ள மனிதனிலிருந்து, ஐந்தறிவு விலங்குகளான ஆடு, மாடு, பன்றி, மான், குதிரை, நாய், பறவைகள், தவளை மற்றும் மீன்கள் வரை தன் சேயை நேசிக்கின்றன; பாதுகாக்கின்றன; பேணி வளர்க்கின்றன. இது எப்படி?


மனிதர்களை முக வித்தியாசம் வைத்து அடையாளம் காண முடியும். விலங்குகள் எப்படி தன் குட்டிகளை அல்லது குஞ்சுகளை அடையாளம் காண்கின்றன? அடையாளம் கண்டுகொண்டால்தானே மற்ற குட்டி அல்லது குஞ்சுகளிலிருந்து, தம் குஞ்சுக்கு உணவூட்டி, பேணி, பாதுகாத்து வளர்க்க முடியும்! மேலும் குட்டி – குஞ்சுகளுடன் அடிக்கடி தொடர்பு கொண்டால் மட்டுமே, அவைகளைத் தாய் இனம் காண முடியும்.


விலங்குகள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்ள, செய்தி தெரிவிக்க, தகவல் பரிமாற, நம் போல் 'வார்த்தைகள்' மூலம் பேசிக் கொள்வதில்லை. அவை உடல் வாசனை, உடலசைவுகள், சைகைகள் மற்றும் ஒலிகள் எனப் பலவிதமான முறைகளைக் கையாளுகின்றன. பெரும்பான்மையான பாலூட்டிகள் வாசனை மூலமே



குட்டிகளை அறிந்து கொள்கின்றன. சில, குதிரை, ஆடு, மாடு, பூனை, மான் மற்றும் நாய் போன்றவை வாசனை மூலம் தன் குட்டிகளைத் தெரிந்து கொள்வதைப் பழக்கமாக








வைத்துள்ளன; மேலும் நிறம் மற்றும் உடலளவு மூலமும் அறிந்து கொள்கின்றன. ஆடுகள் மந்தை, மந்தையாக எவ்வளவு கூட்டமாக இருந்த போதும், ஒவ்வொரு தாய் ஆடும், தன் குட்டியை மட்டும் துல்லியமாய் அடையாளம் கண்டு விட்டு, மற்ற ஆட்டின் குட்டிகளை ஒதுக்கி விடும் என்பது சுவையான ஒரு விஷயமல்லவா?

சில பாலூட்டிகள், குட்டியை ஈன்றவுடனேயே, அதனை நன்றாக முகர்ந்து பார்த்து, அதன் வாசனையை நன்றாக 'நினைவில்' (மூளையில்) நிறுத்திக் கொள்கின்றன. எனவேதான், தன் குட்டியை இனம் காணும் போது, ஒவ்வொன்றாய் முகர்ந்து பார்க்கிறது. பறவைகள் 'ஒலி'யின் மூலம் தன் குஞ்சுகளைக் கண்டுபிடித்து விடுகின்றன. ஒவ்வொரு தாய்ப் பறவையும் முட்டையிலிருந்து குஞ்சு வெளிவரும் போதே, தன் குரலை ஒருவித தாய்க் குரலாக ஒலிக்கச் செய்து, தன் குஞ்சு தன்னை இனம்காண வைக்கும். மீன் மற்றும் தவளை போன்ற வேறு சில விலங்குகள் உருவம் மற்றும் அளவு மூலம் தன் குஞ்சுகளை நினைவில் நிறுத்தி, கண்டுபிடிக்கின்றன. இப்படி தன் சேயைத் தாய் கண்டுபிடிக்கும் திறன், இயற்கையிலேயே, பாரம்பரிய ஜீன்களின் மூலமாகவே இவைகளுக்கு வருகின்றன.

— சுவாதி



11

பங்காருதுங்கா!

வியப்பும் திகைப்பும் தளர்ந்து, முதலில் பேசியது மோகன்தான்.

"நித்யா! நீங்க எப்படி... இந்தக் கோயிலுக்குள்ளே...?" ஆர்வத்தோடு கேட்டார் மோகன்.

"எதிர்பாராதவிதமா நாங்க ஜெயராஜ் ஆட்களிடமிருந்து தப்ப ஒரு பாறை இடுக்கிலே புகுந்து ஒளிந்துகொண்டோமா...!" சத்யா விவரித்தான்.

புண்ணியகோடி இன்னும் பிரமிப்பிலிருந்து நீங்காதவராக, சுதை உருவ தேவி சிலையைப் பார்த்தபடியே "இத்தனை வருஷமா புதையல் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் தகவல் மட்டுமே கிடைத்தது. நீங்கள் எந்த ஆராய்ச்சியும் செய்யாமல் இந்தக் கோயிலின் பாறைக் கதவைத் திறக்கும் வழியைக் கண்டுபிடித்து விட்டீர்களே!" என்று வியந்து போனார். "ஆனா நான் எதிர்பார்த்தபடி இங்கு புதையல் எதையும் காணவில்லை. தேவியும் சுதை உருவில் இருக்கிறாள். இது ஏமாற்றம்தான்!" என்றார்.

"இல்லே புரொபஸர் மாமா! கோயில் நுழைவாசல் எப்படி கண்ணுக்குத் தெரியாமல் இருந்ததோ அதேபோல புதையலும் எங்கோ மறைவாக இருக்கணும்..." என்ற நித்யா "டிங்கு உன்னிடமிருக்கும் அந்தத் தாமிரப் பட்டயத்தைக் கொடு" என்று கேட்டு வாங்கி புண்ணியகோடியிடம் கொடுத்தாள்.

தாமிரப் பட்டயம் என்றதுமே புண்ணியகோடியிடம் புது உற்சாகம் பீறிட்டது. ஆர்வமாக அதைச் சூரிய வெளிச்சத்தில் கொண்டுபோய், ஆராயலானார். இந்த அம்மனின் பெயர் பங்காரு துங்கபத்ரா. இந்தப் பட்டயத்திலேதான் முதன் முதலா துங்கபத்ரா நதி அன்னைக்கு இப்படி ஒரு பெயர் இருப்பதைப் பார்க்கிறேன். பங்காரு என்றால் தங்கம் - பங்காருதுங்கா என்றால் தங்க - துங்க பத்திரை! இங்குள்ளதோ சுதையினலான உருவம். மண் பொம்மை. அப்படியானால் தங்கத்தாலான துங்கபத்ரையின் சிலை வேறு எங்கோ இருக்க வேண்டும் - எங்கே?" புண்ணியகோடி குழம்பியவராக, டிங்கு கொடுத்த தாமிரப் பட்டயத்தை மேலும் ஆராயலானார். நித்யாவும் சத்யாவுமே கூட இப்போது அவருடன் அந்தத் தாமிரத் தகட்டை உன்னிப்பாகக் கவனித்தார்கள்.

"அங்கிள், இந்தப் பட்டயத்தில் அம்மன் சிலைக்கு முன்னாலே தாமரை போல ஏதோ தெரியுதே அது என்ன?" என்று கேட்டான் சத்யா.

"அது பலி பீடம்... தெய்வங்களுக்குப் படையல் இடும் இடம்" என்றார் புண்ணியகோடி.

"பலி பீடத்தைச் சுற்றி வட்டமா கோடு வேற இருக்கு. பாட புத்தகத்திலே சூரியனை பூமி சுத்தற பாதையைக் காட்டி இருப்பாங்களே அது போல"

அப்போதுதான் அதைக் கவனித்தவர் போல புண்ணியகோடி "ஆமா...ம்!" என்றார் யோசனையுடன்.

"இன்னொண்ணையும் பார்த்திங்களா அங்கிள் - பலி பீடத்தின் மையத்திலிருந்து ஒரு கோடு, தேவியின் மார்பிலுள்ள சந்திரஹாரப் பதக்கக் கல்லை நோக்கிப் போகுது..." என்றான் நித்யா.

"அது தாமிரத் தகட்டின் மடிப்பு என்றல்லவா நினைத்தேன்..."



"பலி பீடத்திலிருந்து இன்னொரு கோடு கூட, அம்பாளின் நெற்றிச் சுட்டியின் நடுவிலுள்ள கல்லுக்கு இழுக்கப்பட்டிருக்கிறது அங்கிள்..." என்றான் சத்யா.


"நீங்கள் பலி பீடத்திலிருந்து இழுக்கப்பட்டுள்ள கோடுகளைக் கூறியதும்தான் தெரிகிறது. பட்டயத்தின் மேல் பகுதியில் இடது பக்கக் கோடியில் வரையப்பட்டுள்ளது சூரியன் என்பதும், சூரிய ஒளி பலி பீடத்தில் பட்டு பிரதிபலிக்கும் கதிர்களே - சந்திர ஹாரப் பதக்கக் கல்லை நோக்கி..." என்று கூறியவர் "அது

வாண்டுமாமா



தங்கச்சிலை!

"எப்படி பலி பீடக் கல்லிலிருந்து ஒளி பிரதி பலிக்கும்?" என்று தனக்குத்தானே கூறிக் கொண்டே வந்தவர் தாமிரப் பட்டயத் துடன் தேவி சிலையின் அருகே போனார். பலி பீடத்தையும் சிலையையும் மாறி மாறிப் பார்த்தவர் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவராக "சூட்சுமம் இந்தப் பலி பீடக் கல்லில்தான் இருக்க வேண்டும்" என்று கூறி "மோகன்



ஓவியப் போட்டி

பாலைவனக் கப்பலான ஒட்டகம்தான் இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு. ஒட்டகம் என்றதும் உங்கள் நினைவுக்கு வரும் காட்சிகளை வண்ணம் தீட்டி அனுப்பி வையுங்கள். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. உங்கள் முகவரியை அவசியம் குறிப்பிட வேண்டும். கடைசி தேதி **20.5.2000**

இங்கு பாருங்கள் என்று அழுத்தார்.

மோகன் அருகே வந்ததும் "இந்தப் பலி பீடம் இருகு மூடி போலிருக்குமென்று நினைக்கிறேன். நாம் இருவரும் இதை அசைத்துத் திருகித் திறக்க முடியுமா என்று பார்க்கலாம். இதன் உள்ளே புராதனப் புதையலுக்கான மர்மம் ஏதாவது இருந்தாலும் இருக்கலாம்" என்றார். இருவரும் பலி பீடத்தின் பக்கவாட்டில் கைகளை அழுத்தி மூச்சுக் கட்டி அதைத் திருகித் திறக்கும் பணியில் ஈடுபட்டனர். அனைவரின் பார்வையும் பலி பீடத்தின்மீது பதிந்திருந்தது.

"நித்யா பலி பீடம் சுழலுவது போலிருக்கில்லே" என்று கிசுகிசுத்தான் சத்யா.

"அதோடு - அதன் மேல் பொறிக்கப்பட்டுள்ள தாமரை இதழ்கள் மெள்ள விரியறாப் போலவும் இருக்கு" என்றாள் நித்யா. ஆமாம் கல்லால் உருவாக்கப்பட்டிருந்த பலி பீடத்து தாமரை மலர் சிற்பம் இதழ் விரித்து மலரலாயிற்று. அதனுள்ளே பளபளக்கும் ஒரு பொருள் இருந்தது. அனைவரும் வியப்பும் திகைப்புமாக அதைப் பார்க்க, புண்ணியகோடி பலி பீடத்தைத் திருகுவதை நிறுத்திவிட்டுக் கூறினார்:

"இது சூரிய காந்தக் கல் - இப்போது நாம் லென்ஸ் என்கிறோமோ, அதேதான். சூரிய ஒளி இதில் பட்டுப் பிரதிபலிக்கும்."

"நாங்க காகிதம், பஞ்சு, தீக்குச்சி இவைகளை லென்ஸ் மூலம் சூரிய ஒளியைக் காட்டி எரிய வைப்போமே அது போலவா?" என்று அறிவுத்திறனை வெளிப்படுத்தினான் சத்யா.

"அதுவேதான்!" என்றவர் பலி பீடத்தின் குழிக்குள் இருந்த ஸ்படிகம் போன்ற கல்லைக் கையில் எடுத்து ஆராய்ந்தபடியே "மோகன் உன் குழந்தைகள் எல்லாக் குழந்தைகளையும் போலல்ல. மகா புத்திசாலிகள். தைரியசாலிகளும்கூட. அவர்களை நீ வரவழைக்காதிருந்தால் - இந்தத் தாமிரப் பட்டயத்தையோ, இந்தக் கோயிலையோ நாம் பார்த்திருக்கவே முடியாது" என்று நித்யாவையும் சத்யாவையும் மனதாரப் பாராட்டினார் புண்ணியகோடி. "தாமிரப் பட்டயத்தில் குறிப்பிட்டுள்ளபடி, சூரிய ஒளியை இந்தச் சூரிய காந்தக் கல்லில் குவித்து - அம்பிகையின் 'அட்டிகை'யின் மீது பாய்ச்சி என்ன ஆகிறது என்பதைப் பார்ப்போம்" என்று செயலில் இறங்கியபோது ஆயிரம் வாட் மின்சார ஒளி போல - அதிலிருந்து ஓர் ஒளிக்கதிர் வெளியேற - அதை அப்படியே அம்மனின் மார்பிலுள்ள சந்திர ஹாரக் கல்லின் மீது பாய்ச்சினார். அனைவரும் மூச்சு விடவும் மறந்து இமைக்காமல் அதையே பார்த்துக் கொண்டிருக்கும் போது அந்த அதிசயம் நிகழ்ந்தது!

மண்ணால் உருவான அம்மன் களிமண் சிலை மெள்ள மெள்ள உருகி வழியலாயிற்று. அதனுள்ளே ஜகஜ் ஜோதியாகத் தங்கத்தினாலான துங்கபத்ராதேவி - பங்காரு துங்காவாகக் காட்சியளித்தாள். "ஆஹா - ஆஹா! அற்புதம்!" என்ற குரல்கள் உணர்ச்சி மேலீட்டினால் வெளிப்பட்டன.

"பகைவனின் கையில் பங்காரு துங்கா சிக்கக் கூடாது என்பதற்கு எத்தகைய ஏற்பாடுகளை செய்திருக்கிறார்கள்? தேவி சிலையின் மீது மெழுகைப் பூசி, மெழுகின் மீது மண்ணைக் குழைத்து அப்பி தங்கச் சிலையை, களிமண் பொம்மையாக்கி, அதை யாரும் காண முடியாதபடி இந்தக் குடைவரைக் கோயிலில் கொண்டு வந்து வைத்து பிறர் அணுக முடியாதபடி, கோயில் வாயிலைப் பாறையால் மூடி - ஆஹா அற்புதம் - ஆச்சரியம்! நம் முன்னோர்களின் அறிவுத் திறமையை எப்படிப் பாராட்டுவது என்றே புரியவில்லை - அதற்கான தகுதியும் நமக்கில்லை" என்றார் புண்ணியகோடி.

"தங்கச் சிலையைத் தவிர வேறு புதையல்களும் கோயிலில் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்களே

புரொபஸர் சார். அதையும் கண்டுபிடித்தால்தானே நாம் மேற்கொண்ட பணி முழுமை பெறும்'' என்றார் மோகன்.

"அந்த மர்மமும் இதே தாமிரப் பட்டயத்தில் குறிப்பிட்டிருக்கிறதே - நீ பார்க்கவில்லையா?" என்றார் புண்ணியகோடி.

"நீங்கள் எதைச் சொல்லுகிறீர்கள்..?" புரியாமல் விழித்தார் மோகன்.

"சந்திரஹாரத்தில் ஒளிர விட்ட சூரிய ஒளியை அம்பாளின் நெற்றிச் சுட்டியிலுள்ள ரத்தினக் கல்லில் செலுத்தும்படி பட்டயத்தில் கோடிட்டுக் காட்டி இருக்கிறது. அதைத்தான் சொல்கிறார் புரொபஸர் அங்கிள்'' என்றாள் நித்யா.

"ஆமாம் மோகன்... கதை உருகி தங்கச் சிலை வெளிப்பட்டது போல ஏதாவது அதிசயம் நிகழலாம் -'' என்று சூரிய காந்தக் கல்லில் மீண்டும் ஆதவனின் கதிர்களைக் குவிக்க முற்பட்டார். குவித்த ஒளிக் கீற்றை தங்கச் சிலையின் நெற்றிச் சுட்டியில் பதித்துள்ள ரத்தினக் கல் மீது பாய்ச்சினார். அந்தச் சிவப்புக் கல்லிலிருந்து பிரதிபலித்தது தீப் பிழம்பு போன்ற ஓர் ஒளி. அது குகைக் கோயிலின் விதானத்திலே படிய - புகையும் தீஜ்வாலையும் கிளம்ப - கோயில் விதானத்துப் பாறை பொடித்துக் கீழே உதிர, அங்கு விசாலமான ஒரு தளம் இருப்பது தெரிந்தது. ''பழங்காலத்து வீடுகளில், மாடிப்படியோடு கூடிய மேல் தளம் இருக்காது. ஆனால், நகை நட்டு போன்ற விலை மதிப்புள்ள பொருள்களை பத்திரப்படுத்த மேலே ஒரு தளம் அமைத்திருப்பார்கள். அங்கு ஏதோ விஷயமிருக்க வேண்டும். அங்கு போக நம்மிடம் ஏணி இல்லை. பரவாயில்லை, நம் ஆட்கள் சத்யாவைத் தன் தோளில் தூக்கிக் கொள்ளட்டும். சத்யா அந்த விதான விளிம்பைப் பிடித்தபடி மேலே போய்... அங்குள்ளதைப் பார்த்து நமக்கு அறிவிக்கட்டும்'' என்று கூறினார் புரொபஸர்.




புண்ணியகோடியின் உதவியாளர்கள் இருவரின் தோள் மீது கால் பதித்துத் தாவி ஏறிப் போனார்கள் சத்யாவும் டிங்கும்.

"இங்கு ஒரே இருட்டா இருக்கு. எதுவுமே தெரியலே'' என்றான் சத்யா. உடனே தீவட்டியை மேலே அனுப்பினார்கள். அடுத்த விநாடி சத்யா - டிங்குவிடமிருந்து மகிழ்ச்சிக் கூச்சல் எழுந்தது. தொடர்ந்து, சத்யா தன் இரு கைகளிலும் விதவிதமான அரசகுலத்து ஆபரணங்களைக் கொத்தாக அள்ளிப் பிடித்துக் கொண்டு காட்சியளித்தான்.

"இங்கே பேழை பேழையா ஆபரணங்கள் ஏராளமா இருக்கு. வெண்கலப் பாத்திரங்களில் தங்கக் காசுகள் வேறு! நீங்கள் தேடி அலைந்த புதையல் முழுவதும் இங்கே இருக்கு...!'' என்றான் டிங்கு.

"காரியங்கள் எவ்வளவு துரிதமாக நடந்து விட்டன! நம் முன்னோர்கள், 'எதற்கும் வேளை வர வேண்டும்' என்பார்கள். புதையல் வெளியே வர வேண்டிய வேளை வந்ததும் - டிங்கு என்ற காட்டுச் சிறுவனும் தாமிரப் பட்டயமும் நித்யாவும் சத்யாவும்



ஆசிரியர்: ஒரு இரும்புத்துண்டை வெளியில் வைத்திருந்தால் என்ன மாறுதல் ஏற்படும்?

மாணவன்: துருப்பிடிக்கும் சார்!

ஆசிரியர்: அதேபோல் ஒரு தங்கக் கட்டியை வெளியே போட்டிருந்தால்...?

மாணவன்: காணாமல் போய்விடும் சார்!

— திண்டிவனம் சி. கௌதமன்

கூடி வர, புதையல் தன்னை வெளிப்படுத்திக் கொண்டு விட்டது. பங்காரு துங்காவின் மகிமையே மகிமை!'' என்று நெகிழ்ந்து போனார் புண்ணியகோடி. அப்போது தொலைவில்–

ஜீப்புகளின் ஓசை கேட்கவே, எல்லோரது கவனமும் அங்கு திரும்பியது. நாலைந்து போலீஸ் வேன்கள். ஒரு ஜீப்பிலிருந்து அரங்கநாதன் இறங்கினார். இன்ஸ்பெக்டர் பின் தொடர, ''தமிழ் சினிமாவில் கதையை முடிக்க, வில்லன்களைக் கைது செய்ய கடைசி நிமிஷத்தில் போலீஸ் வருவது போல – நான் போலீஸோடு வந்து விட்டேன்!'' என்று தமாஷ் செய்துகொண்டே நித்யா – சத்யாவை இழுத்து அணைத்துக் கொண்டார். ''எப்படி இந்தக் குண்டர்களைச் சமாளித்தீர்கள்?'' என்றார் வியப்போடு.

''எங்களால் முடியாததை இந்தக் காட்டுச் சிறுவன் டிங்குவும் நித்யாவும் – சத்யாவும் சாதித்தார்கள்'' என்ற மோகன், அரங்கநாதனுக்கு நடந்த நிகழ்ச்சிகளைச் சுருக்கமாக விளக்கினார்.

''என் பண்ணை வீட்டை ஜெயராஜ் முற்றுகையிட்டதையும் நித்யாவும் சத்யாவும் அங்கிருந்து தப்பியதையும் அறிந்து நான் தாமதிக்காமல் போலீஸ் உதவியை நாடினேன்'' என்று தன் தரப்புத் தகவல்களை விளக்கினார் அரங்கநாதன்.

ஜெயராஜும் அவன் ஆட்களும் கைது செய்யப்பட்டு போலீஸ் வேனில் ஏற்றப்பட்டனர். சரித்திரச் சின்னங்களான புதையல் – சிலை ஆகியவை வேன்களில் ஏற்றப்பட்டு அரசாங்க உடைமையாகி, மியூசியத்துக்குக் கொண்டு செல்லப்பட்டன.


நித்யா சத்யாவிடம் விடை பெற்றுக் கொண்ட டிங்குவிற்கு, சத்யா தன் ரிஸ்ட் வாட்சைக் கழற்றி அவன் கையில் அணிவித்தான். ''எங்கள் நினைவாக இதை வைத்துக் கொள்'' என்றான். டிங்குவிற்கு ஏக குஷி. ''பாதிரியாரின் பாக்கெட் வாட்ச்சைப் பார்த்து நான் ஏங்குவேன். ஆனால் நான் சட்டை போட்டாத்தானே அந்த மாதிரி வாட்சை வைச்சுக்க முடியும்னு சமாதானப் படுத்திப்பேன். இது, அதைவிட உசத்தி. சட்டை அணிய வேணாம். கையிலேயே கட்டிக்கலாம்!'' என்று குதூகலப்பட்டான்.

''ஆமாம்! இதுக்கு சாவி கூடக் கொடுக்க வேண்டாம். தானாகவே ஓடும் ஆட்டோமாடிக் வாட்ச் இது'' என்றான் நித்யா. அவர்களைப் பிரிய மனமில்லாமல் அவர்கள் போவதையே பார்த்துக் கொண்டு துங்கபத்ரா நதிக்கரையில் நின்றான் டிங்கு. தன் ரிஸ்ட் வாட்சைத் தடவியபடி..

இன்னும் பெட் ரெஸ்டிலே இருக்கும் ரங்குடுவைப் போய்ப் பார்த்தார்கள் நித்யாவும் சத்யாவும் தங்கள் டாடியுடன். மறக்காமல் அவனுக்கு ஒரு உயர்ந்த ஜாதி நாய்க் குட்டியையும் வாங்கிப் பரிசளித்தார்கள். ரங்குடுவின் கண்கள் கலங்கின. ''நீ டெல்லிக்கு வந்துடு. எங்க வீட்டிலேயே நித்யா, சத்யாவோடு இருக்கலாம்'' என்றார் மோகன். ''நீ குணமானதும் உன்னை டெல்லி அனுப்பி வைக்க ஏற்பாடு செய்கிறேன்!'' என்றார் அரங்கநாதன்.

ரங்குடுவினால் பதில் சொல்லக் கூட முடியவில்லை. அத்தனை சந்தோஷம் அவனுக்கு!

(நிறைவுற்றது)



யார் வல்லவர்?
வேணு வாரியர்
அரேபியாவில் சஜ்மான் என்ற சுல்தான் வாழ்ந்து வந்தார். அவரிடமிருந்த பந்தயக் குதிரைகளைக் கவனித்துக் கொள்ள ஒரு ஆள் தேவைப்பட்டது. ஒரு நாள்—
ஐயா, உங்களைக் காண இருவர் வந்திருக்கின்றனர்.
அப்படியா? வரச் சொல்.
ஐயா, நாங்கள் உங்கள் பந்தயக் குதிரைகளைக் கவனித்துக் கொள்ள வந்திருக்கிறோம்.
இரண்டு குதிரைகளைக் கவனிக்க இருவர் எதற்கு? ஒருவனை அனுப்பிவிட வேண்டும்.
நீங்கள் இருவரும் குதிரைகளைப் பார்த்து விட்டு வாருங்கள்.
சரிங்க ஐயா.
குதிரை லாயத்தில்—
அருமையான குதிரைகள்!



இருவரும் திரும்பினர்.
குதிரைகளைப் பார்த்தீர்களா?
ம்... இரண்டும் அருமையானவை.
எந்தக் குதிரை மிகவும் சிறந்தது?
கறுப்புக் குதிரை தான் சிறந்தது. இதைச் சுலபமாக தோற்கடிக்க முடியாது.
சுல்தான் மற்றொருவனைப் பார்த்து—
நீ என்ன சொல்றே?
கறுப்புக் குதிரை நல்ல குதிரைதான். ஆனால் நீண்ட காலத்திற்குப் பந்தயத்தில் ஓட முடியாது.
ஏன்?
குதிரைகளின் பல்லைப் பார்த்தே ஆரோக்கியத்தை முடிவு செய்து விடலாம். கறுப்புக் குதிரையின் பற்கள் பழுதடைந்து விட்டன. எனவே வெள்ளைக் குதிரைதான் சிறந்தது.
இருவரில் இவன்தான் கெட்டிக்காரன்.
சுல்தான் உடனே அவனை வேலைக்குச் சேர்த்துக் கொண்டார்.

கோகுலம் க்விஸ்


1. பங்களாதேஷ் பிரதமர் ______________
2. பறவைகளுக்கு ______________ சுரப்பிகள் இல்லை.
3. மேற்கு இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டன் ______________
4. மகுடி இசையைப் பாம்பு ______________
5. நேபாள தலைநகர் ______________
6. அச்செழுத்துகளை உருவாக்கும் முறையைக் கண்டறிந்தவர் ______________
7. எலும்பு மற்றும் பல் வளர்ச்சிக்கு இன்றியமையாத நுண்ணூட்டச் சத்து ______________
8. சென்ற ஒலிம்பிக் போட்டியில் பரிசு வென்ற இந்திய டென்னிஸ் வீரர் ______________
9. வோட்டுரிமை வயது ______________
10. கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடம் ______________



இங்குள்ள பத்து கேள்விகளுக்கும் விடைகளைக் கண்டுபிடியுங்கள். சரியான விடைகளை எழுதிய 20 பேருக்கு பரிசு வழங்கப்படும். உங்கள் முகவரியை எழுதுவதோடு முகவரிக் கூப்பனையும் ஒட்டி அனுப்புங்கள். அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

முடிவு தேதி **31.5.2000**

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை – 97





அழ. வள்ளியப்பா நினைவுப் பரிசுப்
போட்டியில் இரண்டாவது பரிசு
பெறும் முதல் கவிதை


முத்து முத்து மழைத்துளி
மண்ணில் வந்து விழுந்தது;
மண்ணின் நல்ல வாசனை
மேலே கமழ்ந்து எழுந்தது!

தத்தித் தத்தி தவளையும்
தனனா பாட வந்தது;
சிட்டுக் குருவி உடம்பினை
சிலிர்த்து எழுந்து கொண்டது!

குட்டிக் குட்டிக் கப்பலை
வெட்டித் தாளில் செய்யலாம்;
முற்றம் தேங்கும் நீரினில்
மிதக்க விட்டும் மகிழலாம்!

பச்சைப் பச்சைப் புற்களும்
பட்டுப் போல வளருமே;
பள்ளி செல்லும் பாதையில்
பட்டுப் பூச்சி நகருமே!





வண்ண வண்ணக் காட்சிகள்
வானம் சிந்தும் மழையிலே;
வாழ்த்துச் சொல்லிப் பாடலாம்
வெல்லம் போன்ற தமிழிலே!

— நெல்லை. கவிதாசன்,
திருநெல்வேலி.

வானம் சிந்தும் மழையிலே!



அழ. வள்ளியப்பா நினைவுப் பரிசுப் போட்டியில் இரண்டாவது பரிசு பெறும் முதல் கட்டுரை

மனிதர்கள் மற்றும் உலகத்து உயிரினங்களின் வளமான எதிர்கால வாழ்க்கை சுற்றுப்புறச் சூழலைப் பொறுத்துள்ளது. தூய்மையான நீரும் சுத்தமான காற்றும் உயிர் வாழ இன்றியமையாதவை. ஆரோக்கியமான வாழ்வுக்கு நாம் பயன்படுத்தும் பொருட்கள் தூய்மையாக இருக்க வேண்டும்.

அறிவியல் முன்னேற்றமும் ஆலைகளின் அதிகரிப்பும் மக்கட் தொகை பெருக்கமும் சுற்றுச் சூழலை மாசுபடுத்தியுள்ளன. காற்று மண்டலமும் நீர் நிலைகளும் வெகுவாக மாசுபடுத்தப்பட்டுள்ளன. வன வளம் குறைதலும் நகரங்கள் விரிவாகிக் கொண்டே போவதும் சூழலை மேலும் பாதித்து வருகிறது.


ஆரோக்கியமாக வாழும் மனிதனே முழு வாழ்வு வாழ்கிறான் என்ற கூற்றுப் படி நாம் உடல் நலத்துடன் வாழ சுத்தமான காற்றும் தூய்மையான நீரும் அவசியமாகிறது. தெருக்களிலும் வீதிகளிலும் குப்பைகளும் மழை நீரும் கழிவு நீரும் தங்காவண்ணம் சுற்றுப்புறத்தைத் தூய்மைப்படுத்துதல் அவசியம்.

மக்களின் நல்வாழ்வுக்கு இயற்கை காடுகளையும் மரங்களையும் கடல்களையும் ஆறுகளையும் இன்னும் பல வளங்களையும் படைத்துள்ளது. மனிதனின் பல்வேறு செயல்கள் இயற்கையை பாதிப்புக்கு உள்ளாக்குகிறது. காடுகள் அழிக்கப்படும் பொழுது மழை வளம் குறைகிறது. ரசாயனக் கழிவுகள் காற்று மண்டலத்தில் பாதிப்பு ஏற்படுத்தி, புவியின் ஓசோன் படலத்தைப் பாதிக்கிறது. இதனால் புவியின் வெப்பம் அதிகரித்து பனி மலைகள் உருகி கடல் மட்டம் அதிகரித்து நிலப்பகுதி நீரில் மூழ்கும் ஆபத்தும் இன்னும் பல அபாயங்களும் நேரிடலாம். நம் எதிர்கால சந்ததியினர் மகிழ்ச்சியாக வாழ இவற்றிலிருந்து நாம் புவியை காப்பாற்றியே ஆக வேண்டும்.

பாலைவனம் சோலைவனம் ஆக வேண்டும்
பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்

– கவிமணி

சூழலைக் காப்பது சுகம்!






சுற்றுச் சூழல் பாதுகாப்பில் மரங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. மரங்கள் காற்றிலுள்ள கரியமில வாயுவை உட்கொண்டு ஆக்ஸிஜனை வெளியிட்டு காற்று மண்டலத்தை தூய்மைப்படுத்துகின்றன. மரங்கள் வெட்டுவதைத் தவிர்த்தும் இயற்கைக் காடுகளைப் பாதுகாத்தும் செயற்கை சமூகக் காடுகளை உண்டாக்கியும் வனவளத்தைப் பெருக்க வேண்டும்.

நானிலம் செழிக்க மரங்கள் நடுவதும் மரங்கள் வளர்ப்பதும் அவசியமாகிறது. மழைக்கு அடிப்படை மரங்களே ஆகும். மரம் வளர்ப்போம்; மழை பெறுவோம். மழை இல்லையேல் மண்ணில் விவசாயம் இல்லை; விவசாயம் இல்லையேல் மன்னுயிர் இல்லை. எனவே மரங்கள் வளர்ப்பது நமது முதல் கடமையாகும்.


'பழம் நிறைந்த சோலையைப்
பார்த்துச் செல்லும் கிளியே போல்
வளம் நிறைந்த நாட்டிலே
வந்து சேரும் மக்கள் போல்'

– அழ. வள்ளியப்பாவின் பாடலுக்கேற்ப வளம் நிறைந்த நாட்டையே மக்கள் விரும்புவர். அதனால் சூழலைப் பாதுகாத்து வளம் பெருக்கி மகிழ்ச்சியாக வாழ்வோம்!

– ஆர். வினோதினி,
எட்டாம் வகுப்பு,
அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி,
ஏரல்,
தூத்துக்குடி மாவட்டம்.



திண்பண்டங்களைக் கண்டுபிடியுங்கள்!



இங்கிருக்கும் பொருள்களில் பலவற்றின் எழுத்துகளைப் பயன்படுத்தி குறைந்தது பத்துத் தின்பண்டங்களின் பெயர்களைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்! பயன்படுத்திய எழுத்துகளை மீண்டும் பயன்படுத்தலாம். (விடை: 47–ஆம் பக்கம்)

பொம்மை செய்வோமா?

தேவையான பொருட்கள்:

தடிமனான பேப்பர், பென்சில், கட்டர், வண்ணக் காகிதம், ஊசி நூல், பசை, பாட்டில், டென்னிஸ் பந்து, பேனா, வண்ணக் கம்பளி நூல்.

1. தடிமனான தாளை 18 செ.மீ அகலத்தில் வட்டமாக வெட்டிக் கொள்ளுங்கள். பாட்டிலை அதன் மீது நடுவில் வைத்து பேனாவால் வட்டம் போடுங்கள். படத்தில் காட்டியபடி வட்டத்தின் நடுவே கோடுகளைப் போட்டு கட்டரின் உதவியால் வெட்டுங்கள்.

2. பாட்டிலை வெட்டிய பகுதியினுள் விடுங்கள்.

3. வண்ணத் தாளை 25 செ.மீ x 100 செ.மீ அளவிற்கு வெட்டிக் கொள்ளுங்கள். நீங்கள் உபயோகப்படுத்தும் பாட்டிலின் உயரத்திற்கேற்றவாறு அளவுகளைப் பயன்படுத்திக் கொள்ளவும். பிறகு 1.5 செ.மீ அகலம் வருமாறு அடுக்குகளாக மடிக்கவும். பிறகு மடித்த பகுதிகளை ஊசி நூலால் கோர்க்கவும்.

4. பாட்டில் மீது வண்ணத் தாளை வைத்து இருபுறமும் உள்ள நூலை இறுக்கிக் கட்டுங்கள். பொம்மையின் டிரஸ் ரெடி.


5. வேறொரு வண்ணத் தாளில் கைகள் வரைந்து, வெட்டி டிரஸ்சின் மீது சரியான இடத்தில் ஒட்டி விடவும்.

6. பாட்டிலின் மேற்புறத்தில் படத்தில் காட்டியபடி வண்ணத்தாளை வெட்டி ஒட்டி விடவும்.


7. டென்னிஸ் பந்தை எடுத்து கண், மூக்கு, வாய் வரைந்து பாட்டிலின் விளிம்பில் ஒட்டி விடுங்கள். தலைக்குக் கம்பளி நூலை வெட்டி ஒட்டி விடவும். இதோ அழகான பொம்மை ரெடி.



1



2



3



4



5



6



7



8

பொன்னாக மாறிய துறவி!

மணிபத்ரன் செல்வத்தின் சிகரத்திலிருந்து ஏழையானவன். உறவும் நட்பும் அவனை ஒதுக்கின. வேலை எதுவும் கிடைக்காததால் வறுமை அவனை வாட்டியது. வாழ்க்கை வெறுத்தது. தற்கொலை செய்து கொள்ள முனைந்தான். விஷம் சாப்பிடவும் தூக்கு மாட்டிக் கொள்ளவும் அவனுக்குப் பிடிக்கவில்லை.

பட்டினி கிடந்து உயிர் விடலாமென முடிவு செய்தான். அசதியில் தூங்கி விட்டான். கனவில் ஒரு துறவி வந்தார்.

"மணிபத்ரா! இன்றோடு உன் தரித்திரம் தொலைந்தது. தற்கொலை செய்து கொள்வது பாவம். அந்த எண்ணத்தை நீக்கிவிடு. போன ஜென்மத்தில் என்னிடம் நீ ஏராளமான செல்வத்தைக் கொடுத்து ஏழை, எளியவர்களுக்கு தான தர்மம் செய்யச் சொன்னாய்! நீ சொன்னபடி செய்யாமல் நான் என் சுய நலத்துக்கும் சுகபோகங்களுக்கும் அதை செலவழித்தேன். நோய் வரக் கூடாதென்றும் இளமை அப்படியே இருக்க வேண்டுமென்றும் தங்கத்தைப் பொடி செய்து சாப்பிட்டேன். அதனால் என் சரீரம் பொன்னாகி விட்டது. என்னால் சாப்பிட முடியவில்லை; தூக்கம் வரவில்லை. எனக்கு நற்கதி உன்னால்தான் கிடைக்கும். எனக்கு வாழ்க்கை சலித்து விட்டது.

"என் தங்க உடலை ஒரு தடியால் நீ தலையில் அடித்தால் என் ஆத்மா விடுதலை பெறும். என் பொன் உடலை வெட்டி விற்று வியாபாரம் செய்து நீயும் பணக்காரனாகி விடலாம். நாளைக் காலை நான் உன் வீட்டிற்கு வருகிறேன்'' என்றார்.


மணிபத்ரன் விழித்தெழுந்தான். கனவு பலிக்குமா என்ற சந்தேகம் அவன் மனதைக் குடைந்தது. விடிந்தால் தெரிகிறது என்று படுத்துத் தூங்கினான்.



பொழுது புலர்ந்தது. காலை வேலைகளை முடித்துக் கொண்டு தண்டாந்தடியோடு வாசல் முகப்பில் அமர்ந்தான் மணிபத்ரன்.

கனவில் கண்ட துறவி சிரித்துக் கொண்டே அவன் வீட்டினுள் நுழைந்தார். மணிபத்ரன் அவர் தலையைக்

கோகுலம்



NAME...

STANDARD...


SUBJECT..

SCHOOL...

UNIT TRUST OF INDIA

Children's College and Career Fund

கோகுலம்



NAME...

STANDARD...

SUBJECT..

SCHOOL...

UNIT TRUST OF INDIA

Children's College and Career Fund

கோகுலம்



NAME...

STANDARD...

SUBJECT..

SCHOOL...

UNIT TRUST OF INDIA

Children's Gift Growth Fund.

கோகுலம்



NAME...

STANDARD...

SUBJECT..

SCHOOL...

UNIT TRUST OF INDIA

Children's Gift Growth Fund.

கோகுலம்



NAME..

STANDARD..

SUBJECT..

SCHOOL..

UNIT TRUST OF INDIA

Children's Gift Growth Fund.

கோகுலம்



NAME..

STANDARD..


SUBJECT..

SCHOOL..

UNIT TRUST OF INDIA

Raj Lakshmi

கோகுலம்



NAME..

STANDARD..


SUBJECT..

SCHOOL..

UNIT TRUST OF INDIA

Raj Lakshmi

கோகுலம்



NAME..

STANDARD..

SUBJECT..

SCHOOL..

UNIT TRUST OF INDIA

Raj Lakshmi

குண்டாந்தடியால் தொட்டது தான் தாமதம். பொன்னாக ஜொலித்தார்.

ஆனால் அடியற்ற மரம் போல் கீழே சாய்ந்தார்.

இதையெல்லாம் வாசலில் சென்ற அவனது நண்பன் முத்தழகு பார்த்துத் திகைத்தான்.

மணிபத்ரன் முத்தழகுக்குக் கொஞ்சம் பணம் கொடுத்து, "கண்ணால் கண்டதை எவரிடமும் சொல்லாதே" என்று கேட்டுக் கொண்டான். முத்தழகும் ஒப்புக் கொண்டு வீட்டிற்குச் சென்றான்.

துறவிகளைத் தலையில் தட்டினால் தங்கமாகிவிடுவார்கள் என்று தப்புக் கணக்குப் போட்டான்.

மறுநாள் காலை குளித்து நீராடி, திருநீறணிந்து ஒரு துறவியைச் சாப்பிட வீட்டிற்கு அழைத்தான். அவர் வந்ததும் குண்டாந் தடியால் தலையில் அடிக்க அவர் மயங்கிச் சரிந்தார்.


இதைப் பார்த்த முத்தழகின் மனைவி தன் கணவனிடம் "அவரை ஏன் அடித்தீர்கள்?" என்று கேட்டாள். குழந்தைகள் பயந்து வாசலுக்கு ஓடிவிட்டனர். அந்த ஊர் தலையாரி அப்போது வீதியில் போய்க் கொண்டிருந்தான். குழந்தைகளிடம் அழும் காரணத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டு வீட்டிற்குள் வந்து முத்தழகை அழைத்துக் கொண்டு நீதி மன்றம் சென்றான்.

நீதி மன்றத்தில் எல்லா உண்மைகளையும் சொன்ன முத்தழகு "மணிபத்ரனுக்கு மட்டும் தண்டனை இல்லையா?" என்று கேட்டான்.

மணிபத்ரனையும் கூப்பிட்டு விசாரித்தனர். மணிபத்ரன் வீடு சென்று தங்கமான துறவியின் உடலையும் பார்த்தனர். அவர் உடலைச் செதுக்கியும் கூட அதில் ரத்தமோ, சதையோ, எலும்போ எதுவுமே இல்லாதது கண்டு அதிசயித்தனர்.

நல்ல வேளையாக முத்தழகு தாக்கிய துறவியும் பிழைத்துக் கொண்டார். முத்தழகை கழுதைமேலேற்றி ஊர்வலம் விட்டனர்.

— பவித்ரா



சாதனைச் சிறுமி

கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம் நகரில் வசிக்கும் டி.ஜி. சிந்துவுக்கு வயது ஏழு. சிறு வயதிலேயே தமிழின் மீது ஆர்வமும் மனப்பாடம் செய்யும் திறமையும் இருந்திருக்கிறது. நான்கரை வயதில் மூன்னூறு குறள்களை ஒப்புவித்த சிந்து இன்று ஆயிரம் குறள்களை மனப்பாடமாகச் சொல்கிறாள். இது தவிர தமிழ் வருடங்கள் 60, கௌரவர்கள் 100, நாயன்மார்கள் 63, பதினென்கீழ் கணக்கு நூல்களின் பெயர்கள், ஆய கலைகள் 64 என இவள் ஒப்பிக்கும் வரிசைகள் சீனச் சுவர் போல நீண்டு கொண்டே போகின்றன.

காமராஜ் மெட்ரிக் பள்ளியில் இரண்டாம் வகுப்பு படிக்கும் சிந்து கர்நாடக சங்கீதமும் பரதநாட்டியமும் பயின்று வருகிறாள். படிப்பிலும் முதல்.

இதுவரை பல சங்கங்களும் நிறுவனங்களும் சிந்துவின் திறமையைப் பாராட்டி பரிசும் வழங்கியிருக்கின்றன.

சிந்து மேலும் பல சாதனைகளைப் படைக்க வாழ்த்துவோம்!

தின்பண்டங்களைக் கண்டுபிடியுங்கள்!


விடை:

1. லட்டு	7. வடை
2. மிட்டாய்	8. சீடை
3. பூரி	9. அல்வா
4. பூந்தி	10. ஜாங்கிரி
5. பர்பி	11. அடை
6. தயிர்	12. புட்டு

18 சிந்துபாத்தின் சாகசப் பயணங்கள்!

அமைப்பு: விஜி   படம்: லலிதா





சிறிது நேர ஓய்வுக்குப் பின் நடக்க ஆரம்பித்தனர்.
ஐயோ! பணம், பொருள் எல்லாம் போச்சே!
பணம் போனால் என்ன? உயிர் பிழைத்ததே போதும்.
நீண்ட பயணத் துக்குப் பின் –
பளபளப்பாக மின்னுதே என்ன?
வைரம் மற்றும் மாணிக்கக் கற்கள்தான் இப்படி ஒளி வீசுகின்றன.


எல்லோரும் எடுத்துக் கொள்வோம்.
வைரம் கிடைச்சு என்ன பயன்? சரியான சாப்பாடு கிடைக்கலையே!
தீவில் தங்கியிருந்தவர்களுக்குச் சூளை எனப்படும் கொடிய நோய் தாக்கியது.
நான் சாகப் போறேனே!
சே! நம் நண்பர்கள் பலரை சூளை நோய் ஆட்கொண்டு விட்டது. எவ்வளவு கொடுமை?


சிந்துபாத் உடனே நாம் இங்கிருந்து கிளம்ப வேண்டும்.
ஆமாம்! இல்லையென்றால் நோய் நம்மையும் கொன்றுவிடும் வாருங்கள்.
சிறிது நேரத்தில் ஒரு நதி தென்பட்டது..
அந்த நதியில் நீந்தி அக்கரை செல்வோமா?
நீந்தத் தெம்பு இல்லை. தெப்பம் தயாரிக்கலாம்.
தெப்பத்தில் ஏறி பயணம் செய்தனர்.
நதியோட வேகம் அதிகமாயிருக்கு. கறுப்பாக ஏதோ தெரியுதே என்ன?

(தொடரும்)






ஆறுதல் பரிசு

டி. ராபின் சாலமன் ரத்ன ராஜ்,
ஏழாம் வகுப்பு, வேலூர்.

ஓவியப் போட்டி முடிவுகள்!

மார்ச் இதழில் 'கிளி' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள்.



இரண்டாம் பரிசு

எ. சிவராஜன்,
ஏழாம் வகுப்பு,
அனிதா குமரன்
மெட்ரிகுலேஷன்
பள்ளி,
தண்டுபத்து.




முதல் பரிசு

பி. தேவி,
நடராஜபுரம்,
நாகர்கோவில்.



ஆறுதல் பரிசு

சி. கோபி,
பதினோராம் வகுப்பு,
குத்தாலம்.



மூன்றாம் பரிசு

செ. ரேணுகா,
ஒன்பதாம்
வகுப்பு,
ரோஸ்மேரி மேல்
நிலைப் பள்ளி,
பாளையங்கோட்டை.

விடுகதைப் பக்கம்

1) முத்து வீட்டுக்குள்ளே தட்டுப் பலகை - அது என்ன?

2) நிலத்திலே முளைக்காத மரம்; தலையிலே முளைக்கும் மரம். கிளை உண்டு; ஆனால் இலை இல்லை- அது என்ன?

3) இங்கிருந்து பார்த்தால் இரும்புக்குண்டு. எடுத்துப் பார்த்தால் இனிய பழம் - அது என்ன?

4) ஆயிரம் பேர் வந்து சென்றாலும் வந்த சுவடு தெரியாது- அது என்ன?

5) கறுப்புச் சட்டைக்காரன். சட்டையை கழற்றினால் வெள்ளைக்காரன்- அவன் யார்?

6) நீரிலே பூக்காத பூ; நிலத்திலே வந்து பூத்திருக்கும் வெள்ளைப் பூ- அது என்ன பூ?

- எஸ். ஜவஹர்
குமேஷ், சேலம்.

விடை: 1) நாக்கு 2) மான் கொம்பு 3) விளாம்பழம் 4) எறும்பு 5) உளுந்து 6) உப்பு

ஆடி ஓய்ந்தபின்

1) ஆடி ஓய்ந்தபின் அம்மணி வருவாள்- அவள் யார்?

2) தாடி சாமியாருக்குக் கண் உண்டு, கால் இல்லை. கல்லால் அடித்தால் பல்லைக் காட்டுவார்- அவர் யார்?

3) இந்த மானால் நடக்க முடியாது - எந்த மான்?

4) ஆடாமல் பாடுவான்; அசையாமல் பேசுவான் - அவன் யார்?

- கே. ஐஸ்வர்யா, குன்னூர்.

விடை: 1) ஆவணி 2) தேங்காய் 3) அந்தமான் 4) ரேடியோ.



1) வீட்டுக்கு வீடு தவறாது வரும். புத்தாண்டின் முதல் விருந்தாளி இவர்தான்- அவர் யார்?

2) பனிரண்டு பிள்ளைகள் உள்ள பெரிய குடும்பத்தில், இந்தப் பிள்ளை மட்டும் சவலைப் பிள்ளை! - அது யார்?

3) அடுத்தடுத்து வரும் வரி; ஆனால் யாரையும் பாதிக்காத வரி - அது என்ன வரி?

4) ஊரறிய ஓடும் பாம்பு, ஒரு திசையில் மட்டுமே ஓடும் பாம்பு - அது என்ன?

5) எவ்வளவு தண்ணீர் குடித்தாலும் இவன் வயிறு நிரம்பாது - அவன் யார்?

- எஸ். கவிதா, நெல்லை.

விடை: 1) காலண்டர் 2) பிப்ரவரி மாதம் 3) ஜனவரி, பிப்ரவரி 4) ஆறு 5) கடல்.

1) கூனிக் கிழவிக்கு வயிறு நிறைய பற்கள் - அது என்ன?

2) இரவிலே கைவிளக்கேந்திய காரிகைகள்- நாங்கள் யார்?

3) காட்டிலே துளி, துளியாய் இரத்தம்- அது என்ன?

4) அந்தரத்திலே ஒரு கொட்டில் - அது என்ன?

- டெ. ஜோஷ்வின்,
ஐரேனிபுரம், குமரி மாவட்டம்.

விடை: 1) கதிர் அரிவாள் 2) மின்மினிப் பூச்சிகள் 3) குன்று மணி 4) தூக்கணாங் குருவிக் கூடு

1) தொட்டால் தோலை உரிப்பான்; தண்ணீரை ஊற்றினால் கத்துவான் - அவன் யார்?

2) ஒரே குகையில் 50 திருடர்கள். வெளியே தலை காட்டினால் தலையைக் காணோம் - அது என்ன?

3) எல்லா விஷயத்தையும் தெரிந்த எனக்குப் பேசத் தெரியாது; காலையில் வீடு தேடி வருவேன்- நான் யார்?

4) எல்லா இடத்திலும் இருப்பேன். ஆனால் என்னை பிடிக்க முடியாது - நான் யார்?

5) பூப்பூவா இருக்கும். ஆனால் தலையில் வைக்க

முடியாது - அது என்ன?

- என். கார்த்திகேயன், தேனி.

விடை: 1) கொதிக்கும் எண்ணெய், 2) தீப்பெட்டி 3) நாளிதழ் 4) காற்று 5) காலி ஃபிளவர்

1) வளைந்திருக்கும் கோட்டை; அதன் மூன்று பக்கங்களும் வரிசையாய் வெள்ளைக்காரர்கள் காவல் - அது என்ன?

2) மின்சாரம் இல்லாது டியூப்லைட் பளிச்சென எரியுது- அது என்ன?

3) பச்சைக்குடத்திற்குள் இனிப்பான பானம்- அது என்ன?

- ஆர்.ஏ. சரணா உத்ரா, விக்கிரமசிங்கபுரம், நெல்லை மாவட்டம்.

விடை: 1) வாய், பற்கள் 2) நிலா 3) இளநீர்.

1) இயற்கை தந்த பரிசு; காசில்லாத பரிசு; இல்லை இது என்றால் இந்த உலகம் தரிசு - நான் யார்?

2) பிறந்ததும் இனிப்பாள்; கலந்ததும் புளிப்பாள்; கடைந்தபின் மணப்பாள் - இவள் யார்?

3) விண்ணில் பறக்கும் அது விமானம் அல்ல; நீண்ட வாலுண்டு வானரம் அல்ல; கொம்பு கொண்டு குத்த வரும் பசுமாடும் அல்ல; உறுமும் பின் ஊசலாடும் நாயும் அல்ல - நான் யார்?

- சி. கார்த்திகா, சீர்காழி.

விடை: 1) காற்று 2) பால், தயிர், நெய் 3) காற்றாடி.



1) பச்சைப் புல்லில் துவண்டு வரும்; பவளம் போல் உருண்டு இருக்கும்; காலையில் தோன்றும்; கண்ணாடி போல் பளபளக்கும்- அது என்ன?

2) எட்டாக் கொம்பில் மிட்டாய்ப் பொட்டலம் - அது என்ன?

3) உச்சியில் பச்சைத் தோகை; உள்ளங்காலில் ரோமம்; இனிக்கும் வெள்ளை அமிர்தம்; ஈந்தளித்தாள் இயற்கை நமக்கு - அது என்ன?

- சி.பி. சிவமேனி, திருச்சிராப்பள்ளி.

அம்மணி வருவாள் - அவள் யார்?

விடை: 1) பனித்துளி 2) தேன்கூடு 3) கரும்பு.



1. மெல்ல எழுந்து அடியெடுத்து வைத்ததும் தரை அதிரும் - அது என்ன?

2. தண்ணீரில் மூழ்கியபோதிலும் சிறிதும் கவலைப்பட யாருமில்லை - அது என்ன?

3. ஓட்டை உடைத்துத் தாகம் தீர்த்தேன் - அது என்ன?

4. பகலிலும் இரவிலும் கூட வரும். இருட்டுதான் இவனைப் பிரிக்கும். - அது என்ன?

- க. நஞ்சையன், பாலசமுத்திரம்.

விடை : 1. யானை, 2. மீன், 3. தேங்காய், 4. நிழல்.

அழ. வள்ளியப்பா நினைவுப் பரிசுப் போட்டியில்
இரண்டாவது பரிசு பெறும் முதல் கதை

உதவிக்கு ஓடி வா!



பாலுவின் அறையில் அவனும் நண்பன் கோபுவும் ஒரு புத்தகத்தை வைத்து விவாதித்துக் கொண்டிருந்தனர். அப்போது அலுவலகத்திலிருந்து வந்த பாலுவின் அப்பா, ''கல்யாணி! இன்று முதல் காட்சிக்குப் போக வேண்டும் என்று சொன்னதாலே அரை மணி நேரம் முன்னதாகவே வந்து விட்டேன். புறப்படு'' என்றவர், ''பாலு எங்கே?'' என்று கேட்டார்.

''நான் தயாராக இருக்கிறேன். பாலுவும் கோபுவும் படித்துக் கொண்டிருக்கிறார்கள்''- வந்து கொண்டே கூறினார் பாலுவின் அம்மா.

பாலு இருக்கும் அறைப் பக்கம் பார்த்து, ''பாலு! படத்துக்கு நேரமாயிடுச்சு. புறப்படு'' என்று குரல் கொடுத்தார் அவன் அப்பா.

அதைக்கேட்டு எழுந்து வந்த பாலு, ''நான் வரலே. எனக்கு சினிமாவுக்காக ஆகும் பணத்தைக் கொடுத்து விடுங்கள்'' என்றான்.

பாலுவின் பின்னால் நின்ற கோபு, ''நேற்று என் அப்பாவும் அம்மாவும் சினிமாவுக்குப் போனாங்க. நான் வரலேன்னு சொல்லிட்டு, பணத்தை வாங்கிக்கிட்டேன்'' என்றான்.

''அப்படியா? நான் பார்க்கும் போதெல்லாம் இருவரும் புத்தகத்திலேயே மூழ்கி இருக்கிறீர்கள். அது என்ன புத்தகம் என்று பார்க்க எனக்கு நேரமில்லை. சரி, இப்போ பணத்தைக் கொடுக்கிறேன். நீ இந்த பணத்தை என்ன செஞ்சேங்கிறதைப் பிறகு கவனிக்கிறேன்'' என்று ஒரு இருபது ரூபாய் நோட்டை எடுத்து பாலுவிடம் கொடுத்து விட்டுப் புறப்பட்டார்.

பாலுவும் கோபுவும் மீண்டும் புத்தகத்தில் மூழ்கினார்கள்.

வேகமாக வளர்ந்து வரும் சென்னை நகர விரிவாக்கத்தில் - சற்று தொலைவில், புதிதாக ஒரு நகர் உருவாகிக் கொண்டிருந்தது.

அங்கே - வீட்டு மனைகளுக்கான இடங்கள் பிரிக்கப்பட்டு, கற்கள் நடப்பட்டிருந்தன. மனை வாங்கியவர்களில் ஒரு சிலர் வீடு கட்டத் தொடங்கி இருந்தனர். முதலில் பாலுவின் அப்பா வீட்

டைக் கட்டி முடித்தார். அடுத்த மனை காலியாக இருந்தது. அதற்கும் அடுத்த மனையில் கோபுவின் அப்பாவும் வீட்டைக் கட்டி முடித்து விட்டார். அந்த இரண்டு குடும்பங்கள் மட்டுமே குடியேறி இருந்தன. அங்கொன்றும் இங்கொன்று மாக சில வீடுகள் இருந்தன.

பாலுவும் கோபுவும் வெவ்வேறு பள்ளிகளில் படித்தாலும் ஒத்த நோக்குடைய சிறந்த நண்பர்கள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. அதிகாலையில் புறப்பட்டுச் சென்ற பாலுவும் கோபுவும் - மின் கம்பி மற்றும் சில மின்னணு சாதனங்களுடன் வீடு திரும்பினர். அவர்களுடன்



கொத்தனார் ஒருவரும் வந்திருந்தார்.


அவர்களைப் பார்த்த பாலுவின் அப்பாவிற்கு ஒன்றும் புரியவில்லை.

"நம் வீட்டிலும் கோபுவின் வீட்டிலும்– தரையிலும் சுவற்றிலும் சிறு சிறு துளைகள் போட வேண்டும். பிறகு அவற்றை சிமெண்ட் பூசி அடைத்துவிட வேண்டும். அதற்காகத் தான் கொத்தனாரை அழைத்து வந்தேன்" என்றான் பாலு.

"இது என்ன விளையாட்டு? வேண்டாம்" என்றார் அப்பா.

"ஐயா! பையன்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பது எனக்குத் தெரி

புலேந்திரன்



"பூனையை குளோசப்ல பார்த்தா பயமா இருக்குடா..."
"அப்ப கோல்கேட்ல பாரு!"
— தஞ்சை தாமு

யாது. ஆனாலும் அவர்கள் ஏதோ ஒரு நல்லது செய்யப் போவது போல்தான் தெரிகிறது; அதனால்தான் நானும் வந்தேன். வீட்டின் தரையிலோ, சுவரிலோ துளையிட்டதற்கான அடையாளமே தெரியாமல் அழகாகச் செய்து முடித்து விடுகிறேன்" என்றார் கொத்தனார்.

பக்கத்தில் நின்ற கோபு, "எங்கள் வீட்டில் அனுமதி வாங்கிவிட்டேன். இங்கு வேலை முடிந்ததும் அங்கு போக வேண்டும்" என்றான்.

பாலுவின் அப்பாவுக்கு விருப்பம் இல்லை. ஆனால் பாலுவின் அம்மா வந்து, "பையன்கள் என்னதான் செய்கிறார்கள் என்று பார்ப்போமே" என்று சொன்னதும், அவரால் மறுக்க முடியவில்லை.

"சரி. சுவருக்கு ஆபத்து இல்லாமல் செய்யுங்கள்" என்று சொல்லிவிட்டு, அவசர வேலையாக வெளியில் சென்று விட்டார்.

நாட்கள் சென்றன. ஒருநாள் நள்ளிரவு நான்கு நபர்கள் பாலுவின் வீட்டை நெருங்கினர்.

'உர்...ர்...உர்...ர்....ர்'- வீட்டின் உள்ளே, புலியின் உறுமல் சத்தம்!

கதவருகில் சென்றவன், பயத்தில் திரும்பினான்.

பின்னால் நின்றவன், "புலி எங்கிருந்து உறுமுதுன்னு பார்க்கறியா?" என்று சொல்லிக் கொண்டே, கையில் இருந்த இரும்புத் தடியால் நிலைப்படிக்கு மேலே இருந்த கருவியை அடித்தான்.

அது, உடைந்து கீழே விழுந்தது.

புலியின் 'உறுமல்' நின்றுவிட்டது.

உறுமல் சத்தம் கேட்டு முதலில் விழித்துக் கொண்ட பாலுவின் அம்மா, கணவரை எழுப்பினார். "பாலு செய்து வைத்த கருவியிலிருந்து சத்தம் வந்தது. பிறகு நின்று விட்டது. என்னவென்று பாருங்கள்" என்றார் பதற்றத்துடன்.

அவர் எழுந்து வந்தார்- அந்த நான்கு பேர்களும் வாயிற் கதவைத் திறந்து உள்ளே நுழைந்து கொண்டிருந்தார்கள்.

பாலுவின் அப்பா அதிர்ச்சியில், "நீங்க யாரு?" என்று கேட்டுக் கொண்டிருக்கும் போது பின்னால் வந்த பாலுவின் அம்மா, "திருடன்! திருடன்" என அலறினார்.

"சத்தம் போடாதே"- ஒருவன் அரிவாளை ஓங்கியபோது, அம்மாவிற்குக் குரல் பயத்தினால் அமுங்கி விட்டது.

"வந்தவர்களைத் தடுக்காதீர்கள்" என்ற குரல் கேட்டு திருடர்கள் திடுக்கிட்டுப் பார்த்தனர்.

பாலுவின் பெற்றோர், "என்னடா சொல்றே?" என்றனர்.

தன் அறையிலிருந்து வெளியில் வந்த பாலு, பெற்றோரைப் பார்த்து சொன்னான்: "இன்று நம் வீட்டில் திருட வேண்டும் என்று திட்டமிட்டு வரும்போதே எதிர்ப்பை எதிர்கொள்ள தயாராகத்தான் வந்திருப்பார்கள். அவசியமானால் கொலை செய்யவும் தயங்க மாட்டார்கள். அப்பா! சாவிக் கொத்தை அவங்ககிட்டே கொடுங்க. அம்மா! நீங்க போட்டிருக்கும் நகைகளைக் கழட்டிக் கொடுங்க."

வந்தவர்களில் தலைவன் போல் நடந்து கொண்ட ஒருவன், "புத்திசாலிப் பையன். நம் வேலையை எளிதாக்கி விட்டான்" என்றான்.

ஒருவன், தொலைபேசி தொடர்பைத் துண்டித்தான்.

ஒருவன், பாலுவின் அம்மா போட்டிருந்த நகைகளைக் கழட்டச் சொல்லி வாங்கினான்.

மற்ற இருவரும் இரும்பு அலமாரியைத் திறந்து அதில் இருந்த நகை, பணத்தை அள்ளிக் கொண்டிருந்தனர்.

"டேய் பைக்குகள் வரும் சத்தம் கேட்குது. புறப்படுங்க" என்றான் தலைவன்.

அவர்கள், கொல்லைப் புறக் கதவைத் திறந்தபோது, கோபுவின் அப்பாவும் வேறு

சிலரும் தடியுடன் நின்று கொண்டிருந்தனர்.

வாசல் பக்கமாகவே ஓடி விடலாம் என்று திரும்பியபோது போலீஸ் இன்ஸ்பெக்டர் துப்பாக்கியுடன் நிற்க, கோபுவும் வேறு சிலரும் பின்னால் வந்து கொண்டிருந்தனர்.

திருடர்கள் நால்வரும் ஜீப்பில் ஏற்றப்பட்டனர்.

"பாலு! நடந்ததை விபரமாகச் சொல்" என்றார், இன்ஸ்பெக்டர்.

"இங்கே எங்கள் இரண்டு வீடுகள் மட்டுமே இருப்பதால் பாதுகாப்புக்காக சில மின்னணுக் கருவிகளை நானும் கோபுவும் சேர்ந்து செய்து வைத்திருந்தோம். திருடன், கதவுக்கு மேலே இருந்த கருவியை உடைத்ததும், நான் எனது அறையில் இருந்த பட்டனை அழுத்தினேன்" என்று கட்டிலுக்குக் கீழே, மறைவாக இருந்த சிறிய குமிழைக் காட்டினான் பாலு.

"அப்புறம்?" பாலுவைப் பார்த்துக் கேட்டார், இன்ஸ்பெக்டர்.

"நான் சொல்கிறேன்" என்றான் கோபு. "எங்கள் வீட்டிலும் இதைப் போலவே என் அறையில் ஒரு குமிழ் பொருத்தப்பட்டிருக்கிறது. இரண்டுக்கும் வெளியில் தெரியாதவாறு தரை வழி தொடர்பு கொடுத்திருக்கிறோம். பாலு இங்கே குமிழை விரலால் அழுத்தியதும், அங்கே சிவப்பு வெளிச்சத்துடன் 'ஒலி' வந்தது. அப்படி ஒலித்தால் 'உதவிக்கு ஓடி வா' என்று பொருள்..."

கோபுவின் அப்பா சொன்னார்: "ஒலி வந்த உடனே கோபு என்னை பாலுவின் வீட்டுக்கு உதவிக்குப் போகச் சொல்லிவிட்டு தொலை பேசி மூலம் சற்றுத் தொலைவில் இருந்த வீடுகளுடன் தொடர்பு கொண்டு, பாலுவின் வீட்டில் திருடர்கள் புகுந்து விட்டார்கள்; உதவிக்கு வாருங்கள் என்று சொன்னான்..."

"அத்துடன் உங்களுக்கும் தகவல் கொடுத்துவிட்டு, வெளியில் ஓடி வந்தேன். பக்கத்துத் தெருவிலிருந்து பைக்குகளில் உதவிக்கு விரைந்து வந்தார்கள். நீங்களும் வந்து சேர்ந்தீர்கள்" என்றான் கோபு.

"இந்த நால்வரும் பல கொலை, கொள்ளை வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள். இதுவரையிலும் எங்களிடம் பிடிபடாமல் இருந்தார்கள். உங்கள் இருவரின் கூர்ந்த மதியினால்தான் இன்று பிடிபட்டார்கள்" என்ற இன்ஸ்பெக்டர் பாலுவையும் கோபுவையும் செல்லமாகத் தட்டிக் கொடுத்து, "உங்களின் இந்த சிறப்பான செயலுக்குப் பரிசும் பாராட்டும் வழங்கப்படும்" என்றார்.

வீணாகப் பொழுது போக்கிடும் நேரத்தையும் பணத்தையும் வீட்டில் பயன்படுத்தி, உயிரையும் உடமையையும் பாதுகாத்த தங்கள் பிள்ளைகளின் அறிவாற்றலை அறிந்த பாலுவின் பெற்றோரும் கோபுவின் பெற்றோரும் பெருமிதம் அடைந்தார்கள்.



சுற்று வாக்கியக் கதைப் போட்டி

கோடை விடுமுறைப் போட்டி I

பரீட்சை முடிந்து விடுமுறையில் இருப்பீர்கள். உங்கள் சந்தோஷத்தை அதிகப்படுத்தத்தான் கதைப் போட்டி. இந்தக் கதை, '.... அதிர்ந்து நின்றான்' அல்லது '.... அதிர்ந்து நின்றாள்' என்பதில் முடிய வேண்டும். இது சமூகக் கதையாகவோ, ராஜா ராணிக் கதையாகவோ, மர்மக் கதையாகவோ அல்லது நகைச்சுவைக் கதையாகவோ இருக்கலாம். ஆனால், கதை உங்கள் சொந்தக் கற்பனையாக இருக்க வேண்டும். உள்நாட்டுக் கடிதத்தில் (Inland Letter) கதை எழுதப்பட்டிருக்க வேண்டும். முகவரிக் கூப்பனை ஒட்டி, உங்கள் முழு முகவரியையும் எழுதி அனுப்ப வேண்டும். அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. பிரசுரமாகும் கதைகளுக்கு ரூ. 50/- பரிசு! **முடிவு தேதி : 31.5.2000**

ஆசிரியர், கோகுலம்,
47, ஜவாஹர்லால்
நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை – 97.



AJAY'S YOUNG FRIEND

Rs. 6/- MAY 2000

DUNG BEETLES OF AFRICA
— *in the wild*

'Poirot' gets a scare
— ***experience***

Lots of exciting new features for a fun-filled holiday



The monthly magazine for children

GOKULAM

47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 97

FREE LABELS



ஒரு நாள் குதித்து!

ஒருநாள் கந்தனுக்குப் புதுமையாக ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் வந்தது. யாரும் இதுவரை செய்து பார்க்காததாக இருக்க வேண்டும் என்று நினைத்தான்.

'எல்லாரும் காலால் நடந்து பள்ளிக்குப் போகிறார்கள். கையால் நடந்து பள்ளிக்குப் போனால் என்ன?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

'சே! சே! எல்லாரும் சிரிப்பார்கள். கைகளில் ரொம்ப நேரம் நிற்கவும் முடியாது. நடக்கவும் முடியாது. நன்றாய் வலி எடுக்கும். இந்தப் புதுமை வேண்டவே வேண்டாம்' என்று அந்த எண்ணத்தைக் கைவிட்டான்.

பின்னால் நடந்து கொண்டே பள்ளிக்குப் போனாலோ? இதுவும் கேட்க நன்றாய்த்தான் இருக்கும். முயற்சி செய்தால் போகவும் செய்யலாம். ஆனால் மெதுவாகத்தான் போக முடியும். கார்களும் பேருந்துகளும் சைக்கிள்களும் ஆட்டோக்களும் குறுக்கே வந்தால் வம்பில் மாட்டிக் கொள்ள வேண்டும் என்று அந்த யோசனைக்கும் முற்றுப்புள்ளி வைத்தான்.

'குதித்து'க் கொண்டே, அதாவது தவளையைப் போல தத்தித் தத்திக் குதித்துக் கொண்டே போனால் எப்படியிருக்கும்?'

பார்ப்பவர்கள் எல்லாரும் சிரிப்பார்கள். இதில் புதுமையும் இல்லை. இதை ஒரு சாதனை என்று சொல்லி கின்னஸ் புத்தகத்திற்கு எழுதவும் முடியாது' என்று அந்த எண்ணத்திற்கும் 144 தடை உத்தரவு

அழகனார்

போட்டு மூட்டை கட்டி விட்டான்!

பிறகு என்னதான் செய்வதாம்?

'ஒருநாள் முழுவதும் பொய் பேசிப் பார்த்தால் எப்படியிருக்கும்?'

அதுதான் நல்ல ஐடியா; பொய் பேசினால் வாயும் வலிக்காது. பார்ப்பவர்கள் சிரிக்கவும் மாட்டார்கள். நாம் பொய் பேசுகிறோம் என்று தெரிந்தால்தான் வம்பு வரும். சாமர்த்தியமாகப் பொய் பேசிப் பார்த்து விடுவோம் என்று முடிவு செய்தான் கந்தன்.

தூங்கி எழுந்தது முதல் இரவு தூங்கப் போகும் வரைக்கும் உண்மை துளிக் கூடப் பேசாமல் பொய் மட்டும் பேசி பொழுதைக் கழிக்க வேண்டும் என்ற வைராக்கியத்துடன் படுத்து உறங்கப் போனான்.

பொழுதும் விடிந்தது!

கந்தன் கண்களைக் கசக்கியபடியே முன்னிரவு செய்த வைராக்கியத்தை நினைத்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான்.



'காப்பி வேணுமா கந்தா?' என்று கேட்டுக் கொண்டே கந்தனின் அம்மா வந்து நின்றார்.

''காப்பியா? நான் குடிச்சாச்சே அம்மா!'' என்று முதல் பொய்யை அவிழ்த்து விட்டான்!

கந்தனின் அம்மாவிற்கு ஆச்சர்யம். இப்போதுதான் பையன் எழுந்திருக்கிறான். காப்பி குடித்து விட்டதாகச் சொல்கிறானே என்று எண்ணிக் கொண்டே அடுக்களைக்குப் போய் விட்டார்.

கந்தன் எழுந்த பிறகு அன்றைக்குப் படிக்க வேண்டிய பாடங்களைப் படித்தான். வீட்டுப் பாடங்களையும் எழுதி முடித்தான். பள்ளிக்குப் போக வேண்டிய புத்தகங்களையும் எடுத்து வைத்தான்.

இனி, குளித்துப் புறப்பட வேண்டும்.

"தண்ணீர் எடுத்து வைத்திருக்கிறேன். குளித்து விட்டு வாடா கண்ணா" என்று கந்தனின் அம்மா அடுக்களையில் இருந்து குரல்கொடுத்தார்.

"குளிச்சாச்சே அம்மா!" என்று பதில் குரல் கொடுத்தான் கந்தன்!

'கெட்டிக்காரப் பயல்' என்று கந்தனின் அம்மா எண்ணிக் கொண்டே சாப்பிடுவதற்கு பலகாரம் எடுத்து வைத்து விட்டு அழைத்தார்.

"பசியே இல்லை அம்மா. அது மட்டும் இல்லை. இன்று மத்தியானம் சாப்பிட ஒன்னும் எடுத்து வைக்க வேண்டாம். கன்னுச்சாமி எனக்கும் சேர்த்து எடுத்து வருவதாகச் சொல்லியிருக்கிறான்" என்று பொய்யை எடுத்து விட்டான்.

கந்தனின் அம்மாவிற்கு ஆச்சரியத்திலும் ஆச்சர்யம். பலகாரத்தைத் திரும்ப எடுத்து வைத்து விட்டார். கொண்டு போக டிபன் கேரியரிலும் தரவில்லை!

கந்தன் பள்ளிக்குப் புறப்பட்டான்.

பள்ளிக்குப் போகும்போது வழியில் கண்ணன், சங்கர், ரத்தினம், பாலாஜி முதலிய வகுப்புத் தோழர்களும் சேர்ந்து கொண்டனர்.

காலையில் எழுந்தவுடன் காப்பியும் பிறகு சிற்றுண்டியும் சாப்பிடாததனால்

பசி வயிற்றைக் கிள்ளியது. பசிக்கிறது என்று சொன்னால் உண்மை பேசி விட்ட தாக ஆகிவிடுமே! பல்லைக் கடித்துக் கொண்டு சாப்பிட்டவனைப் போலவே காட்டிக் கொண்டான்.

பள்ளிக்கு வந்தவுடன், பள்ளியில் இருந்த குழாயில் மடக் மடக் என்று வயிறு நிறையத் தண்ணீர் குடித்துக் கொஞ்சம் பசியைத் தணித்துக் கொண் டான். இருந்தாலும் பசி வயிறைக் கிள்ளத்தான் செய்தது.

காலை நேர வகுப்புகளை எப் படியோ சிரமப்பட்டு நகர்த்தி விட்டான். பகல் இடைவேளை வந்தது. எல்லாரும் கொண்டு வந்திருந்த உணவுப் பாத்திரங் களை எடுத்துக் கொண்டு மூலைக்கு ஒருவராக அமர்ந்து உணவு உண்ணத் தொடங்கினார்கள்.

அவர்களைப் பார்க்கப் பார்க்கப் பசி அதிகமாகியது, கந்தனுக்கு. காலையிலும் சாப்பிடவில்லை. பகல் உணவும் எடுத்து வரவில்லை என்று எப்படி உண்மையைச் சொல்ல முடியும்?

கந்தன் பகல் உணவு எடுத்துக் கொண்டு வராததைக் கண்ட சங்கர், தான் கொண்டு வந்திருந்த உணவைப் பங்கிட் டுக் கொள்ள அழைத்துப் பார்த்தான்.

"எனக்குப் பசியே இல்லை" என்று புளுகு மூட்டையை கந்தன் அவிழ்த்து விட்டான்!

பிற்பகலில் வகுப்புகள் ஆரம்பம் ஆன போது கந்தனின் பசி விசுவரூபம் எடுத்தது. பாடத்தைக் கவனிக்க முடியவில்லை. தலைசுற்றுவதைப் போல இருந்தது.


நேரம் ஆக ஆக உட்காரவே முடியாத தைப் போலத் தோன்றியது. வயிற்றுப் பசிக்குத் தீனி போட்டால்தான் நடந்து வீடு போய்ச் சேர முடியும் போல இருந் தது!


சிரமப்பட்டு வகுப்பில் உட்கார்ந்து பார்த்தான். கடைசி பீரியடில் உட் காரவே அவனால் முடியவில்லை.


வயிறு வலிக்கிறது என்று பொய்யைச் சொல்லி, ஆசிரியரிடம் அனுமதி பெற்று வீட்டிற்கு நடக்கத் தொடங்கினான்.

வீடு வந்து சேர்ந்தவன் நேராக அடுக்களையில் நுழைந்து வயிறு முட்டத் தின்று தீர்த்தான். உடலில் தெம்பு வந்தது.

இனி இந்தப் பைத்தியக்காரத் தனமான யோசனை யெல்லாம் பண்ணக் கூடாது என்று முடிவு செய்து படிக் கத் தொடங்கினான்.








எச்சம் என்றால்...


எங்கள் தமிழாசிரியை எச்சம், வினைமுற்று பற்றி பாடம் நடத்திக் கொண்டிருந்தார். பின்னால் உட்கார்ந்திருந்த மாணவன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். இதைக் கவனித்த ஆசிரியை, "எச்சம் என்றால் என்ன?" என்று அவனை எழுப்பிக் கேட்டார். உடனே அவன், "தலைமையாசிரியர்" என்றான். ஆசிரியை முறைக்கவே, "காகம் போன்ற பறவைகளின் கழிவு" என்றான். நாங்கள் சிரிப்பை அடக்க முடியாமல் சிரித்து விட்டோம். ஆசிரியையோ கோபத்துடன் அவனை நின்று கொண்டு பாடத்தைக் கவனிக்குமாறு கூறி விட்டார்.

– ச. ஸ்ரீராம்,
ஐந்தாம் வகுப்பு, வா.வி.மெ.
பள்ளி, காட்பாடி, வேலூர்.



ஆறுமுகம்

தமிழ் பாட வேளை. கட்டுரையில் பாரா பிரித்து எழுதுவது பற்றி ஆசிரியர் விளக்கிக் கொண்டிருந்தார். அப்போது ஆறுமுகம் என்ற மாணவன் எங்கோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். ஆசிரியர் அவனை எழுப்பி, "நான் சொல்வதைக் கவனிக்காமல் என்ன பண்ணிக்கிட்டிருக்கே? எங்களுக்கெல்லாம் ஒரு முகம். உனக்கோ ஆறுமுகம். அதில் ஒரு முகத்தையாவது என் பக்கம் திருப்பக் கூடாதா? பாரா பிரிப்பது பற்றி சொல்லிக் கொண்டிருக்கும் போது பாராமுகமாய் இருக்கிறாயே" என்றார். அவன் மௌனமாக நின்றான். "ஆறுமுகம் இனி மேலாவது ஆசிரியருக்குப் பதில் கூறும் முகமாய் இரு" என்று குட்டி சொற்பொழிவே ஆற்றி விட்டார். அதற்குப் பின் அவன் வேடிக்கை பார்ப்பதையே விட்டுவிட்டான்.



– பெ. இராமசாமி, பதினோராம்
வகுப்பு, அரசு மேல் நிலைப் பள்ளி,
செங்குன்றம்.


டில்லி எதுக்குப்

பக்கத்தில் இருக்கிறது!



தலைநகர்?

என் பெயர் டில்லிராணி. ஆசிரியர் சமூகவியல் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். தூங்கிக் கொண்டிருந்த ஒரு மாணவனைப் பார்த்து, "இந்தியாவின் தலைநகர் எது? என்ற கேள்விக்கு அவன் பதில் சொல்லப் போகிறான்" என்றார். இதைக் காதில் வாங்காமல் தூங்கிக் கொண்டிருந்த அவனை அருகில் உட்கார்ந்திருந்த நண்பன் எழுப்பி விட்டான். திடுக்கிட்டு எழுந்து நின்றவன் திருதிருவென விழித்தான். அருகில் உட்கார்ந்திருந்தவன் முன் வரிசையில் உட்கார்ந்திருக்கும் என்னைக் காட்டினான். உடனே அவன், "டில்லி சார்" என்றான். "சமாளிச்சிட்டே சரி! அது எதுக்குப் பக்கத்திலே இருக்கு?" என்றார். உடனே அவன், "புவனாவுக்குப் பக்கத்தில்" என்றானே



பார்க்கலாம்!

– எஸ். டில்லிராணி, நான்காம் வகுப்பு, ஊ.ஒ.தொ. பள்ளி, சயனாவரம், பொன்னேரி.

பலகை


எங்கள் வகுப்பு ஆசிரியர் மிகவும் இனிமையானவர். எனவே அவரை எல்லோருக்கும் மிகவும் பிடிக்கும். ஒருநாள் ஆசிரியர், மாணவர்களை இரு பிரிவாகப் பிரித்து பொது அறிவு பற்றி ஒரு போட்டி நடத்தினார். ஒவ்வொரு பிரிவும் சரியான பதிலைக் கூறும்போது அனைவரும் மேஜைதட்டி ஆரவாரம் செய்தோம். ஐந்து கேள்விகள் முடிந்த நிலையில் ஆசிரியர், "பல கை தட்டுவதை நான் ஆதரிக்கறேன். ஆனால் பலகையில் (டெஸ்க்) தட்டுவது சரியல்ல. பல கைகளால் தட்டுங்கள்" என்றவுடன் அதற்கும் சேர்த்து தட்டினோம் கைகளால்.

– இ. ராஜசேகரன், ராஜபாளையம்.

பேர் சொல்லும்

எங்கள் பள்ளியில் மாணவர் மன்றம் உள்ளது. ஒருநாள் எங்கள் ஆசிரியர், "உங்கள் மன்றம் சார்பாக தென்னை மரக் கன்றுகளை நட்டால் இந்தப் பள்ளியில் மரங்கள் தன் வாழ்நாள் முழுவதும் உங்கள் பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கும்" என்றார். குறும்புக்கார மாணவன் ஒருவன், "சார் இனி வளர்த்தாலாவது பேர் சொல்லும். தென்னை மரம் எப்படி சார் சொல்லும்?" என்றான். அவனது பேச்சை நாங்களும் ஆசிரியரும் ரசிக்கவில்லை. உடனே மன்னிப்புக் கேட்டு விட்டு மரம் நடும் வேலையைப் பார்க்க ஆரம்பித்தான்.

– இராம. உதயகுமார், பதினோராம் வகுப்பு, அண்ணா அரசு உயர்நிலைப் பள்ளி, பட்டீஸ்வரம், கும்பகோணம்.




நீண்ட நாள் ஆசை!

கதை: அ.சு. கிருஷ்ணன் படம்: லட்சுமிபிள்ளை




நண்பன்னா உன்னைப் போல் தான் இருக்கனும்.
ம்... சீக்கிரம்.
ஐயோ! என் உயிர் நண்பன் இறந்துட்டானே! நான் என்ன செய்வேன்?
ஏன் கினி அழறே?
என் நண்பன் திடீர்னு இறந்துட்டான். அவன் காலைத் தொட்டு ஆசீர்வாதம் வாங்கிக்க.
அப்படியா! இதோ வரேன்.
என்ன அங்கேயே நிக்கறே. கிட்ட வா.
ம்... கினி இப்படி கூப்பிடறதைப் பார்த்தால் ஏதோ சூழ்ச்சி இருக்கும் போலிருக்கே!
என்ன யோசிக்கறே?
ஒண்ணும் இல்லை. பூனை இறந்தால் நாக்கு வெளியே தெரியுமே!
இதைக்கேட்ட வினி உடனே நாக்கை நீட்டியது.
அடப்பாவிகளா! திட்டம் போட்டு என்னை ஏமாத்தறீங்களா? போங்கடா.
எலி ஓடி மறைந்தது.

முள்ளம் பன்றிக்கு முட்கள்



முகத்தைப் பார்த்தால் பன்றியின் சாயல் கொஞ்சம் தெரிகிறது. முழு உருவத்தைப் பார்த்தாலோ எலியை நினைவூட்டுகிறது முள்ளம் பன்றி. பெயரில் பன்றி என்று இருந்தாலும் இது எலியின் உறவினர்தான்!

கொறிக்கும் (Rodent) பாலூட்டி பிராணிகளிலெல்லாம் மிகப் பெரியது இந்த முள்ளம் பன்றிதான்! இதன் உடலில் நீண்ட முள் போன்ற தடித்த முடிகள் நீட்டிக் கொண்டிருக்கும். இந்த முடிகள்தான் முள்ளம் பன்றியை எதிரிகளிடமிருந்து காக்கிறது. உச்சந் தலையிலிருந்து வால் வரை முடிகள் காணப்படும். நடுமுதுகிலும் இடுப்பிலும் உள்ள முட்கள் நீளமானவை.

உடல் கறுப்பும் பழுப்பும் கலந்த நிறம். அடி முடி கறுப்பாகவும் நுனி வெள்ளையாகவும் இருக்கும். நுனி மிகவும் கூர்மையானது. பொதுவாக இது யாரையும் தொந்தரவு செய்யாது.

நாய், நரி போன்ற எதிரிகளைக் கண்டால் முடியைச் சிலிர்த்துக் கொண்டு உருவத்தைப் பெரிதாக்கிக் குரல் கொடுக்கும். இதைக் கண்டும் எதிரி பயப்படவில்லையென்றால் பின்னோக்கிச் சென்று அதன் மீது மோதும். எதிரியின் மீது வாலும் உடலும் படும்போது ஆழமான காயங்களை முட்கள் ஏற்படுத்தி விடும். சில சமயங்களில் உயிருக்கே ஆபத்தாகவும் முடியும். இப்படித்தான் சிங்கம், சிறுத்தை போன்ற பெரிய பிராணிகளிடமிருந்தும் கூட தப்பி விடுகின்றன முள்ளம் பன்றிகள்.

பாம்பு முள்ளம் பன்றியைச் சுற்றிக் கொள்ளும்போது பந்து போல் உருண்டு பாம்பைக் காயப்படுத்தி விட்டுத் தப்பிக்கும்.

பெரும்பாலும் காட்டுப் பகுதிகளிலேயே வசிக்கும். எலியைப் போலவே வளைதோண்டி வாழும். பகல் முழுவதும் வளையில் பதுங்கி இருக்கும். இரவில்தான் இரை தேடும். சில சமயங்களில் குகைகள், பாறைப் பிளவுகளிலும் தங்கும். இரண்டு முள்ளம் பன்றிகளாகவோ அல்லது குடும்பமாகவோ வசிக்கின்றன. தேவைக் கேற்றபடி முன்னங்கால்களால் வளையை வசதியாக அமைத்துக் கொள்ளும்.

இரவு நேரங்களில் தனித்துச் சென்று இரை தேடுகின்றன முள்ளம் பன்றிகள். இரை தேடும் போது மூக்கை உறிஞ்சி

இரைச்சல் ஏற்படுத்தும். சத்தமின்றி இரை தேடவோ, சாப்பிடவோ இவற்றால் முடியாது. காது மிகவும் கூர்மையானது. ஏதாவது சத்தம் கேட்டால் அசைவின்றி நின்று விடும்.

இது சைவப் பிராணி. கிழங்குகள், வேர்கள், பட்டை, பழம் முதலியவையே உணவு. அதிலும் உருளைக் கிழங்கு, சர்க்கரை வள்ளிக் கிழங்கு என்றால் விருப்பம் அதிகம்.

எலியைப் போன்றே இதுவும் எப்பொழுதும் கொறித்துக் கொண்டே இருக்கும். மரப்பட்டைகளைக் கடித்துச் சின்ன மரங்களைச் சாய்த்து விடக்கூடியது.

காடுகளுக்கருகில் உள்ள விளை நிலங்களுக்கு வந்தால் விவசாயிகளின் பாடு திண்டாட்டம்தான். இவை சாப்பிட்டு சேதம் விளை

ஏன்?

விப்பதை விட மிதித்துக் கடித்து பயிர்களைப் பாழாக்கி விடுவதே அதிகம்!

பெண் முள்ளம் பன்றி ஆண்டிற்கு ஒருமுறை குட்டி ஈனும். ஒரு முறைக்கு ஒன்று முதல் மூன்று குட்டிகள் வரை பிறக்கின்றன. குட்டிகள் பிறக்கும்போதே தெளி



எஸ். சுஜாதா

வான பார்வையுடனும் சிறிய மிருதுவான முட்களுடன் விளங்குகின்றன.

குட்டிகள் ஒரு மாதம் வரை தாய்ப் பாலை உண்டு வாழ்கின்றன. அதற்குப் பின் தாயுடன் சேர்ந்து உணவு தேடி கிளம்பி விடுகின்றன. கிட்டத்தட்ட பதினாறு மாதங்கள் வரை குட்டிகள் தாயுடன் வசிக்கின்றன. அதன் பின்னர் துணையைத் தேடிக் கொண்டு தனி வளை தோண்டி வாழ ஆரம்பிக்கின்றன.

முள்ளம் பன்றிகள் ஆப்பிரிக்கா, ஐரோப்பா மற்றும் இந்தியாவில் வாழ்கின்றன.

● ஜி. குப்புசாமி,
நெய்வேலி - 2.

● டி. ஜோஸ்வின்,
ஐரேனிபுரம்.

? 'ருமாட்டிக் காய்ச்சல்' என்றால் என்ன டாக்டர்? விளக்கமாகக் கூறுங்கள்.

! ருமாட்டிக் காய்ச்சலுக்குத் (Rheumatic fever) தமிழில் இரண்டு பெயர்கள். 1. கீழ் வாதக் காய்ச்சல், 2. மூட்டழற்சிக் காய்ச்சல். இது பெரும்பாலும் குழந்தைகளையும் இளம்வயதினரையும்தான் தாக்குகிறது. 'பீட்டா ஹீமோலைடிக் ஸ்ட்ரெப்டோகாக்கஸ்' (Beta Haemolytic Streptococcus) என்னும் பாக்டீரியா கிருமி தொண்டையைப் பாதிக்கும் போது, அதன் பின்விளைவாகத் தோன்றுகிறது இந்தக் காய்ச்சல். தொண்டையைத் தாக்கும் கிருமிகளுக்கு உடலில் எதிர்விளைவு உருவாகிறது. அது மூட்டுத் திசுக்களையும் இதய வால்வுகளையும் பாதிக்கிறது. கடுமையான காய்ச்சல், தொண்டையில் வலி, உணவை விழுங்குவதில் சிரமம், கழுத்தருகில் நிணநீர்ச் சுரப்பி வீங்குதல் ஆகியவை இந்தக் காய்ச்சலின் ஆரம்ப அறிகுறிகள். மூன்று வாரங்களுக்குப் பிறகு முழங்கால் மூட்டு, மணிக்கட்டு போன்ற பெருமூட்டுகளில் வீக்கமும் வலியும் தோன்றுவது இந்த நோய்க்குரிய மிக முக்கிய அறிகுறிகள். இவற்றைத் தொடர்ந்து நெஞ்சுவலி, படபடப்பு, மூச்சுவாங்குதல், தோலில் சிவந்த தடிப்புகள் தோன்றுதல் ஆகியவை இந்த நோயை வெளிப்படுத்துகின்ற பிற அறிகுறிகள். பென்சதின் பென்சிலின் ஊசி, ஆஸ்பிரின் மாத்திரை, இயக்க ஊக்கி மருந்து (Steroid), பூரண ஓய்வு ஆகியவை துவக்க நிலையில் உள்ள மூட்டழற்சிக் காய்ச்சலை முற்றிலும் குணப்படுத்தி விடும். அதே நேரத்தில் இந்த நோய் மீண்டும் தாக்காமல் இருக்கவும் இதயத்தைப் பாதிக்காமல் பாதுகாக்கவும் இந்த மருத்துவ சிகிச்சையைக் குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்குத் தொடர வேண்டியது மிகவும் அவசியமாகும். இல்லையெனில், இந்தக் காய்ச்சல் மறுபடியும் தாக்கி, இதயத்தைப் பழுதாக்கும். அப்போது அறுவைச் சிகிச்சை மூலம் செயற்கை வால்வுகளைப் பொருத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். இதற்கு லட்சக்கணக்கில் செலவாகும்.


● எஸ். ரகுராமன், விளந்தை.

? பெரியவர்கள் 'சூரிய நமஸ்காரம்' செய்கிறார்களே அது நன்மை தருமா? சிறுவர்களும் செய்யலாமா? அதன் முறையை விவரியுங்கள்!

! யோகாசனப் பயிற்சிகளில் எல்லாவிதமான ஆசனங்களையும் உள்ளடக்கிய முக்கியமான பயிற்சி 'சூரிய நமஸ்காரம்'. இதில் பனிரண்டு விதமான நிலைகள் உள்ளன. இந்தப் பனிரண்டு நிலைகளும் சேர்ந்தது ஒரு சுற்று ஆகும். தினந்தோறும் காலையில் எழுந்ததும் காலைக் கடன்களை முடித்து விட்டு, வெறும் வயிற்றில் பனிரண்டு சுற்றுகள் பயிற்சி செய்தால் உடலுக்கு நல்லது. பல நன்மைகள் கிடைக்கும். மிக முக்கியமான நன்மைகளை மட்டும் இங்கு குறிப்பிடுகிறேன். தசை மண்டலமும் நரம்பு மண்டலமும் சுறுசுறுப்பாக இயங்கும். இதனால் நாள் முழுவதும் உடல் சுறுசுறுப்பாக இயங்கும். ஜீரண உறுப்புகள் சிறப்பாகச் செயல்படும். மலச்சிக்கல் வராது. தொந்தி கரையும்; தொப்பை விழாது. தோள் பட்டைகள் பலமடையும். ஆஸ்துமா, சர்க்கரை நோய் போன்ற சில



சூரிய நமஸ்காரம் நன்மை தருமா?



நோய்கள் வருவது குறையும். முதுகு கூன் விழாது. இப்பயிற்சிகளை ஐந்து வயதிற்கு மேல் செய்யலாம். அனுபவமிக்க யோகாசனப் பயற்சியாளரிடம் நேரில் சென்று பயின்று கொள்.

● **ப. காளிதாசன்,**
நீர்விளங்குளம்.

? மலச்சிக்கல் ஏற்படுவது ஏன்? எப்படிப் போக்குவது?



! தவறான உணவுப் பழக்கம்தான் மலச்சிக்கலுக்கு முக்கியமான காரணம். குறிப்பாகக் கூறினால், உணவில் நார்ச்சத்து குறைவாக இருப்பதும் நீர்ச்சத்து குறைந்து போவதும் மலச்சிக்கலை ஏற்படுத்தும். அடிக்கடி மனக்கவலை, கோபம், எரிச்சல் போன்ற மனோநிலைகளில் இருந்தாலும் மலச்சிக்கல் வரலாம். அவசர வாழ்க்கை, உடலுழைப்பு இல்லாத வாழ்க்கை, முதுமை போன்றவையும் இந்தத் தொந்தரவுக்கு வழி அமைக்கும். மேலும் மூலநோய், பௌத்திரம், ஆசனவாய்ப் பிளவு போன்ற நோய்களின் போதும், பித்தப்பை அழற்சி, குடல்வால் அழற்சி, குடல் புற்றுநோய் ஆகியவற்றின் போதும் மலச்சிக்கல் ஏற்படலாம். நீடித்த காய்ச்சல், பக்கவாதம் போன்ற உடல்நோய்களால் துன்பப்படும் போது மலச்சிக்கல் தொல்லை கொடுக்கும். சில மாத்திரை மற்றும் மருந்துகளின் பக்க விளைவாகவும் இந்தத் தொந்தரவு சிலருக்கு வரக்கூடும். ஒழுங்கான உணவு முறையைக் கடைப்பிடித்தால் ஓரளவிற்கு மலச்சிக்கலைத் தவிர்க்க இயலும். கீரை, வாழைத் தண்டு, பூசணிக்காய் போன்றவற்றை அடிக்கடி சாப்பிட வேண்டும். நிறையத் தண்ணீர் குடிக்க வேண்டும். இரவில் இரண்டு வாழைப் பழங்களைச் சாப்பிட வேண்டும். காலையில் எழுந்ததும் நடைப்பயிற்சி, உடற்பயிற்சி, யோகாசனம் போன்றவற்றில் ஏதேனும் ஒன்றை அவசியம் கடைப்பிடிக்க வேண்டும். இவற்றையும் கடந்து மலச்சிக்கல் உண்டானால் அடிப்படைக் காரணத்தை அறிந்து சிகிச்சை பெற வேண்டும்.

● **க. துளசிராமன், கடம்பரவாழ்க்கை.**

? கை, கால் நகங்களில் ஏதேனும் அடிபட்டால், அந்த நகம் சொத்தையாகி விடுவது எதனால், டாக்டர்?

டாக்டர் கு. கணேசன்



! நகத்திற்கு ரத்தம் கொண்டு வருகின்ற ரத்தக் குழாய்கள் சிதைவடையும் அளவிற்கு பலமாக அடிபட்டால், நகம் வளர்வதற்குத் தேவையான சத்துகள் கிடைக்காமல் நகம் செத்துப் போகிறது. அதனால் அது சொத்தையாகி விடுகிறது.

● **பத்ம. சிவாஜி,**
நீடாமங்கலம்.

? கொட்டாவி எதனால் ஏற்படுகிறது?

! கொட்டாவி என்பது நம் உடல் சோம்பலாக உள்ளது என்பதை வெளிக் காண்பிக்கின்ற ஓர் அறிகுறி. முக்கியமாக நமது மூளைக்குத் தேவையான பிராண வாயு சில காரணங்களால் தற்காலிகமாகக் குறைந்து விடும்போது அது சோம்பலாக இருக்கும். அப்போது, 'எனக்குப் பிராண வாயு தேவை! உடனே அனுப்புக!' என்று சுவாச மண்டலத்திற்கு மூளை கட்டளையிடும். இதனைத் தொடர்ந்து சுவாச மண்டல உறுப்புகள் உற்சாகமடைந்து அதிக பிராண வாயுவைப் பெற முயலும். இதன் விளைவாக நாம் வாயைத் திறந்து ஆழமாக மூச்சை உள்ளிழுக்கிறோம், அதிகக் காற்றை சுவாசிக்கிறோம். அதிக அளவு பிராண வாயுவைப் பெறுகிறோம். பின்னர் அதே அளவிற்குக் கரியமில வாயுவையும் சுவாசப் பைகளிலிருந்து வெளியேற்ற வேண்டுமல்லவா? அதற்காக நாம் அதிகமான மூச்சை மூக்கு வழியாகவும் திறந்த வாய் வழியாகவும் வெளியேற்றுகிறோம். இதுதான் கொட்டாவி!

திருவண்ணாமலை மாவட்டம் போளூர் வட்டம் வடபாதிமங்கலம் என்ற ஊரில் இருந்து சுமார் 5 கி.மீ. தொலைவில் திருமலை உள்ளது. இங்கு குகைக் கோயில், கல்வெட்டுகள், சிற்பங்கள், ஓவியங்கள் பல உள்ளன.

இது சோழப் பேரரசைச் சேர்ந்த இராசராச சோழனின் தமக்கையார் குந்தவை பிராட்டியார் அமைத்ததால் இது குந்தவை ஜின்னாலயம் எனப்படுகிறது. இங்குள்ள வர்த்தமானர் கோயில் சுவரில் ஓவியங்கள் காணப்படுகின்றன. பாறை முகப்பிலும் சுவர்களிலும் ஆண் துறவிகள், பெண் துறவிகள், இல்லறத்தார், விலங்குகள் முதலிய ஓவியங்கள் காணப்படுவது வியப்புக்குரியதாகும்.

மலையின் மேலே சென்றால் 'சிகாமணி நாதர்' எனப் போற்றப்படும் அருள்மிகு நேமிநாதரின் 16 அடி உயரமுள்ள அழகான உருவச் சிலை உள்ளது.

குன்றின் உச்சியில் 23 ஆம் தீர்த்தங்கரர் பார்சுவ நாதரின் ஆலயமும் மாமுனிகளின் திருவடிகளும் உள்ளன. தமிழ் நாட்டை அரசாண்ட சேரர், சோழர், பாண்டியர், சம்புவரையர், பல்லவர், விஜய நகர பேரரசர் அனைவரும் 'திருமலை'யைப் போற்றியுள்ளனர்.

மத வேறுபாடு இன்றி அனைவரும் ஒருமுறை அல்ல பலமுறை பார்த்து வியக்க வேண்டிய திருமலை இது.

இது தவிர எங்கள் மாவட்ட தலைநகரான திருவண்ணாமலை கார்த்திகைத் தீபத்தின் சிறப்பு உங்களுக்கே தெரியும். அவசியம் வாருங்கள்.


– வே. தாமரைச்செல்வன், பத்தாம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப் பள்ளி, திருமலை, வடபாதிமங்கலம்.

எங்கள் ஊராகிய கோட்டைப்பட்டி திண்டுக்கல் மாவட்டம், நத்தம் சட்ட மன்றத் தொகுதியிலிருந்து வடக்கே இருபத்தி எட்டு கி.மீ. தூரத்தில் உள்ளது. செந்துறையிலிருந்து ஏழு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.

எங்கள் ஊரானது நான்கு புறமும் இயற்கை எழில் நிறைந்தது. இன்பத்தை அளிக்கின்ற, கண்ணுக்குக் குளுமை தருகின்ற மலைகள் சூழ்ந்தது. பச்சைப் பசேல் என வீற்றிருக்கும் அடர்ந்து விரிந்த மரங்களும் செடி, கொடிகளும் வன விலங்குகளான காட்டெருமை, குரங்கு, முயல், நரி, மயில், மற்றும் பல பறவையினங்களும் வசிக்கும் இடம். இம் மலைகளின் நடுவே இருநூறு குடும்பங்கள் வாழ்ந்து வருவதுதான் கோட்

• திருவண்ணாமலை தீபம்





டைப்பட்டி ஆகும்.

இவ்வாறு நான்குபுறமும் மலைகள் அரண் போன்று அமைந்திருப்பதால் 'கோட்டை'ப்பட்டி என முன்னோர்கள் அழைத்துள்ளார்கள்.


எங்கள் ஊரில் நடுநிலைப் பள்ளி ஒன்று உள்ளது. வடக்கில் உள்ள மலையில் கன்னிமார்கள் எனப்படும் ஏழு தேவதைகளும் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. அவர்கள் வாழ்ந்ததற்கு ஆதாரமாக அங்கு (மலையில்) உரல்களும் அம்மிகளும் உலக்கைகளும் கல்லினால் உள்ளன. இவைகளின் மத்தியில் 'சுனைப் பாறை' என்ற பாறை நீர் ஊற்று உண்டு. இதுதான் மலையில் வாழும் விலங்குகளின் குடிநீராகும்.

மேலும் எங்கள் ஊரில் வனச்சரக அலுவலகம் ஒன்று உள்ளது. இங்கு மா, பலா, வேம்பு, மூங்கில், புளி, தேக்கு, சவுக்கு மரங்கள் உள்ளன. மரக்கன்றுகள் இங்கிருந்து பல ஊர்களுக்கும் அனுப்பப்படுகின்றன.


மேலும் ஊர்க்காவலமைந்த ஸ்ரீ வீர மகாமுனி திருக்கோவில் உள்ளது. இக்கோவிலில் பொன்னர், சங்கர், கருப்பசாமி சிலைகளும் குதிரைகளும் உள்ளன. இக் கோவிலானது இரு மலைகளுக்கு நடுவில் உள்ளது. கோயிலின் முன்புறம் என்றுமே வற்றா ஊற்று ஒன்று கட்டட அமைப்புடன் இருக்கிறது. இந்த ஊற்றுக்கு வாய்மொழி வரலாறு ஒன்று உள்ளது.

அ தா வ து





இயற்கை எழில் நிறைந்த ஊர்!






• பூம்புகார் காட்சிகள்

ஆகாது' என்று எனது ஊரின் பெருமையைச் சொல்லும் பழமொழி ஒன்று உண்டு. மாயவரம் என்றும் மயிலாடுதுறை என்றும் அழைப்பார்கள்.

பிற மாவட்டத்தி லிருந்து மாற்றலில்



பொன்னர், சங்கர், இவர்களது தங்கை தங்கா, மகாமுனி ஆகியோர் மலையில் வேட்டையாடி விட்டு வருகையில் தங் காவிற்குத் தண்ணீர் தாகம் ஏற்பட்ட போது, அவ்விடத்தில் தண்ணீர் இல்லை யாம். அப்போது பொன்னர் தன் மந்திர வாளால் கிழிக்கவும் தண்ணீர் வெளிவந்த தாம். பின் தாகம் தீர்த்துக் கொண்டனர். மந்திர வாளால் கிறியதால் இவ்வூற்று. 'வாளை ஊற்று' என அழைக்கப்படுகிறது. இவ்வூற்றில் நீராடினால் சகல நோய்களும் தீரும் என்பது ஐதிகம். எந்த வறட்சியிலும் வாளை ஊற்று வற்றாத ஜீவ ஊற்றா கும்.

ஸ்ரீ வீரமகாமுனியின் திருவிழா மாசி மாத அமாவாசையன்று தொடங்கி தொடர்ந்து எட்டு நாட்கள் நடைபெறும். பல கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்று திருவிழா மிகச் சிறப்புடன் கொண் டாடப்படும். மேலும் இங்கே ஸ்ரீ சக்தி விநாயகர், ஸ்ரீ காளியம்மன், ஸ்ரீ மாரி யம்மன், ஸ்ரீ முத்தாளம்மன் கோவில்களும் உள்ளன.

சுவாமிகளின் அருள்பெற, இயற் கையை ரசிக்க, வாளை ஊற்றில் புனித நீராட வாருங்கள் கோட்டைப் பட்டிக்கு.

– பெ. இராமசாமி, பதினோராம் வகுப்பு 'அ' பிரிவு, அரசு மேல்நிலைப் பள்ளி, செந்துறை, திண்டுக்கல் மாவட்டம்.

'ஆயிரம் ஆனாலும் மாயூரம்

வரும் அரசு டாக்டர்கள், பின்னர் அரசுப் பணியைத் துறந்து இங்கேயே தங்கி தனியாக தொழில்நடத்தி வருவது இன்று வரை நடக்கும் தொடர்கதை. அதேபோல அரசு ஊழியர்கள் முதல் கூலி வேலைக்காக வருபவர்கள் வரை இங்கேயே தங்க வைத்து வந்தாரை வாழ வைக்கும் பெருமை பெறுவதுடன் பழமொழியையும் நிரூபித்து வருகிறது.

மயிலாடுதுறையைச் சுற்றி உள்ள கிராமங்களில் முஸ்லீம் பெருமக்கள் அதிக அளவில் வாழ்ந்து வருகின்றனர். இந்துக்களும் முஸ்லீம்களும் சகோதர பாசத்துடன் வாழ்ந்து வருவதால் மதநல் லிணக்கத்திற்கு எங்கள் ஊர் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

மயிலாடுதுறையை ஒட்டிய கூறைநாடு ஒரு காலத்தில் கூறைப் புடைவைகளுக்குப் பிரசித்தி பெற்றது. இன்று நெசவுத் தொழில் நசித்து விட்டது.

இங்கு மட்டுமே விளையும் பாதிரி மாம்பழம் சுவைக்குப் பெயர் போனது. சுற்றியுள்ள கிராமங்களில் நெல்லும் கரும் பும் பயிரிடப்படுகின்றன.

மயிலாடுதுறையைக் கோயில் நகரம் மற்றும் கோயில் சூழ்ந்த நகரம் என்று கூற லாம். இங்குள்ள மயூரநாதர் ஸ்வாமி பெரிய கோயில், காசி விஸ்வநாதர்

ஆலயம், மலைக்கோயில், கூறைநாட்டில் உள்ள புனுகீஸ்வரர் ஆலயம், திரு இந்தளூரில் உள்ள பெருமாள் கோயில் ஆகியவை பிரசித்தி பெற்றவை.

மயிலாடுதுறைக்கு வந்தால், 30 கி.மீ. தூரத்தில் உள்ள கோயில் நகரமாம் கும்ப கோணத்திற்கும் 32 கி.மீ. தூரத்தில் உள்ள சிதம்பரத்திற்கும் சென்று தில்லை நடராஜ ரையும் தரிசித்து வரலாம். அறுபது வயது பூர்த்தி செய்த தம்பதியர் கல்யாணம் செய்து கொள்ள விரும்பும் திருக்கடையூர் காலசம்கார மூர்த்தி ஆலயம் 20 கி.மீ. தூரத்தில் உள்ளது.

பிரபல சுற்றுலாத்தலமான பூம்புகார் 27 கி.மீ. மற்றும் தரங்கம்பாடி கோட்டை 30 கி.மீ. தூரத்திலும் உள்ளன. கவிச் சக்கரவர்த்தி கம்பர் பிறந்த தேரழுந்தூரும் அருகில்தான் உள்ளது.

மயிலாடுதுறையை மையமாகக் கொண்டு நவகிரக திருத்தலங்களையும் தரிசித்து விடலாம். ஒரு கார் ஏற்பாடு செய்து கொண்டு காலை 7 மணிக்குக் கிளம்பினால் இரவு 9 மணிக்குள் அனைத்து திருத்தலங்களை யும் தரிசித்து விடலாம்!

அரசு மற்றும் தனியார் ஆரம்பப் பள்ளிகள் முதல் கல்லூரிகள் வரை உள்ளன.

ஒரு ஆன்மீக சுற்றுலா வாக சில தினங்கள் தங்கும் படி ஒருமுறை மயிலாடு துறை வாருங்கள். ஒரு வேளை இங்கேயே நீங்கள் தங்கி விட்டாலும் ஆச்சரி யப்படுவதற்கில்லை!

– என். ரம்யா,
8–ஆம் வகுப்பு,
ராஜ் மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி,
கூறைநாடு, மயிலாடுதுறை.

எங்கள் ஊரின் பெயர் தருமபுரி. இங்கு பழங்காலத் தில் தர்மம் நிலைத்து நின்ற தால் தருமபுரி என்று பெயர் வந்தது. இதற்கு தகடூர் என்று இன்னொரு பெயர் உண்டு. இந்த ஊரை அதியமான் என்ற ராஜா ஆண்டு வந்தார். இந்த அரசருக்கு ஔவையார் நெல்லிக்கனி கொடுத்ததாக ஒரு சரித்திரம் உண்டு. இந்த ஊரில் ஒரு கோட்டைக் கோயில் உள்ளது. இங்கு ஒரு சுவாமியின் பிரகாரத்தில் நான்கு தூண்கள் உள்ளன. அந்த நான்கு தூண்களில் ஒரு தூணுக்கு மட்டும் சிறப்பு உண்டு. அது என்ன வென்றால் அந்தத் தூணுக்கு இடையே ஒரு பிளவு இருக்கிறது. அந்தப் பிளவு வழியே ஒரு பக்கம் நூலை நுழைத்து இன்னொரு பக்கமாக அதை வெளியே கொண்டு வரலாம். இதனால் அந்தத் தூணுக்கு 'தொங்கு தூண்' என்று பெயர். இந்தக் கோயில் ஸ்வாமி சந்நிதியிலிருந்து அதியமானின் கோட்டை வரை ஒரு சுரங்கப் பாதை உள்ளது. எங்கள் ஊரி லிருந்து 46 கி.மீ. தொலைவில் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி உள்ளது. நீங்கள் வந்து பாருங் களேன்.

– க. விவேக்,
7-ஆம் வகுப்பு,
ஸ்ரீ விஸ்வபாரதி மெட்ரிகுலேஷன்
பள்ளி,
தருமபுரி.

குறுக்கெழுத்துப் புதிர் விடை!



1 பி	ளி	று	ம்	■	ணி	2 ம	வி	3 க
த்	■	ற்	■	■	■	ற	■	ம
த	■	4 கா	டை	■	னை	5 தி	■	ல
ளை	6 மூ	■	7 கு	ள	8 வி	■	■	ம்
■	டி	■	■	■	■	■	தை	■
ளி	■	■	9 கோ	து	மை	■	10 பா	ய்
கா	■	ல்	11 கோ	■	12 தீ	வு	■	வா
க்	■	ய	■	■	■	த	■	வ்
13 த	ங்	14 க	ம்	■	ல்	15 க	ங்	16 செ



உங்களுக்குக் கதை, கவிதை, ஜோக் எழுதவும் படம் வரையவும் தெரியுமா? அப்படியென்றால் உங்கள் திறமைகளை வெளிக் கொண்டு வர கோகுலத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உடனே சந்தா செலுத்துங்கள். உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

பெயர் : ....

முகவரி : ....


....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097.

சார் தபால்



நெகிழ்ச்சியடைய வைத்தது!

சாப்பிட ஆவல்!

✉ உடனே மாம்பழம் வாங்கிச் சாப்பிட வேண்டும் என்று ஆவலைத் தூண்டியது மாம்பழம் பற்றிய கட்டுரையும் அட்டைப் படமும். ஆமணக்கு பற்றிய விடுகதை ஏற்கெனவே கோகுலத்தில் வெளியானதுதான். பெரிய அறிஞர்களுக்கே ஞாபக மறதி இருந்திருக்கிறது என்ற செய்தி ஆச்சரியத்தை அளித்தது. பரிசுக் கட்டுரை அருமை. சரியான தேர்வு.

– எஸ். துர்கா காத்யாயனி, எட்டாம் வகுப்பு, தூய அலாய்சியஸ் மகளிர் உயர்நிலைப் பள்ளி, தூத்துக்குடி.

சிறந்த தேர்வு!

✉ அழ. வள்ளியப்பா நினைவுப் பரிசுப் போட்டி முடிவுகளைக் கண்டேன். முதல் பரிசு பெற்ற கதை, கட்டுரை, கவிதை அனைத்தும் சரியான தேர்வு. புதுவை மற்றும் காரைக்காலிலிருந்து மொத்தம் ஐந்து படைப்புகள் பரிசு பெற்றதை பெருமையாகக் கருதுகிறேன்.

– பரிதி வேங்கடேசன், புதுவை.

நெகிழ்ச்சி...

✉ 'நகரும் வீடு' ஆமை பற்றிய தகவல்கள் பயனுள்ளதாய் இருந்தன. முதல் பரிசு பெற்ற 'இனி ஒரு தொண்டு செய்வோம்' கதை மிகவும் நெகிழ்ச்சியடைய வைத்து விட்டது!

– எஸ். எத்திராஜன், அய்யம்பாளையம், திருச்சி மாவட்டம்.

விளையும் பயிர்...

✉ 'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்' என்பதை சுகிசிவம் அவர்களின் குழந்தைப் பருவம் எடுத்துக் காட்டியது. எதிர்காலத்தில் எப்படிப்பட்டவராக விளங்க வேண்டும் என்பதை சிறு வயது சிந்தனைகளே நிர்ணயிக்கின்றன என்பது தெளிவாகப் புரிகிறது.

– தி.சு.பாலசுப்ரமணியன், திருவண்ணாதபுரம்; நெல்லை மாவட்டம்.

தவறு

✉ ஏப்ரல் இதழில் கேட்கட்டுமா டாக்டர் பகுதியில் 'வயிற்றுப் பகுதியை எவ்வாறு எக்ஸ்-ரே எடுப்பது?' என்று ஒரு கேள்வி. இதற்கான பதிலில் 'கோலோன் டோஸ்கோப்பி' என்று வந்துள்ளது. இது தவறு. 'கோலோனோஸ் கோப்பி' (colonoscopy) என்று வந்திருக்க வேண்டும்.

– டாக்டர். கு. கணேசன், ராஜபாளையம்.

த்ரில்

✉ 'வாய்க்குள் புகுந்த பாம்பு' படமும் கதையும் நன்றாக இருந்தன. அதே போல், 'மானைத் துரத்திய புலி' கதையைப் படிக்கும் போது நானும் அவர்களுடன் காட்டிற்குச் சென்று திரும்பியது போன்ற த்ரில்லான உணர்வு ஏற்பட்டது.

– வெ. பவானி, எட்டாம் வகுப்பு, உசிலம்பட்டி, தேனி மாவட்டம்.

நன்றி!

✉ எங்களுக்காக மாதந்தோறும் 100 ஜாமெட்ரி பாக்ஸ் பரிசாக அறிவித்து வரும் கோகுலத்துக்கு எங்கள் நன்றி. பரிசை அறிவித்ததோடு அல்லாமல் உண்மையிலேயே எங்களுக்குக் கிடைக்கச் செய்தது கோகுலமே! முதல் மாதம் சந்தேகத்துடன் நான்கு பேர் மட்டுமே அனுப்பியிருந்தோம். ஜாமெட்ரி பாக்ஸ் கிடைத்தவுடன் நிறைய பேரை எங்கள் பள்ளியிலிருந்து கலந்து கொள்ள வைத்தோம். இப்பொழுது கோகுலம் என்ற பத்திரிகையை அறியாதவர்களே எங்கள் பள்ளியில் இல்லை. தொடரட்டும் உங்கள் பணி.

– மாணவர்கள், நேருஜி நினைவுத் தொடக்கப் பள்ளி, திருச்சி.

எங்கள் ஊரில் நடந்தது!

சகாயம்?

எங்கள் தெருவுக்குப் புதிதாக ஒருவர் காய்கறிகளை விற்றுக் கொண்டு வந்தார். எங்கள் பக்கத்து வீட்டுக்காரர் நிறைய காய்கறிகள் வாங்கினார். பிறகு காய்கறிக்காரரிடம், "எவ்வளவுப்பா ஆச்சு?" என்றார். அவரும், "நாற்பது ரூபாய் ஐம்பது பைசாங்க" என்றார். "என்னப்பா 'சகாயம்'னு போர்டை மாட்டி வச்சிட்டு விலை அதிகம் சொல்றே. நான் இருபது ரூபாய்க்குள்தான் வரும்னு நினைச்சேன்'' என்றார் கோபத்துடன். "ஐயா, கோபப்படாதீங்க. சகாயம்ங்கிறது என்னோட பேர்தான். விலை சகாயம் பண்ணினா என் பிழைப்பு கெட்டுடும்" என்றார் காய்கறிக்காரர். பக்கத்து வீட்டுக்காரர் வேறு வழியின்றி பணத்தைக் கொடுத்தார். மறுநாள் முதல் காய்கறிக்காரரின் வண்டியில் சகாயம் என்ற போர்டு இல்லை.

– எஸ். ஆத்மகனி,
பெரியதச்சூர்.





பஸ் எப்ப வரும்?

நான், அம்மா, தம்பி மூவரும் வெளியூருக்குச் செல்ல பேருந்திற்காகக் காத்திருந்தோம். அம்மா பக்கத்திலிருந்த மெஸ்ஸிற்குச் சென்று, "பஸ் எப்ப வரும்?" என்று கேட்டார். "வருகிற நேரம்தான்!" என்றார்கள். நீண்ட நேரமாகியும் பஸ் வருவதாக இல்லை. அம்மா தம்பியிடம், "நீ போய் அந்த மெஸ்ஸில் பஸ் இப்போ வருமான்னு கேட்டுட்டு வா" என்று அனுப்பினார். தம்பி போன வேகத்தில் கோபத்துடன் திரும்பினான். என்னவென்று விசாரித்தோம். "பஸ் எப்ப வரும்னு மெஸ்ஸில் கேட்க, அவங்க ரெண்டு டோஸ் கொடுக்க, நான் பியூஸ் போன பல்பு போல் திரும்பி வந்தேன்" என்றான். எனக்கும் அம்மாவுக்கும் சிரிப்பை





அடக்க முடியவில்லை.

– ப. காளிதாசன், நீர்விளங்குளம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

ஜிக்குபுகுசாமி!

என் தங்கைக்குக் காதணி விழா. எங்கள் தூரத்து உறவினர் கூட வந்திருந்தார்கள். அவர்களில் ஒரு பாட்டி என்னை அழைத்துத் தாடையைப் பிடித்தபடி, "உன் பேர் என்னப்பா?" என்றார். நானும் என் பெயரைச் சொன்னேன். பட்டென தாடையிலிருந்து கையை எடுத்த பாட்டி, "இது என்னடா புதுப் பேரா இருக்கு, ஜிக்குபுகுசாமி" என்றார். அருகில் இருந்தவர்கள் சிரித்தனர். உடனே எனக்குக் கோபம் வந்துவிட்டது. "என் பேர் ஜி.குப்புசாமி. நீங்க தாடையைப் பிடித்து இழுக்கும் போது வார்த்தை மாறி கேட்டிருக்கு; நான் என்ன செய்ய?" என்றேன். பாட்டி சிரித்துக் கொண்டே மன்னிப்புக் கேட்டார். அன்றிலிருந்து என்னை ஜிக்குபுகுசாமி என்றே அழைக்கின்றனர்.

– ஜி. குப்புசாமி, நெய்வேலி.

யார் தாடி?

என் அப்பா தாடி வைத்திருப்பார். ஒருநாள் அப்பா கடைத்தெருவிற்குச் சென்றிருந்தார். அங்கு யதேச்சையாக என் தோழி அப்பாவைப் பார்த்திருக்கிறாள். உடனே என் அப்பாவிடம், "உம்முவின் டாடிதானே!" என்று கேட்டிருக்கிறாள். அப்பா, "இது உம்முவின் தாடி இல்லைம்மா. என்னோட தாடி" என்று தாடியைத் தடவியபடி சிரித்துக் கொண்டே கூறியிருக்கிறார். இதைக் கேட்ட தோழியின் அப்பாவும் சிரித்து விட்டாராம்!

– எம். எஸ். உம்முஅம்மாரா,
பனிரண்டாம் வகுப்பு, இமாம்
கஸ்ஸாலி மெட்ரிக் பள்ளி,
லால்பேட்டை.



செல்லுமா?

எங்களுக்கு மாமா என்றால் ரொம்பவும் பிடிக்கும். அன்று மாமா வீட்டிற்கு வந்திருந்தார். எங்களுடன் ஜாலியாகப் பேசிக் கொண்டிருக்கும் போது அம்மா தம்பியிடம் ஐந்து ரூபாய் தாளைக் கொடுத்து பால் வாங்கி வரச் சொன்னார். தாள் மிகவும் மோசமாக இருந்தது. செல்லாது என்று அவனுக்குத் தோன்றியது. மாமாவிடம் காட்டி, "இந்த நோட்டு செல்லுமா?" என்று கேட்டான். அவர் செல்லும் என்று தலையசைத்தார். "சரி மாமா. நீங்களே போய் பால் வாங்கிட்டு வந்துடுங்க" என்றானே பார்க்கலாம்! மாமா உள்பட அனைவரும் சிரித்தோம்.

– ப. ரவிச்சந்திரன், பென்னாகரம்,
தருமபுரி மாவட்டம்.



100 பேருக்கு ஜாமெட்ரி பாக்ஸ் பரிசு!

விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்ட வாசகர்களுக்கான போட்டி. இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும் முதல் 100 வாசகர்களுக்கு ஜாமெட்ரி பாக்ஸ் பரிசாக வழங்கவிருக்கிறோம். போட்டியில் கலந்து கொள்வதுடன் விரைவில் அனுப்பி வைக்கவும் வேண்டும்.

இந்த மாதப் போட்டி : இந்த ஆண்டு ஒலிம்பிக் போட்டி எங்கு நடைபெற உள்ளது?

1. ஹாங்காங், 2. சிட்னி.

விடையைத் தபால் கார்டில் எழுதி அனுப்புங்கள். இந்த மாதமும் அடுத்த மாதமும் மேற்கண்ட மாவட்டங்களுக்குப் போட்டி தொடரும். மற்ற மாவட்ட வாசகர்களுக்கும் இந்த அரிய வாய்ப்பு விரைவில் வர இருக்கிறது. காத்திருங்கள்! ஜாமெட்ரி பாக்ஸை வெல்லுங்கள்!



மேற்கு இந்தியத் தீவுகளின் வேகப் பந்து வீச்சாளர் கோர்ட்னி வால்ஷ். 37 வயதாகும் இவர் சிறந்த விளையாட்டு வீரர்.

சமீபத்தில் ஜிம்பாப்வே அணியுடன் டெஸ்ட் போட்டிகளில் விளையாடியது மேற்கு இந்தியத் தீவுகள் அணி.

இத் தொடரில்தான் வால்ஷ் உலகச் சாதனையை நிகழ்த்தினார். கிங்ஸ்டன் நகரில் நடைபெற்ற போட்டியில் 435 வது விக்கெட்டை வீழ்த்தினார். இது வால்ஷ்க்கு 114 வது டெஸ்ட் போட்டி.



• வால்ஷ்



• கபில் தேவ்

1984ஆம் ஆண்டு டெஸ்ட் போட்டியில் அறிமுகமான வால்ஷ் 16 ஆண்டுகளாக விளையாடி வருகிறார்.

434 விக்கெட்டுகள் எடுத்து ஆறு ஆண்டுகள் உலக சாதனையாளராக வலம் வந்த முன்னாள் கிரிக்கெட் வீரரும் இந்நாள் பயிற்சியாளருமான கபில் தேவ்வின் சாதனை வால்ஷால் முறியடிக்கப்பட்டுள்ளது. கபில்தேவ் 131 போட்டிகளில் விளையாடி 434 விக்கெட்டுகளை எட்டி நியூசிலாந்தின் ரிச்சர்ட்



வால்ஷ் உலக சாதனை!

ஹாட்லியின் சாதனையை முறியடித்தார். அதிக ஆண்டு சாதனையாளராக இருந்தவர் கபில்தேவ்தான்! இப்போது இரண்டாவது இடத்தில் இருக்கிறார் கபில்.

பாகிஸ்தானின் வாசிம் அக்ரம் 92 போட்டிகளில் விளையாடி 383 விக்கெட்டுகள் எடுத்து நான்காவது இடத்தில் இருக்கிறார்.

வால்ஷ் இது வரை இரண்டு முறை 10 விக்கெட்டுகளை எடுத்திருக்கிறார். ஒரு இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளை 17 முறை வீழ்த்தியுள்ளார்.

உலகமெங்கும் உள்ள கிரிக்கெட் ரசிகர்கள் வால்ஷிற்கு தங்கள் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர். நாமும் சாதனையாளரை வாழ்த்துவோம்!

● உலகக் கோப்பை வென்ற ஸ்டீவ் வாஹ் தலைமையிலான ஆஸ்திரேலிய அணி டெஸ்ட் போட்டிகளில் தொடர்ந்து வெற்றிகளைக் குவித்து வருகிறது. சமீபத்தில் ஜிம்பாப்வே, பாகிஸ்தான், இந்தியா, நியூசிலாந்து அணிகளுடன் விளையாடிய பத்து டெஸ்ட் போட்டிகளிலும் தொடர் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளது ஆஸ்திரேலிய அணி.

● தென் ஆப்பிரிக்காவுடன் நடந்த டெஸ்ட் போட்டிகளில் இந்தியா தோற்றது. ஆனால் புதிய கேப்டன் கங்குலி ஒரு தினப் போட்டிகளில் வெற்றிவாகை சூடி கோப்பையைக் கைப்பற்றினார். இந்த வெற்றி பாகிஸ்தான், தென் ஆப்பிரிக்காவுடன் விளையாடும் ஷார்ஜா போட்டிகளிலும் கிடைக்கும் என்று எதிர்பார்த்தவர்களுக்கு ஏமாற்றம்தான் கிட்டியது. இந்தியா இறுதி போட்டியில் நுழையும் வாய்ப்பை இழந்ததால் பாகிஸ்தானும் தென் ஆப்பிரிக்காவும் மோதின. இறுதிப் போட்டியில் பாகிஸ்தானுக்கு வெற்றி. வக்கார் யூனிஸ் ஆட்டநாயகன், தொடர் நாயகன், சிறந்த பந்துவீச்சாளர் விருதுகளைப் பெற்றார்.

முயல் வரையுங்கள்!

கீழே கொடுத்துள்ள குறிப்புகளின்படி எண்ணும் எழுத்தும் சேரும் இடத்தில் புள்ளி வைத்து விடுங்கள். பிறகு ஒவ்வொரு புள்ளியையும் கோட்டால் இணைத்தால் முயல் கிடைத்துவிடும்.

முதல் காது:M1→L2→L4→N6→N3→M1

இரண்டாவது காது:N5→O3→Q2→Q4→O5

தலை:N5→P5→R7→R8→P10→O10→M9


உடல் மற்றும் பின்னங் கால்: M5→L8→L9→J11→E19→E21→G24→P24→O23→L23→M22→M19→L18→K18→J19

முன் உடல் மற்றும் இரண்டாவது கால்: M19→O16→O19→N18→N17

மூன்றாவது கால்:L13→M15→O16→Q18→R18→Q16 →O15 →O14→N12

இதர உடல் பகுதி :O15→P13→P10

வால்:E21→D21→D22→E23→F23



நன்றி: லிட்டில் ஆர்க்

ஐஸ் கிரீம்!

மாஸிடோனியாவைச் சேர்ந்த மாவீரன் அலெக்ஸாண்டர் பழரசப் பிரியர். பழச் சாற்றினை பனிக்கட்டியினுள் குளிர வைத்து அருந்துவதில் இவருக்கு மிகுந்த விருப்பம். ஆனால் இங்கிலாந்தில் முதலாம் சார்லஸ் ஆண்ட சமயம் வாழ்ந்த பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த 'டெமார்கோ' என்ற சமையற்காரர்தான் உண்மையிலேயே ஐஸ்கிரீமைக் கண்டுபிடித்தவர். ஒருநாள் இவர் அரசருக்கு உறைந்த பால் போன்ற ஒருவித பாயஸப் பதார்த்தம் தயாரித்துப் பரிமாறினார். மிகவும் ரசித்து, விரும்பிச் சாப்பிட்ட அரசர் சார்லஸ், அப் பதார்த்தைத் தயாரித்து அளித்த 'டெமார்கோ'விற்கு வருடத்திற்கு 500 பவுண்டுகள் வெகுமதி வழங்கினார். கூடவே இப் பதார்த்தத்தை வசதி மிகுந்த செல்வந்தர்களுக்கு மட்டுமே தயாரித்து பரிமாற வேண்டும் என்றதோர் நிபந்தனையையும் விதித்தார்.

முதலாம் சார்லஸ் 1649ம் ஆண்டு ஜனவரி 30ந் தேதி தூக்கிலிடப்பட்ட பிறகு, அவரின் நிபந்தனையை மீறி 'டெமார்கோ' இப் பதார்த்தத்தை பொது விற்பனைக்கு வைக்க ஆரம்பித்தார். அதற்கு முன்பே இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளில் செல்வந்தர்களுக்கிடையே இவரின் தயாரிப்பு மிகப் பிரசித்தியடைந்திருந்தது. ஆனால், இப் பதார்த்த தயாரிப்பு மிகுந்த செலவைக் கொண்டதாக இருந்தது.


1846-ல் அமெரிக்காவைச் சேர்ந்த 'நான்சி ஜான்சன்' 'ஃப்ரீஸர்' - என்னும் உறைய வைக்கும் கருவியைக் கண்டுபிடித்தார். அதன் பிறகுதான் ஐஸ்கிரீம் தயாரிப்பும், அதன் விற்பனையும் வியாபார ரீதியில் அறிமுகமாகியது.

அமெரிக்காவில் மட்டும் 1900ம் வருடம் முதல், வருடத்திற்கு சுமார் ஐந்து மில்லியன் காலன் ஐஸ்கிரீம் தயாரிக்க ஆரம்பித்தனர். அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள செயிண்ட் லூயிஸில் 1904ம் ஆண்டு நடைபெற்ற உலகச் சந்தையில் மிகவும் தீவிர சிந்தனையைக் கொண்ட ஒருவர் ஐஸ்கிரீம் வைக்கக்கூடிய கூம்பு என்னும் பிஸ்கட்டைக் கண்டுபிடித்தார். பிறகுதான் 'கோன் ஐஸ்கிரீம்' பிரபலமானது.

இன்று 150க்கும் மேற்பட்ட விதவிதமான ஐஸ்கிரீம் உலகமெங்கும் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ஐஸ்கிரீமில் பெரும்பகுதி பாலும் பாலேடும்தான். சர்க்கரையும் மணம் ஊட்டும் பொருள்களும் உள்ளன. சில வகைகளில் பழத் துண்டுகள், முந்திரி, பாதாம் போன்ற பருப்பு வகைகளும் சேர்ப்பதுண்டு.

– எஸ். ராஜகோபால்,
திருச்சி.



கோகுலம் நியூஸ்



இன்சாட் 3பி

இந்திய விண்வெளி ஆய்வுக்கேந்திரம் தயாரித்த இன்சாட் 3பி செயற்கைக்கோள் பிரெஞ்சு கயானாவிலிருந்து மார்ச் 22ந் தேதி அதிகாலை விண்ணில் செலுத்தப்பட்டது. 150 கோடி ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்ட இன்சாட் 3பி பத்து ஆண்டுகள் வரை வானில் நிலை கொள்ளும். இதனால் இந்தியாவின் தொலைதொடர்பு வசதிகள் மேம்படும் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

அபாயம்!

உலகின் பனிப்படலம் உருகி வருகிறது. இமயமலைப் பகுதியிலும் பனிப்படலம் உருகி, நதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்படும். பிறகு அந்த நதிகள் சுருங்கி வறண்டு போய்விடும் அபாயம் உள்ளதாக வாஷிங்டன் சர்வதேச ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நேபாள நாட்டில் பனி உரைந்து கிடக்கும் ஏரிப் பகுதி உருகி, அண்மையில் வெள்ளம் மலைச் சரிவில் பெருக்கெடுத்து ஓடியது. இமயமலைப் பகுதியில் பனி உருகுகிறது என்பதற்கு இந்த ஏரியே உதாரணம் என்கிறது அந்த ஆய்வு. மக்கள் பெருக்கம், கட்டடங்கள் அதிகரிப்பு மரங்கள் வெட்டப்படுவது, கடல்நீரில் தொழிற்சாலைக் கழிவுகள் கலப்பது, காடுகள் பெரும் அளவில் அழிக்கப்படுவது, போன்ற காரணங்களால் மழை குறைந்து வெப்பம் அதிகரித்து விட்டது. இதன் காரணமாகவே பனி உறைந்த பகுதிகள் உருகுகின்றன. வெள்ள நீர் வடிந்ததும் வற்றாத ஜீவ நதிகள் கூட வறண்டு போய்விடும் என ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

விலை அதிகம்!

பறவைகளைப் பற்றிய ஆராய்ச்சியாளர் ஜான் ஜேம்ஸ் அமெரிக்காவைச் சேர்ந்தவர். இவர் உலகிலுள்ள பெரும்பான்மையான பறவைகளைப் பற்றி ஆராய்ந்து நான்கு தொகுப்புகள் கொண்ட புத்தகத்தை வெளியிட்டார். லண்டனில் இந்தப் புத்தகங்கள் ஏலம் விடப்பட்டபோது 38 கோடியே 28 லட்சம் ரூபாய் கொடுத்து ஒருவர் வாங்கினார்!

பாம்புப்படிமம்

சிறிய பின்னங்கால்களைக் கொண்ட அபூர்வ இன பாம்புப் படிமம் ஒன்று அமெரிக்காவில் உள்ள சிகாகோ அருங்காட்சியகத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. மூன்றடி நீளம் கொண்ட இந்தப் பாம்பு டைனோசர்கள் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்திருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். (படம்)

பூ பூக்கும் வாசம்...

கம்ப்யூட்டரில் பல வண்ண மலர்களைப் பார்த்து மகிழும் போது பூக்களின் வாசனையை உணர முடியவில்லையே என சிலர் நினைத்திருப்பார்கள். அப்படிபட்டவர்களுக்காகவே கொரிய நிறுவனம் ஒன்று திரையில் பூக்களின் படத்தைப் பார்க்கும் போதே நறுமணத்தையும் உணர்வதற்கு ஒரு கருவியை இணைத்திருக்கிறது. இனி திரையில் உங்களுக்குப் பிடித்த மலரை ரசிப்பதோடு மணத்தையும் அனுபவிக்கலாம்!

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-

நீங்க பார்க்கிற ஒவ்வொரு ரஸ்னா பேக்கையும் கட் பண்ணுங்க !!

Rasna Pranky Gear Contest

WIN 5,000 PRIZES!!

ஒவ்வொரு 32 கிளாஸ் ரஸ்னா பேக் உடனும் உங்களுக்கு இலவசமா 1 பிரான்கி கிடைக்கும் ! ஆனா, அதோட நீங்க வெல்லலாம் 5,000 பரிசுகளை.

பரிசுகள் : முதல் 5,000 சரியான நுழைவுகளுக்கு கிடைக்கும் முழு பிரான்கி கியர். (1 பிரான்கி பனியன், 1 பிரான்கி தொப்பி, 1 பிரான்கி அட்வென்சர் பெல்ட்.)

செய்யவேண்டியது : நீங்க செய்ய வேண்டியது எல்லாம் - ரஸ்னா பேக் பின்னாடி உள்ள பிரான்கி படங்களை கட் செய்யணும். 10 வித்தியாசமான பிரான்கி படங்களை சேகரிக்க அவைகளை கூப்பனோட தபால்ல அனுப்பணும்.

முந்துங்க : முதல்ல வர்ற 5,000 சரியான நுழைவுகளுக்கு மட்டும்தான் பிரான்கி கியர் கிடைக்கும். உங்க நண்பர் வட்டத்துல இருந்து முதன் முதல்ல பரிசு பெறுகிறவரா இருங்க, முந்துங்க ! நீங்க பார்க்கிற ஒவ்வொரு ரஸ்னா பேக்கையும் கட் பண்ணுங்க.





I am sending my collection of 10 different Pranky cutouts. Please send my Pranky Gear to:

Name:..Age:..............

Address:..

....

....Pin:..........................

State:.................................Tel:...............................

Mail to: **Marketing Unlimited!**
E/ 904, Sarjan Tower, Nr. Sunvilla Row House,
Gurukul Road, Ahmedabad - 380 052.

For more Pranky Fun visit: www.gogokid.com

Mudra:RASNA:99/486 Tam. FP

Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 * Registered as a Newspaper in Srilanka

CSC
COMPUTER EDUCATION



SUMMER HOLIDAY COURSES

Specially designed for 10 to 15 Years Old School Children

வாண்டுகளா ...,

COMPUTER FEST "2000" IS WAITING FOR YOU

Junior Diploma in Computer Science (JDCS)

Duration : 1 Month (3 hrs per Day)

Course Highlights

Level-I (Age 10-12 Years)

- Introduction To Computers
- Typing Skills
- Computer Languages
- Windows 95
- Paint Brush
- Internet
- Edutainment

Level-II (Age 13-15 Years)

- Introduction To Computers
- Computer Languages
- Windows 95
- Powerpoint & Logo
- Internet
- WordPad
- Edutainment

Contact Your Nearest CSC, 150 Centres All over South India